உ

திருச்சிற்றம்பல

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவத்தொண்டன்

(ஹரிஜன ஆலயப் பிரவேச மலர்)



வயாவிளான் — பலாலி

## சைவபரிபாலன சபையாரின்

இலவசச் சமய ஆண்டு வெளியீடு

சோபகிருது ௵ ஆனி ௴ ௨௮ ௳

(12-7-63)

"இலங்கைப் பணம்
இலங்கையிலேயே இருக்கட்டும்."

உயர்ந்த தரம்! குறைந்த விலை!

"ஆலோக"

# யாழ் நாட்டு எழுதுமை

★ ஊற்றுப்பேனை (பவுண்டின்) மை

★ இராசநீல (ரோயல் புளூ) மை

★ பச்சை நிற மை

★ கபில (வயலற்) நிற மை

★ அழியா நிற மைகள்

★ கருநீல (புளூபிளாக்) மை

★ சிவப்பு நிற மை

★ இறப்பர் முத்திரை கபில (வயலற்) நிற மை

இந்த மைகள் இலங்கைக் கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி நிலையத்தினரால் பரிசோதனை செய்யப்பட்டுச் சிறந்தவை என அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தயாரிப்பாளர்:

வயாவிளான் — பலாலி தெற்கு
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
வயாவிளான்.

உ

திருச்சிற்றம்பலம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவத்தொண்டன்

(ஹரிஜன ஆலயப் பிரவேச மலர்)



வயாவிளான் — பலாலி

## சைவபரிபாலன சபையாரின்

இலவசச் சமய ஆண்டு வெளியீடு

சோபகிருது ஹூ ஆனி மீ உஅ உ

(12 - 7 - 63)

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | ... | iii |
| 2. | எமது இறை வணக்கம் (செய்யுள்) | ... | ix |
| 3. | எமது பரம்பொருள் வணக்கம் (வசனம்) | ... | x |
| 4. | வாழ்த்துரைகள் | ... | 1 |
| 5. | இறைவனை யாவேமும் இறைஞ்ச உள் வாரீர்! | | 11 |
| 6. | சமய மறுமலர்ச்சி | ... | 13 |
| 7. | சைவத்தொண்டு | ... | 17 |
| 8. | நாவலர் வாழ்க்கை | ... | 19 |
| 9. | நடராஜ வடிவம் | ... | 32 |
| 10. | 'வாழ்வு' அளிக்கும் வாசகம் | ... | 39 |
| 11. | சிவநெறியின் மூல தன்மம் | ... | 43 |
| 12. | இலங்கையில் இந்துசமயம் | ... | 48 |
| 13. | ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் | ... | 52 |
| 14. | சமூகமும் சமயமும் | ... | 57 |
| 15. | சைவத்தொண்டு செய்மின் | ... | 59 |
| 16. | கலைப்புலவர் திரு. நவரத்தினம் அவர்களின் ஆத்மீக வாழ்க்கை | ... | 63 |
| 17. | சைவ சமயமும் சாதியும் | ... | 68 |
| 18. | ஒன்றே குலம் | ... | 77 |

உ

சிவமயம்

# முன்னுரை

மகாத்மா காந்தியடிகள் 1927 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண வாலிப மகாநாட்டாரின் அழைப்புக்கு இணங்கி வந்த காலத்தில் இளைஞராய் இருந்த யாங்கள் காந்தீய உணர்ச்சி கைவரப்பெற்று இந்தியச் செய்திகளை இனிது ஆர்வத்துடன் வாசித்துவந்து, பின்னர் வாலிபப்பருவம் அடைந்த காலம்தொட்டு, பலவகையான நன்மை விருத்திச் சங்கங்களைப் புதிதாக நிறுவியும், கிராமச் சங்கம்போன்ற பழைய சங்கங்களிற் சேர்ந்தும், எமது, நாடு, சமூகம், மொழி, சமயம், முதலியன முன்னேறக் குருவிக்குத் தக்க ராககூரம் என்ற வகையில், எங்கள் தகுதிக்கேற்ப, எம்மாலியன்ற சேவை இடையருது செய்துவருகின்ருேம். உதாரணமாக நாங்கள் எமது பகுதியில் புதியதெருக்கள், ஒழுங்கைகள் திறந்தோம்; மதகுகள் அமைத்தோம்; நிழல்மரங்கள் நாட்டினேம்; சுமைதாங்கிகள் கட்டினேம்; சந்தைகள் அமைத்தோம்; வாசிகசாலைகள் நிறுவினேம்; விளையாட்டு முன்றில்கள் உண்டு பண்ணினேம்; திருமுக நிலையம் திறப்பித்தோம்; மருந்துச் சாலை வந்திடச்செய்தோம்; கமக்காரருக்குக் கைங்கரியங்கள் செய்தோம்; கோயில்கள் புதுக்கினேம்; சைவ வித்தியாசாலை ஸ்தாபித்தோம்; மத்திய கல்லூரி நிறுவுவித்தோம்; ஆசிரியகலாசாலை கொணர்வித்தோம்; இராணுவ வானூர்தி நிலையத்தைப் பொதுஜன உபயோகத்துக்குப் பயன்படச்செய்தோம்; இறுதியாக மின்சக்தி வசதிகளும் உண்டுபண்ணினேம். இவற்ருலெல்லாம் எமது பகுதி முன்னையைக்காட்டிலும் இப்பொழுது எவ்வளவோ முன்னேறியிருக்கின்றது.

இங்ஙனமெல்லாம் எமது பகுதி முன்னேறியும், ஆங்கு வாழ்ந்திடும் சாதாரண மனிதன் உண்மையிற் திருந்தி விளங்கிடக் காண்கிலம். பண்பாட்டைப் பொறுத்தவரையில் அவன் முன்னேறுவதற்குப் பதிலாகப் பின்னேறியிருக்கின்றான் என்றே கூறவேண்டியிருக்கின்றது. முன்னாளில் யாமெல்லாம் கண்கூடாகக் கண்ட கடவுள்பக்தி, அன்பு, சாந்தம், தன்னடக்கம், பொறை, நேர்மை, நீதி, சமாதானப்பிரியம், பெரியோரைப் பேணல், பொதுநலம் போற்றல் ஆதியாம் நல்லியல்புகள் கொஞ்சம் கொஞ்சமாக நாளாவட்டத்திற் குன்றி, இன்னாளில் நாஸ்திகம், ஆணவம், தன்னலம், லோபித்தனம், வஞ்சகம், பொறாமை, குரோதம், பகை, வம்புத்தனம் முதலிய தீக்குணங்கள் தலையெடுத்துள்ளன. முன்னையைக் காட்டிலும் இப்போது மதுபானமும், சண்டித்தனமும், மற்றும் சட்டவிரோதமான செயல்களும் அதிகரித்துள்ளன. தன்னலம் குறைந்தாலொழிய மிருக சுபாவம் மனுஷ சுபாவமாகவும், மனிதத் தன்மை தெய்வத் தன்மையாகவும் திருந்திப் பரிணமிக்காது என்பதைக் கல்வியறிவு இல்லாத பாமர மக்களுக்கு மாத்திரமன்றிக் கற்றறிந்த உத்தியோகத்தருக்கும் யாம் அடிக்கடி இடித்துக் கூறவேண்டி இருக்கின்றது. மாணவருக்கெல்லாம் முன்மாதிரியாகவும், ஆசாரத்துக்கெல்லாம் சிறந்த இலக்கியமாகவும் திகழவேண்டிய ஆசிரியர்கள் இற்றைஞான்று கள்ளிற் தொடங்கி இறுதியில் குருநிந்தைக்கு ஆளாகின்றனர். இவற்றுக்கெல்லாம் காரணம் சமய வாழ்வு சீர்குன்றியமையே.

மேலேகாட்டியுள்ள குறைபாடுகள் எமது பகுதியில் மாத்திரமன்றிப் பொதுவாக மற்றைய பகுதிகளிலும் காணப்படுகின்றன எனச் சில போலி அபிமானிகள் கூறும் வீண்சமாதானத்தை நாங்கள் செவிமடுத்து வாளாவிருக்காது, சமய அடிப்படையில் எம்மையும், எம்மனோரையும் சீர்திருத்திச் சமயத்துறையில் முன்னேற்றம்காண, வயாவிளான்—பலாலி சைவபரிபாலன சபை என்னுமோர் இயக்கத்தை, சரித்திரகாலத் தமிழ்ப் புரவலரொப்ப தன்னால் இயன்றமட்டும் சைவமும் தமிழும் வளர்த்த முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட அதிபர், உயர்திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்களின் ஆட்சிக்காலத்தில், **1959** ஆம் ஆண்டில், சித்திரா பூரணைத் தினத்தில், தென்பலவைச் சக்திகோவிற் சந்நிதானத்தில், போஷகர், திரு. சி. கதிரிப்பிள்ளை அவர்களின் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்தோம். இச்சபை தமிழ் நாட்டில் சைவம் வளர்க்கும் ஆதினங்களின் அடிப்படை நோக்கங்களைத்தழுவி, சமய தீட்சை, சமயவகுப்பு, சமயப்பிரசங்கம், சமய வெளியீடு

குருபூசை, புராணபடனம், கூட்டுப்பிரார்த்தனை (வசனம்), கூட்டுப்பஜனை (செய்யுள்) முதலியனமூலம் சைவசமயத்தை வளர்க்கத் திட்டமிட்டு, தனது குறைந்த பொருள் வருவாய்க்கு இணங்கத் தன்னால் ஆகக்கூடிய தொண்டு தளராமல் இனிது செய்து வருகின்றது. இதுவரை பாங்கள், எழுத வாசிக்கத் தெரிந்தவர்களுக்கு மாத்திரமன்றி, எழுத்தறிவில்லாத மற்றைய மக்களுக்கும் பிரசங்கங்கள் பயன்படுமாதலின் அப்பிரசங்கங்கள் செய்விப்பதுடனேயே பெரும்பாலும் நின்றுவிட்டோம்.

இப்போது, சொற்பொழிவுகளுடன் பத்திரிகை, கைநூல், துண்டுப்பிரசுரம் முதலிய சமய வெளியீடுகளும் அத்தியாவசியம் தேவையென்பதை உணர்ந்துகொண்டோம். முதலாவதாக, பேசுவோனின் சொல்வன்மைக் குறைவாலும், கேட்போனின் விளக்கக் குறைவாலும், பிறசிந்தனையாலும், பிறர் குழப்பத்தாலும் பேசப்படும் பொருளில் ஒருபாகமே உண்மையில் கிரகிக்கப்படும்; அக்குறித்தபாகம்தானும் நாளாவட்டத்தில் மறதியின்பாற்பட்டு ஒழிந்துபோய்விடும். இரண்டாவதாக, எழுத்துமூலம் அறியப்படும்பொருள் ஆறுதலாக விளங்கிக் கிரகித்துக்கொள்ளக்கூடியது; மறதிஏற்படும் காலத்தில் திரும்பவும் பார்த்துப் பார்த்துப் புதுப்பிக்கக்கூடியது; எவ்விடத்தவருக்கும் எக்காலத்தவருக்கும் பயனளிக்கவல்லது. ஆகவே, பிரதானமான சமயவிஷயங்களையிட்டுப் பேரறிஞர்களைக் கொண்டு கட்டுரைகள் வரைவித்து, அவற்றைச் சஞ்சிகை வடிவிற் தொகுத்து, ''சைவத் தொண்டன்'' என்னும் பெயருடன் ஆண்டுக்கொருமுறை பிரசுரிக்கவும், அவ்வெளியீட்டை இலவசமாக உள்ளூரவர்களுக்கு வழங்கவும் ''யான்பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக.'' என்னும் முறையில் பிற ஊர்களிலுள்ள வாசிகசாலைகள், சனசமூகநிலையங்கள், கிராமமுன்னேற்றச் சங்கங்கள், கிராமச்சபைகள், கலாசாலைகள் முதலியவற்றுக்கு அனுப்பவும் தீர்மானித்துள்ளோம்.

இந்த ஈழநாட்டில் வாழும் மக்களுள், புத்தசமயிகளுக்குக் குறைந்தபட்சம் பூரணைத்தினங்களிலும், மகம்மதியருக்கு வெள்ளிக்கிழமைதோறும், கிறிஸ்தவருக்கு ஞாயிற்றுக்கிழமைதோறும் அவரவர் ஆலயங்களில், அவ்வச்சமயக் குருமார்களால் சமயம் போதிக்கப்பட, இந்துக்களுக்கு மாத்திரம் இத்தகைய சமய ஞானம் புகட்டப்படுகின்றிலது. இக்குறையை நிவிர்த்திசெய்யும் பொருட்டு, முதலாவதாக மணியடித்துக் கர்ப்பூரதீபம், பஞ்ச ஆலாத்தி காட்டக் கடவுளை வணங்கும் இப்போதைய வழிபாட்டு முறையுடன் பிரமசமாஜ ஸ்தாபகர், இராஜாராம் மோகன்ரேய்

வியந்து பாராட்டும் பிரசங்கம், கீர்த்தனை, ஜெபம் என்றும் மூன்றும் அடங்கிய பாதிரிக் கிறிஸ்தவ வேதக் கடவுள் வழிபாட்டு முறையையும் அனுஷ்டித்தல் மிகவும் விரும்பத் தக்கது. இரண்டாவதாக, எமது சைவாலயங்களில் உள்ள பூசகர்கள் யாவரும் குருமாராகக் கடமையாற்றத் தக்க சமயஞானமும் ஒழுக்க நலனும் உடையவர்களாகக் காணப்படுகின்றிலர். இக்குறையை நீக்கிடத் திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபையார் குருகுலம் (சமயக் கல்லூரி) ஒன்று நடாத்துவது பெரிதும் போற்றத்தக்க விஷயமாகும். அக்கல்லூரியினின்று வெளியேறும் குருக்கள்மாருக்குப் போதிய வேதனம் கொடுத்துக் கௌரவித்து ஊக்கமளிக்கக் கிறிஸ்தவ திருச்சபைகளைப் போலச் சைவர்களாகிய நாமும் அடியார் திருக்கூட்டங்கள் அமைத்துத் திறம்படச் செயலாற்றுதல் வேண்டும்.

ஆகவே, எமது பாரம்பரிய முறைப்படி இறைவனை வணங்கச் சிறு நடராஜ ஆலயம் ஒன்றும், மேற்கூறிய பிரமசமாஜ முறைப்படிக் கடவுளைத் தொழவும், மேற்சொல்லிய சமயதீட்சை, சமயவகுப்பு, சமயப்பிரசங்கம், குருபூஜை, புராணபடனம், கூட்டுப்பிரார்த்தனை, கூட்டுப்பஜனை முதலிய நிகழ்த்தவும் பாரிய மண்டபம் ஒன்றும் அடங்கிய நடராஜ மடாலயம் ஒன்று நிறுவச் சென்ற சில ஆண்டுகளாக நாம் மிகவும் முயன்று வருகின்றோம். ஆதியில், மேற்படி மடாலயம் எமது ஊரிலுள்ள பிள்ளையார் கோயிலுக்கு மாறுகத் தாபிக்கப்படுகின்றதெனச் சிலர் பிழையாக எண்ணி எம்மைப் பெலமாக எதிர்த்தனர். கற்றறிந்த அன்பர் சிலர்தாமும் நாம் அந்நாளில் செய்வித்துக்கொண்டிருந்த நடராஜ விக்கிரகத்தை ஷெ பிள்ளையார் கோவிலிற் சபையொன்று அமைத்து எழுந்தருளச் செய்தல் மிகவும் விரும்பற்பாலதெனப் புத்திமதி கூறினர். இந்த ஆலோசனையைக் காலஞ்சென்ற கலைப்புலவர், உயர்திரு. க. நவரத்தினம் அவர்களுக்கும், அந்நாளைய மாவட்ட அதிபர் உயர்திரு. ம. ஸ்ரீ காந்தா அவர்களுக்கும், தவப்பெருந்திரு குன்றக் குடி அடிகளுக்கும் சமர்ப்பித்து அவர்களின் அபிப்பிராயத்தை உசாவிய போது, அவர்கள் அனைவரும் ஷெ புத்திமதிக்கிணங்க நாங்கள் செய்து கொள்வதாயின், எமது ஆதி மடாலய ஸ்தாபிதத் தீர்மானம் கைவிடப்பட வேண்டிவரும் என்றும், உண்மையில் நாம் அமைக்கத் துணிந்த மடாலயம்போல ஒவ்வோர் ஊரிலும் ஒரு மடாலயம் நிறுவப் பெறுதல் மிகவும் வேண்டாற்பாலதென்றும், முன்வைத்த காலைப் பின்வையாமல், யாம் செய்யத் துணிந்த திருத்தொண்டை இறைவனுக்கு அர்ப்பணம் செய்து, மனம்

சோராது, தளரா ஊக்கத்துடன் தீவிரமாகச் செயலாற்றினால், இறைவன் திருவருளால் அஃது இனிது நிறைவேறுமென்றும் நல்லாலோசனை கூறினர். ஆகவே, பொதுஜனங்களின் பொருளுதவி போதியதாயில்லையெனக் கண்டும் தளர்வுறாது, நானாவித கஷ்டங்களுக்கிடையே, பெருந்தொகைப் பணம் கடன்பட்டும், அரசினர் தந்த சிறு நன்கொடையைக் கொண்டும் நிர்த்த மண்டபம் தொடங்கித் தரிசன மண்டபம் வரை ஷ்ரீ நடராஜ ஆலயத்தைச் சரிவரப் பூர்த்தி செய்துள்ளோம். இப்போது ஸ்தம்ப மண்டப நிர்மாணம் ஆரம்பமாகித் தூண் வேலை முற்றுறுகின்றது.

மேற் சொல்லிய நடராஜர் ஆலயம் இப்போது மக்கள் யாவரினதும் கவனத்தை ஈர்த்து மிக்க எழில் கொழித்து விளங்குகின்றது. எமது போஷகர் உயர்திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்களின் நித்திய தூண்டுதல் காரணமாகக் கோண்டாவில் சிற்ப வல்லுநர் திரு. நா. தங்கவேலு ஆச்சாரியார் கோலமுறச் செய்து தந்த சித்திரப் பதுமங்களுள் கல்லால மரத்தின்கீழ் ஜனகர் முதலான நான்கு முனிவர்களுக்குப் பதிபசுபாச விளக்கம் செய்த தக்ஷிணாமூர்த்தி சொரூபமும், திருப்பெருந்துறையில் குருமூர்த்தியாக வந்து மாணிக்கவாசகருக்கு ஸ்ரீபஞ்சாட்சர மகிமையை விளக்கியருளிய சிவபெருமான் வடிவமும், ஓங்காரப் பிரணவப்பொருளைச் சிவபிரானுக்கு உபதேசித்த முருகக் கடவுளின் திருவுருவமும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. இவை எமது புதிய ஸ்தாபனம் கடவுள் வழிபாட்டுக்கு மாத்திரமன்றிச் சமயபோதனைக்குமுரியதென்பதை நன்கு எடுத்து விளக்குகின்றன.

இவ்வாலயம் ஹரிஜனங்களுட்படத் தூய்மை, ஒழுக்கம், பக்தி என்னும் மூன்று முக்கிய நிபந்தனைகளையும் திருப்திப்படுத்தும் சகல சைவசமயிகட்கும் இன்றைய தினம் திறந்து வைக்கப்பெறும். இச்சரித்திரப் பெருமை வாய்ந்த முன்னேற்ற நிகழ்ச்சியை முன்னிட்டு, யாம் வெளியிடத் துணிந்த "சைவத் தொண்டன்" என்னும் சமய வெளியீட்டின் முதலாம் மலரை ஹரிஜன ஆலயப் பிரவேச மலராகப் பிரசுரிக்கின்றோம். அம்மலராக மாத்திரமன்றி, இம்மலர் காலம் சென்ற எமது போஷகர், கலைப்புலவர், திரு. க. நவரத்தினம் அவர்களின் நினைவு மலராகவும், நமது நடராஜர் ஆலயக் கும்பாபிஷேகத் திறப்புவிழா மலராகவும் ஏககாலத்தில் இனிது நிகழ்வதை எமது வாசக நேயர்கள் கண்டு இன்புறுவார்களென எண்ணுகின்றோம்.

இவ்வெளியீட்டுக்குச் செய்திகளும் கட்டுரைகளும் தந்துத விய சைவப்பெருமக்கள் அனைவருக்கும், அதற்கு மற்றும் பலவகை களிலும் உதவிபுரிந்த புருஷோத்தமர்கள் யாவருக்கும், அதனைச் சொற்பகாலத்தில் செவ்வனே அச்சிட்டுதவிய யாழ்ப்பாணம் கலைவாணி அச்சகத்தாருக்கும், எழுத்துப் பிரதிகளுடன் சர வைத் தாள்களை ஒப்பு நோக்கிப் பிழைகளையெல்லாம் திருத்தி யமைத்த எமது உடன்தொண்டன் திரு. செ. சின்னத்துரை அவர் கட்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளு கின்றோம்.

வாழிய சைவம்! வாழ்க நம் மடாலயம்!!

இங்ஙனம்,

வயாவிளான்—பலாலி

**சைவ பரிபாலன சபையினர்.**

பலாலி தெற்கு,

**வயாவிளான்.**

**12 - 7 - 63**

○ ○ ○

# எமது இறை வணக்கம்

## (செய்யுள்)

திருச்சிற்றம்பலம்

குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மாநிலத்தே.

வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப்பெரிதும் ஆட்கொண்டென் பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகும் தொழும்தில்லை அம்பலத்தே கண்டேனே!

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே!
சித்தத்துட் தித்திக்குந் தேனே!
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா(று) விளம்பே.

ஆதியாய் நடுவு மாகி அளவிலா அளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா ஏக மாகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

---

# எமது பரம்பொருள் வணக்கம்

## (வசனம்)

இயற்றியவர்: பகவான் சிவானந்தர்
தமிழாக்கம்: சுவாமி இராமானந்தா

எங்கும் நீக்கமற நிறைவாய்
எல்லாம் வல்லவனாய், முற்றறிவினனாய்,
எல்லா உயிர்களிலும் பொலிந்து நிற்பவனாய்,
உள்ள சச்சிதானந்தப் பரம்பொருளே!
உமக்குச் சாஷ்டாங்க வணக்கம்!!

**கருணையும் அன்பும் நிறைந்த முழுமுதற் பொருளே!**

நன்கு அறியும் உள்ளமும், சமநோக்கும்,
சமநிலை மனமும், நன்னம்பிக்கையும்,
பக்தியும், ஞானமும்,
ஆசைகளை அடக்கி மனதை ஆண்டிட
ஆன்மிக பலமும், ஆற்றலும் தந்து அருள்வாயாக!

**வணங்கத் தகுந்த இறைவா!**

ஆணவம், காமம், குரோதம், பேராசை, துவேஷம்,
எம்பால் வராதொழியவும்,
தெய்வீக சம்பத்துக்கள் எம் உள்ளத்தில்
நிரம்பிடவும் அருள் செய்வாயாக!


**தனிப்பெருந் தலைவ!**

உலகில் காணும் நாமரூபங்கள் அனைத்திலும்
உம்மையே கண்டு உமக்கு நிலைத்த தொண்டாற்றிடவும்
உம்மையே மறவாது சந்ததம் நினது புகழ் பாடிடவும்,
எப்பொழுதும் நின்நாமம் எம்நாவில் ஒலித்திடவும்,
என்றென்றும் உம்முளே நிலைபெற்று நிற்கவும்,
திருவுளங் கொண் டருளுவாயே!!!

உ

சிவமயம்

# சமர்ப்பணம்



இவ்வெளியீடு எமது சமயம், மொழி, கலை, கலாச்சாரம் முதலியவற்றின் வளர்ச்சி கருதி இனிது உழைத்தவரும், ஹரிஜன ஆலயப்பிரவேச விஷயத்தில் பெரிதும் ஆர்வத்துடன் பாடுபட்டவரும், எமது சைவபரிபாலன சபைப்போஷகருள் ஒருவராய் இருந்து நடராஜ மடாலய நிர்மாண கருமத்திலும், நடராஜ விக்கிரக அமைப்பு விஷயத்திலும் எமக்குஉசாத்துணையாய்ப் பேருதவி புரிந்தவரும் ஆகிய கலைப்புலவர் திரு. க. நவரத்தினம் அவர்களுக்குக் கைம்மாருக நன்றியறிதலுடனும் அதிவிநயத்துடனும் அர்ப்பணம் செய்யப்படுகின்றது.

# வாழ்த்துச் செய்திகள்

பிராமணருட் பிராமணரான

முன்னாள் இந்திய இராஜப்பிரதிநிதி

## ஸ்ரீ C. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள்

இலங்கை இந்துக்கள் ஹரிஜன வகுப்புகளிலிருந்து வரும் அடியார்களுக்குத் தங்கள் ஆலயங்களை எல்லாம் திறந்துவைக்கும் விஷயத்தில் இன்னும் காலந்தாழ்த்துதல் கூடாது. கோயில்களின் உள் ஒழுக்க விதிகளை அங்கீகரிக்கும் எந்த இந்துவும் வெளியே நிற்பாட்டப்படக்கூடாது.

சென்னை 17 — C. இராஜகோபாலாச்சாரியார்

முன்னாள் திருவாங்கூர் சமஸ்தானச் சிரேஷ்ட மந்திரி

## சேர். C. P. இராமசுவாமி ஐயர் அவர்கள்

தங்கள் கடிதம் கிடைத்தது. ஹரிஜன ஆலயப் பிரவேச மலர் ஒன்று பிரசுரிக்கத் தீர்மானித்திருப்பதுபற்றி எனது மகிழ்ச்சியைத் தங்கள் சபைக்குத் தெரிவிக்கின்றேன்.

திருவாங்கூர் சமஸ்தானத்து முதல் மந்திரியாக நான் இருந்த காலத்தில் என் நல்லதிர்ஷ்டவசமாக ஹரிஜனங்களுக்கு ஆலயங்களை இந்தியாவில் நானே முதன்முதலாகத் திறந்து வைத்தேன். எனவே, நீங்கள் இப்போதெடுக்கும் பிரயத்தனம் எனக்கு ஆனந்தத்தை அளிக்கின்றது. உங்கள் முயற்சி சம்பூரண சித்தி அடைவதாக.

தில்லையில்,
உதகமண்டலம்.

தங்கள் விசுவாசமுள்ள
C. P. இராமசுவாமி ஐயர்

## இந்திய இராஷ்டிர[illegible]

## சேர். ச. இராதாக்கிருஷ்ணன் அவர்கள்

உங்கள் கடிதத்துக்கு நன்றி. ஹரிஜன ஆலயப் பிரவேசம் நல்ல ஒரு விஷயம். அக்கருமத்தில் நீங்கள் வெற்றியடைய வேண்டுமென நான் விரும்புகின்றேன்.

புதுத்தில்லி,
இந்தியா.

தங்கள் விசுவாசமுள்ள
**ச. இராதாக்கிருஷ்ணன்**

## திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபைத் தலைவர்

## சேர். க. வைத்தியநாதன் அவர்கள்

"சைவ சமயமே சமயம்; அதுவே ஆதியில் இறைவனால் அருளப்பட்டது; அன்பே மயமானது; அதைக் காட்டிலும் சிறந்தது வேறில்லை'' என்று இன்னவாறெல்லாம் பெருமைப்படும் சைவ சமயிகளின் உண்மையான சமயப் பண்பாட்டுநிலை, அவர்கள் அனைவரும் அச்சைவத்தைச் சார்ந்த சிவத்தை எங்ஙனம் வழிபடுகிறார்கள் என்பதன் மூலம் ஆராய்ந்து அனுமானிக்கற்பாலதாகும். அதிர்ஷ்டவசமாய் இதில் கருத்து மாறுபாடில்லையெனினும் வழிபடுபவர்களிடம் வேறுபாடுகள் இருந்து வருவதை நாம் அறியக்கூடியதாய் இருக்கின்றது.

அனுட்டான ரீதியான வழிபாடுதான் தொன்மையானதும் முறைமையானதும் என்பது ஆகமத்தினதும் அறிஞர் பலரதும் முடிபு. அனுட்டான ரீதியில் வழிபடுதற்கு முதலில் மனிதன் தனக்குத்தானே ஆத்மசோதனை செய்துகொள்ள வேண்டியவன் ஆகின்றான். வழிபாட்டிற்கு நிபந்தனைகள் எதுவும் இருப்பதாகச் சைவக்கோட்பாடுகளிலோ, நுண்ணறிவாளரின் ஆய்விலோ காணக்கூடியதாக இல்லை. பஞ்ச இந்திரியங்களின் போக்கில் இட்டுச் செல்லப்படும் ஆத்மாவைப் பெலப்படுத்துவதற்குரிய பாவனா இடமே ஆலயம். இதை விரும்பும் ஒவ்வொருவரும் ஆலயத்திற்குப் போய் வழிபட உரிமை உண்டு. இதைவிட உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற நிலையில் வழிபாட்டுரிமை இருப்பதாகக் கூறுவதற்கில்லை. அங்ஙனமெனின் சமுதாயத்தில் உள்ள ஏனைய

கட்டுப்பாடுகள் யாவும் இடைக்காலத்திற் தோன்றியவை என்பது மறுக்கமுடியாத உண்மை. அங்ஙனமெனின் ஒருசிலருக்கு ஆலய வழிபாட்டுரிமை எதனால் மறுக்கப்படுகிறது என்பதை ஆராயின், ஒழுக்கம், தூய்மை, நிரம்பிய சைவ அறிவு இவற்றின் பற்றுக்குறை ஒரு காரணமாக இருக்கலாம். ஆகவே, இக்குறை நீங்கப்பெற்று, ஒவ்வொருவரும் அனுட்டான ரீதியான வழிபாட்டை மேற்கொண்டு, அன்பின்வழி நடந்தால், அங்கேயே சிவவழிபாடு, சிவப்பணி இவற்றின் பெருமை துலங்கும்.

இந்தப் புனித தொண்டில் வயாவிளான்—பலாலி சைவ பரிபாலனசபை, விசேடமாகச் சபைத்தலைவர், வழக்கறிஞர் திரு. வ. இராசநாயகம் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள் என அறிந்து, மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். அவர்கள் தொண்டு மென்மேலும் வளர்க!

"கொட்டில்", **க. வைத்தியநாதன்**
திருக்கேதீஸ்வரம்.

முன்னாள் மானிப்பாய் இந்துக்கல்லூரி மனேஜர்

## சேர். ச. பரராஜசிங்கம் அவர்கள்

தங்கள் பகுதியில் வாழும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரை உயர்த்தி முன்னேற்ற முயலும் தங்கள் வயாவிளான்—பலாலி சைவ பரிபாலன சபையை நான் பெரிதும் பாராட்டுகின்றேன். சமய சமூகத் துறைகளில் தீண்டாமையை அறவே ஒழிக்க நீங்கள் எடுக்கும் முயற்சி யாவும் சம்பூரண வெற்றியடைக.

தங்கள் விசுவாசமுள்ள
ச. பரராஜசிங்கம்

மலர்வீதி,
கொழும்பு 7

சைவசித்தாந்தக் கலாநிதி

## திரு. வ. பொன்னையா அவர்கள்

# சைவத் தொண்டுகளுட் சிறந்தது தீண்டாமை ஒழிப்பதே

சைவசித்தாந்தத்தின்படி குணங்குறிகள் யாதும் இல்லாத இறைவனுக்கு அவற்றைக் கற்பித்து வழிபாடு செய்தற் பொருட்டு எடுக்கப்பட்டனவே கோயில்கள். நாழிகை என்னும் அளவைக்கு நிறையுண்மையின்மைள் கூறப்படாமைபோல உருவம், அருவம் என்பனவற்றிற்கு அருகதை இல்லாத இறைவனுக்கு உருவம் கொடுத்து உடல்பற்றி வழிபாடு இயற்றுவதே சரியை; உருவமும் அருவமும் கற்பித்து உடற்றொழில் உளத்தொழில்களால் வழிபடுவது கிரியை; அருவத்திருமேனியை மேலேற்றி உளத்தொழின் மாத்திரையால் வழிபடுவது யோகம்; அடைகள் யாதுமில்லாத இறைவனுக்குச் சத்து, சித்து, ஆனந்தம் என்னும் அடைகளைக்கண்டு உடற்றொழில், உளத்தொழில் என்னும் இவற்றைக் கைவிட்டுக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்னும் அறிவுத் தொழில்களால் வழிபடுவது ஞானம். சரியை கிரியை, யோகம், ஞானம் என்னும் வழிபடு முறைகள் நான்கினுள் சரியை, கிரியை என்னும் இரண்டுக்கும் கோயில்கள் வேண்டப்படுவன. இவ்வழிபாடுகள் நான்கும் எல்லாச் சாதியினர்க்கும் பிறப்புரிமையாகும். எனின் தீண்டாதாரெனக் கருதப்படுபவர்க்கும் அது உரித்தாகும் என்பது வெள்ளிடைமலை. அன்றர் உயர்சாதியினரெனப்படுவோர் பிரவேசிக்கும் ஆலயங்களுட் புகுந்து வழிபாடு இயற்றல் ஆகாது என்பது பரிவொடுபடாத செய்தியாகும். பகுத்தறிவில்லாத ஆடுமாடுகள் ஆலயப் பிரவேசம் செய்ய விடுபவர் பகுத்தறிவுள்ள மக்களுள் ஓர் இனத்தை விளக்குவது அறியாமையின் விளைவேயாம்.

கொக்குவில்

வ. பொன்னையா

### உயர்தரநீதிமன்ற நீதியரசர்

## கனம் பொ. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள்

இறைவன் சிருஷ்டியில் மனிதர் அனைவரும் சமத்துவர் அங்ஙனமிருந்தும் சில மக்கட் பிரிவினர் தங்களைக் காட்டிலும் அதிர்ஷ்டம் குறைந்த சகோதரர்களைக் கடவுள் வழிபாட்டுக்குரிய ஸ்தலங்களுட் புகாது வெளியே நிறுத்தி வந்திருக்கின்றனர். இது சர்வ தயாபரனுக்கு உகக்காத செயலாகும்.

இந்தியாவில் எல்லாக் கோயில்களும் சகல இந்து மக்களுக்கும் திறந்துவைக்கப்பட்டுள்ளன.

**1956**ஆம் ஆண்டு ஆடிமாதம் **9**ஆந் திகதி பொன்னெழுத்துக்களிற் பொறிக்கப்பட வேண்டிய தினமாகும். காரணம், அன்றையதினம் முக்கியத்துவம் வாய்ந்த மூன்று கோயில்கள்—நல்லூர்க் கந்தசுவாமி கோயில், வண்ணைப் பெருமாள்கோயில் வண்ணைச் சிவன்கோயில்—ஹரிஜனங்கள் எனப்படுவோர் உட்பட எல்லவருக்கும் திறந்துவைக்கப்பட்டன. அதற்கடுத்த சில நாட்களுள் யாழ்ப்பாண நகரிலுள்ள இன்னும் பத்து ஆலயங்கள் வரையில் இந்த முன்மாதிரியைப் பின்பற்றின. மற்றும் ஆலயக் கதவுகளைப் பிற்போக்கு வாய்ந்தோர் இன்னும் திறந்து வைத்தபாடில்லை.

இப்பொழுது வயாவிளான்—பலாலி சைவ பரிபாலன சபையினர் தங்கள் நடராஜ ஆலயத்தைக் ஹரிஜனங்களுட்பட சகல இந்துசமயிகட்கும் திறந்துவைக்கவும், தமது பகுதியிலுள்ள மற்றும் ஆலயங்களை அங்ஙனம் திறப்பித்துவைக்கவும் பிரயத்தனம் செய்வதுபற்றிப் பெருமிதமடைகின்றேன். இவர்கள் எடுக்கும் முயற்சி இனிது அனுகூலம் எய்துக. எத்தகைய தடை தயக்கமுமின்றி எல்லாக் கோயில்களும் எல்லா மக்களுக்கும் திறந்து வைக்கப்படுவதாக.

தொண்டைமானாறு,
வல்வெட்டித்துறை.

தங்கள் தொண்டை நயந்து வாழ்த்தும்
பொ. ஸ்ரீஸ்கந்தராஜா

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைத் தலைவரும்,
முன்னாள் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி மனேஜரும்,
யாழ்ப்பாண முடிக்குரிய நியாயவாதியும் ஆகிய

## திரு. த. முத்துச்சாமி அவர்கள்

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் பஞ்சகிருத்திய நடனம் புரியும் நடராசப் பெருமான் கோவிற் கும்பாபிஷேகத்துக்கு ஆகவேண்டிய ஒழுங்குகளை வயாவிளான்—பலாலி சைவபரிபாலன சபை செய்திருக்கின்றது என்னும் செய்தி மகிழ்ச்சியைத் தருகின்றது. அவ்வாலயம் கடவுள் வழிபாட்டுக்குச் சாதிமத பேதமின்றிச் சைவ மக்கள் எல்லாருக்கும் திறந்துவைக்கப்படுவது மிகவும் மெச்சத்தக்கது. ஆதியில் சாதிபேதம் இருந்ததாகத் தெரியவில்லை. மக்கள் செய்யும் தொழில் வேற்றுமையால் சாதி வகுக்கப்பெற்றதென்று பெரியோரால் கருதப்படுகின்றது. ஆன்மாவுக்குப் பிறப்பு, இறப்பு இல்லையென்றும், குளிர், வெப்பு என்னும் குணங்கள் இல்லையென்றும் பகவத்கீதையிற் கூறப்படுகின்றது. சமயத்தில் சாதிபேதம் பாராட்டுதல் பொதுவுடைமைக் கட்சிக்காரர்களுக்குத் தங்கள் நிரீச்சுரவாதக் கொள்கைகளைச் சமூகத்திற் புகுத்திவிட வசதி அளிக்கின்றது. ஆனபடியால், சைவம் வளரவேண்டும் என்னும் அவாவுடையவர்கள் சகலரும், திருநீறு, உருத்திராக்கம் அணிந்து, பஞ்சாக்ஷர ஜெபம் செய்து, பிறவிப் பிணியைத் தீர்ப்பதற்காக வேண்டிய வசதிகளைச் செய்யவேண்டும். ஆலய வழிபாடு மேற்கூறியவற்றிற்கு மிகச் சிறந்த வசதியை உண்டுபண்ணுவதாகும். இத்துறையில் வயாவிளான்—பலாலி சைவ பரிபாலன சபையார் செய்கின்ற சிறந்த தொண்டு மென்மேலும் விருத்தியடைந்து, எங்கள் சைவ சமயம் நன்கு வளர்ச்சியடைய எல்லாம் வல்ல இறைவன் இனிது அருள்புரிவாராக.

வண்ணார்பண்ணை

த. முத்துச்சாமிப்பிள்ளை

வயாவிளான்

வரகவி திரு. க. வேலுப்பிள்ளை அவர்களின் மகனும்,

முன்னாள்

பண்டாரவளைத் தொகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதியும்,

வதுளைச் சைவ பரிபாலன சபைத் தலைவரும்,

எமது சைவ பரிபாலன சபைப் போஷகருள் ஒருவரும் ஆகிய

## வழக்கறிஞர், திரு. க. வே. நடராஜா அவர்கள்

எமது வயாவிளான்—பலாலி சைவ பரிபாலன சபை அமைத்துள்ள நடராஜ ஆலயக் கும்பாபிஷேகத்துக்கும், திறப்பு விழாவுக்கும் யான் வர இயலாமை குறித்து மிகவும் கவலைப்படுகின்றேன். அந்தப் புனித தினத்தில் எனது கிராமவாசிகள் அனைவரும் சாதி பேதமின்றி ஆலயப்பிரவேசம் செய்வரென அறிந்து அளவில்லாத மகிழ்ச்சி அடைவதுடன், எனது ஊர்மக்களையும் மேற்படி சபையையும் மனமார வாழ்த்துகின்றேன். யானும் அவர்களுள் ஒருவனென்று பெருமை அடைகின்றேன்.

காந்தியடிகளின் நன்னெறியைப் பின்பற்றி இற்றைக்கு நாற்பது வருடத்துக்கு முன்னே திரு. ச. பேரின்பநாயகம் அவர்கள் முதலான பல இளைஞர் மாணவர் மகாநாடு ஒன்று நடாத்தினர். (இது பின்பு யாழ்ப்பாண வாலிபர் மகாநாடாக மாறிற்று.) அதில் நானும் ஒருவனாக 1924 ஆம் ஆண்டில் காங்கேசன்துறையில் முதன்முதலாகச் சமபந்தி நடாத்தியது என் ஞாபகத்துக்கு இவ்வேளை வருகின்றது. தமிழ் மக்களிடையே சாதித்துவேஷம் அடியோடு ஒழிய வேண்டும் என்பது அந்தநாட்தொட்டு இந்த நாள்வரை எனது ஒரேஒரு இலட்சியமாக இருந்துவருகின்றது

சாதி வித்தியாசம் பாராட்டும் கோவில்கள் உண்மை ஆலயங்களல்ல; பசாசின் இருப்பிடங்கள் என்பது என் கருத்து.

**கல்லடி க. வே. நடராஜன்**

— பழைய மானம்பராய் வாசி

வதுளை

சிறந்த முற்போக்குவாதி, கொழும்பு வழக்கறிஞர்

## திரு. S. சோமசுந்தரம், O. B. E., அவர்கள்

சாதிவித்தியாசமின்றி எல்லா இந்துக்களுக்குமென ஒரு மடாலயம் தங்கள் சபையால் தாபிக்கப்பட்டிருக்கிறதென அறிந்து நான் சந்தோஷமடைகின்றேன். இந்து சமயம் பிறந்து வளர்ந்த இந்தியா சாதிவேற்றுமையை முற்றாக ஒழித்துள்ளது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக யாழ்ப்பாணம் முன்னேறாமல் பிற்போக்கு நிலையில் காணப்படுகிறது. இந்து சமயத்துக்கு வெட்கத்தைத் தரும் இக்கறை விரைவில் மறைந்தொழிந்துபோய் விடுமென நம்புகின்றேன்.

தங்கள் பணியைப் போற்றும்,

**S. சோமசுந்தரம்**

**381,** அணை வீதி,
கொழும்பு.

உடுப்பிட்டிப் பாராளுமன்ற உறுப்பினர்

## நியாயவாதி, திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள்

ஹரிஜனங்களை நம் ஆலயங்களுட் பிரவேசிக்க வைக்கும் புனித பணியில் உங்கள் சபை செய்துவரும் அருந்தொண்டை மனமார வரவேற்று வாழ்த்துகிறேன். உங்கள்பணி நாடெங்கும் பரவி நாமெல்லோரும் ஒற்றுமையாக வாழ எம்பிரானை வணங்குகிறேன்.

தென் ஆபிரிக்காவில் இந்திய மக்கள் படும் அவஸ்தையைப் பார்த்து, மகாத்மாகாந்தி அடிகள் நெஞ்சுக் குமுறலுடன், "நாம் நம் மக்களுக்குச் சாதி அடிப்படையில் செய்யும் அநீதிக்காக இங்கே கஷ்டப்படுகின்றோம்" என்று கூறினர். தமிழ் மக்கள் இன்றுபடும் இன்னல்களைப் பார்க்கும்பொழுது, இந்த எண்ணம் தான் என்மனதிலும் தோன்றுகின்றது. நியாயம் கேட்கும் நாம், நியாயம் வழங்கவேண்டும் முதலில்.

தங்கள் வெற்றி கோரும்

**மு. சிவசிதம்பரம்.**

கரவெட்டி

முன்னாள் வடமாகாண வைத்திய அதிகாரி

மருத்துவக் கலாநிதி

## திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள்

நீங்கள் நடராஜப் பெருமான் ஆலயம் அமைத்துச் செய்யும் தொண்டு பெரிது. அக்கோயில் சைவ மக்கள் எல்லாருக்கும்—சாதிவித்தியாசம் இன்றி, சமத்துவமாக—வழிபாட்டிற்கு அமையும் என்று அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன். இறைவன் சந்நிதியில் சாதிச் செருக்குக்கு இடமேயில்லை. அங்கு சமத்துவமே ஆத்மிகப்பண்பு. எம் சமூகமும் சமயமும் வளர்வதற்கு இச் சமத்துவம் இன்றியமையாதது. ஆகவே, உங்கள் சைவத் தொண்டிற்கு நன்றி பாராட்டுகிறேன்.

கரையூர்,
யாழ்ப்பாணம்

உங்கள் உண்மையுள்ள
சி. சுப்பிரமணியம்

வடபெரும்பாக உதவி வித்தியாதிகாரி

## திரு. சி. உ. சோமசேகரம், M. A., அவர்கள்

தங்கள் சபை சைவத்தை வளர்க்க மடாலயம் ஒன்று அமைத்துள்ளதென்றும், அது விரைவில் சகல சைவசமயிகளுக்கும் திறந்து வைக்கப்பட இருக்கிறதென்றும் அறிந்து அகம் மகிழ்கின்றேன். இறைவன் சந்நிதியில் எல்லவரும் சமம். சாதிக் கட்டுப்பாடு உண்டாக்கப்படுவதற்கு முன்னொரு காலத்திற் காரணங்கள் இருந்தன. சமதர்மம் வாய்ந்த இக்காலத்தில் இக்கட்டுப்பாடு தொடர்ந்து இருப்பதற்கு எத்தகைய காரணமும் இல்லை. ஆகவே, பொதுவாக எம்மனோர் யாவரும், சிறப்பாக இந்நாளைய இளைஞரும் சகல துறைகளிலும் சமத்துவம் என்னும் உயர்ந்த இலட்சியத்தைச் சரிவரக் கடைப்பிடிப்பதுடன், யார் யாரை மரியாதை செலுத்திக் கௌரவிக்க வேண்டுமோ, அவர் அவரை மரியாதை செலுத்திக் கௌரவிக்கக் கற்றுக்கொள்க.

தங்கள் ஹரிஜன ஆலயப் பிரவேசம் சர்வசித்தியடைந்து சைவ உலகெலாம் பரவுவதாக!

கல்லூரித் தெரு,
வண்ணார்பண்ணை

தங்கள் அன்புள்ள
சி. உ. சோமசேகரம்

"ஈழநாடு" ஆசிரியர், பிராமணோத்தமர்,

## பிரமஸ்ரீ K. P. ஹரன் அவர்கள்

தங்கள் சபை கூட்டுப் பிரார்த்தனை, சமய வகுப்பு, சமயப் பிரசங்கம், புராணபடனம், குருபூஜை, சமய வெளியீடு முதலியன மூலம் எமது சைவ சமயத்தை வளர்க்க, நடராஜப் பெருமான் பேரில் மடாலயம் ஒன்று அமைத்து, சாதிவேற்றுமை பாராட்டாது, சைவ நெறி நிற்போர் அனைவரையும் அவ்வாலயத்துள் அனுமதிக்கப்போகிறது என்னும் சுபசெய்தியைத் தமியேன் அறிந்து வெகு சந்தோஷம் அடைகின்றேன்.

பிறவி காரணமாக மக்களிடையே உயர்வு தாழ்வு கற்பிப்பது "அன்பே சிவம்" என்னும் எமது அன்பு மார்க்கத்துக்கு முற்றும் முரண்பாடானது.

ஆகவே, தமது தீண்டாமை ஒழிப்பு முயற்சி வெற்றி பெற்று, மேன்மைகொள் சைவநீதி உலகம் எல்லாம் விளங்க, எல்லாம் வல்ல சிவபெருமானை இறைஞ்சிப் பிரார்த்திக்கின்றேன்.

மேலைச் சிவன்கோவில் வீதி,
வண்ணார்பண்ணை

தங்கள் சேவையை நயந்து பாராட்டும்
**கே. பி. ஹரன்**

○ ○ ○

## தீண்டாமை ஒழிப்பு

"இந்தியாவில் மகாத்மா காந்தியும் இந்திய தேசீயக் காங்கிரசும் இந்திய சுதந்திரப் போருக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார்களோ, அவ்வளவு முக்கியத்துவம் தீண்டாமை ஒழிப்புக்கும் கொடுத்தார்கள். இலங்கையில் தமிழ்ப் பிரதேசத்தில் தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்ற எண்ணம் பெருந்தொகையான மக்களிடையே தோன்றுகின்றது. இந்தத் தீண்டாமை ஒழிப்பு நோக்கத்தை ஒரு சிலர் எதிர்க்கிறார்கள். பிற்போக்கு எண்ணம் உடையவர்களுக்குத் தீண்டாமை உண்மையிலேயே ஒழிக்கப்படவேண்டிய ஓர் மிகவும் மோசமான பொல்லாத சமூகக் கொடுமை என்பதை விளக்கி அவர்களை மனம் திரும்ப வைக்க வேண்டியது முற்போக்கு எண்ணம் கொண்டவர்களுடைய கடமையாகும்."

**— S. J. V. செல்வநாயகம் அவர்கள்**

# இறைவனை யாவேரும் இறைஞ்ச உள் வாரீர்!

"கலைமகள்" ஆசிரியர், அந்தணர் குலதிலகம்

**பிரமஸ்ரீ கி. வா. ஜகந்நாதன்,** M. A., **அவர்கள்**

1. உடன்பிறந் தவரைத் தந்தை
உறையிடத் தணுக வொட்டா
மடவரும் உண்டோ? மக்கள்
வணங்குதற் கமைத்த கோயில்
அடைவதற் குரியர் அந்தச்
சமயத்தி லமைந்த யாரும்;
திடமுற இதனைத் தேர்ந்தார்
தீண்டாரென் றெதுக்கு வாரோ?

2. தூய்மையும் அன்பும் வாய்மைச்
சுகுணமும் கொண்டார் நல்லோர்;
ஆய்தரின் அவரே மேலோர்;
ஆதலின் கோயிற் குள்ளே
போய்வரா தெவரை யேனும்
புறகென விலக்கல் வேண்டின்
ஏய்தரு மன்பில் லாரை
எள்ளியே விலக்கல் வேண்டும்.

3. காக்கைவந் தமரும்; நாயும்
கடிமதிற் குள்ளே ஏகும்;
ஆக்கைநோய் உடையோர் செல்வர்;
ஆயினும் இறைவன் பூவில்
நோக்கமும் அறிவும் ஒன்றுய்
நுவல்தரப் படைத்த சில்லோர்;
தீக்குலம் எனஅன் றென்முன்
சேர்தலை விலக்கல் நன்றே!

4. மிருதிநூல் முனிவர் யாத்து
விழுகின்ற பழமை போக்கிப்
பெருமுறை செய்த வாறே
பிறங்கிய காந்தி மேலோன்

வெருவுறத் தீண்டாச் சாதி
மேவினர் என்னல் பாவம்!
மருவுக அவரோ டென்று
வகுத்தனன் அன்பி னாலே.

5. ஆதலின் தீண்டாச் சாதி
யாமென இந்நாட் சொல்லி
வேதனை யீந்த வெய்ய
வினையினி நீளா தெங்கள்
நாதன்அன் புச்சேய் மாராய்
நயந்திரு கரமும் நீட்டிச்
"சோதர மக்காள்! ஈசன்
தாயஇல் வருக!" என்போம்.

○ ○ ○

## காணப்படாத கடவுள்

"காணப்படும் இவ்வுலகினை ஆக்கி அழித்து நடாத்துகின்ற ஒரு முதற்பொருளை உணர்ந்தனர் மக்கள். அம்முதற் பொருள், தோற்றமும் ஈறும் இல்லாதது. பேராற்றலும், பேரருளும் உடையது என்றெல்லாம் திருந்திய அறிவின் துணைகொண்டு தெரிந்து தெளிந்தனர். கண்டதைக்கொண்டு காணாததை உணர்தல் அறிவின் இயற்கை. ஆற்றின் புதுநீர்ப் பெருக்கைக் கண்டபொழுது, "தொலைவில் மழை பெய்தது" என்றும், கூரையின் மேற்புகையைக் கண்ட காலத்து, "வீட்டினுள் நெருப்புளது" என்றும் உணர்ந்து கூறுதல் மக்கள் இயல்பு. அதுபோல இவ்வுலகின் வியத்தகு அமைப்புக்களைக் கண்டு, இவைகளை இங்ஙனம் அமைத்தவனை பேரருளும், பேராற்றலும் உடைய முதல்வன் ஒருவன் உளன் என உணர்தல் அறிவின் இயல்பு"

— குன்றக்குடிஅடிகள்

# சைவ சமய மறுமலர்ச்சி

தமிழ் நாட்டிற் சைவம் வளர்க்கும்

## தவப்பெருந்திரு குன்றக்குடி அடிகள்

தமிழினத்தின் வாழ்வு சமயப் பண்பிலே வளர்ந்து வளம் பெற்றது. வாழ்க்கைக் கடலில் வீசும் துன்பத்தை இன்பமாக மாற்றிக் கொடுப்பது சமயம். அன்பு பொருந்திய — அறந் தழுவிய—ஒழுக்கம் நிறைந்த நல்வாழ்வைக் கொடுக்கும் தகுதி சமயத்திற்கே உண்டு. சமயச் சார்பற்ற ஒழுக்கம் உலகில் நிலை பெற்றிருத்தல் இயலாது. தனி வாழ்வின் தேவைகள் நிறைந்து கொண்டிருக்கின்ற அளவுக்குத்தான் சமயச் சார்பற்ற ஒழுக்கம் நிலைபெற்றிருக்க முடியும். வாழ்க்கையில் தேவை பெருகி, அவை கிடைக்காது போகுமானால், ஒழுக்கம் சிதைந்து—எவ்வாற்றாலும் தேவையை நிறைவு செய்துகொள்ள மக்கள் தலைப்படுவர். சமய வாழ்வொன்றாலேயே, நீதியையும், நேர்மையையும், ஒழுக்கத்தையும் காக்கமுடியும். இதனை நன்குணர்ந்தே தமிழ் மக்கள் சமய வாழ்க்கையின் இன்றியமையாமையை வற்புறுத்தினர்.

தமிழர் கண்ட சமய வாழ்வு அகம், புறம் இரண்டும் ஒத்த சமய வாழ்வு. இரண்டும் இயைந்து கலக்காத வாழ்வு வாழ்வன்று. அதனாலேயே அகமும் புறமும் (புறக் கருவிகள்) ஈடுபடுகின்ற வழிபாட்டு முறையைத் தமிழகத்துச் சமயம் வற்புறுத்துகின்றது. நமது சமயம் வழிபாட்டுக் கலையிலும், வாழ்த்துகின்ற பண்பிலும் மிகச் சிறந்து நிற்கின்றது. அதனால் வழிபாட்டுக்காக விண்ணை அளந்து காட்டுகின்ற பல நூற்றுக்கணக்கான ஆலயங்களை எடுத்து வழிபட்டனர். அதன்மூலம் அகத்தின் நல்லுணர்ச்சியைக் காத்துப் பெருக்கிக்கொண்டனர். புறத்தால் தாங்கும் வேடங்கள் பலவற்றைக் கைக்கொண்டு, அவற்றின் மூலமும் சிந்தனையைத் திருத்திச் சிவத்தில் ஆழ்த்தினர். காலப்போக்கில் சமய வாழ்வு சிதைந்துகொண்டே வந்தது. சமயம் வேறு வாழ்க்கை வேறு என்ற புல்லிய உணர்ச்சி தலையெடுத்து வளர்ந்தது. வாழ்க்கையோடு ஒட்டிய சமயம் சடங்குச் சமயமாக மாறிவிட்டது. அகத்தைத் தூய்மைப்படுத்தச் செய்யப்பெறும் சடங்குகள், உள்ளத்

தோய்வுடன் செய்யப்பெருமையினல் வழிபாடுகளும் சடங்குகளும் நெஞ்சத்திற் கலக்கவில்லை. இருதயத்தில் ஒலிக்கவேண்டிய சமயம் வாயளவிலே ஒலிக்கும் நிலைக்கு வந்துவிட்டது. உண்மைச் சமய வாழ்வு அருகிக்கொண்டே வந்தது. அதனல் பண்பாடு சிதைந்து சாதி முதலிய போலிப் பிளவுமனப்பான்மைகளும் உருவெடுத்து விட்டன.

ஆனல், இப்பொழுது சில ஆண்டுகளாக எங்கும் ஒரு மாற்றம், சமயத் துறையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. சமயச் சார்பற்ற வாழ்க்கை சாரமற்ற வாழ்க்கை என்று மக்கள் நம்பு கின்ற நிலைக்கு வந்துள்ளனர். வாழ்க்கையோடு ஒன்றுபட்ட சமய வாழ்வை விரும்புகின்ற வேட்கையும் மலர்ந்திருக்கின்றது. எங்கும் சமயத்தின் பேச்சு. ஊர்தோறும் கூட்டு வழிபாட்டு இயக்கங்களும் பொதுப் பிரார்த்தனைகளும் உண்டாகிக் கொண் டிருக்கின்றன.

சமயத்தால் எழுந்தவை திருமடங்கள். சமயத்துக்காகவே வாழும் தகுதியுடையன திருமடங்கள். சமயக் கொள்கையைப் பேணிக் காத்து — மக்களை அருள்நெறியில் ஆற்றுப்படுத்தும் கட மையை மேற்கொண்டவைகளே திருமடங்கள். சன்மார்க்க சாலைக ளாக—தமிழ் வளர்க்கும் பண்ணைகளாக விளங்கியவை—விளங்க வேண்டியவை திருமடங்கள். நல்லூழின்மையின் காரணமாக இந்த நிலை சில காலம் மாறுபட்டிருந்தது என்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. இப்பொழுது சில ஆண்டுக ளாக மடாதிபதிகளின் வாழ்க்கையிலும் மாற்றம்; அவர்களும் பணியில் ஈடுபட்டுவிட்டார்கள்.

சமய நூல்கள் எல்லாம் அச்சுவாகனமேறி வெளிவந்து கொண்டிருக்கின்றன. சமய நூல்களின் பயிற்சியிற் சிறந்தார்க் குப் பரிசுகள் வழங்கி ஊக்கமும் உணர்வும் ஊட்டப்பெறுகின்றன. கல்வி நிலையங்கள் பல கண்டு, அவற்றின் மூலம் அறிவோடு அருளுணர்ச்சியும் தரப்படுகிறது. வீதிகளிலும் வீடுகளிலும் நின்று சமயக் கொள்கைகளைப் பரப்புகின்றனர். சேரிகளிலும்—சிறைக ளிலும் கூடப் புகுந்து தமது பணிகளைச் செய்யத் தலைப்பட்டு விட்டனர். நாட்டின் வரலாற்றில், சமயத்தில் மடாதிபதிகளால் ஏற்பட்ட இம்மறுமலர்ச்சி வரவேற்கத் தக்கது—வாழ்த்தத் தக்கது.

தக்க அறிவு சான்ற பெருமக்களின் தனிவாழ்விலும் இன்று ஒரு மாற்றம் காண்கிறது. ஆங்கிலம் படித்து ஊழியம் பார்த்து

ஊதியம் பெறுதலிலேயே ஈடுபட்டிருக்கும் மனநிலை இன்று பலரிடத்தில் இல்லை. அவர்களும் அருள்நெறி வளர்க்கும் பொருட்டு பல்வேறு பகுதிகளிலும் சிறந்த முறையில் சமயப் பணி செய்து வருகின்றனர்கள். இத்தகு பெருமக்களால் தமிழகத்தின் சமயத் துறையில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சி மறக்க முடியாத தொன்று.

தமிழ்நாட்டில் தமிழ்ப் பெருமக்களது உணர்வில் எழுந்தவை ஆலயங்கள். முத்தமிழ் பயிலும் பள்ளிகளே தேவாலயங்கள். தமிழ் பயில வேண்டிய ஆலயத்தில் தமிழ் மறுக்கப்பட்டது. வேற்று மொழி இடம் பெற்று வேரூன்றிவிட்டது. கடவுளோடு உறவாடிய கன்னித் தமிழ் என்று வரலாறு பேசுவர். நால்வரின் தமிழ் மறையே நானிலத்தை வாழ்விக்கும் என்று எடுத்துப் பேசுவர். எனினும், ஆலயத்தில் தமிழுக்கு இடங் கொடுக்காதிருந்தனர். நெஞ்சம் தொடாத மொழியில் வழிபாடு செய்வது பழக்கத்தின் மூலம் வழக்கமாகிவிட்டது. தமிழ் அன்பர்களுக்கும் தமிழ்த் தொண்டர்களுக்கும் இந்த நிலை தாங்கொணுத் துயரத்தைத் தந்தது. தேவார, திருவாசகங்கள் முழங்காத ஆலயங்கள் எதற்கு என்ற எண்ணம் இதயங்களில் எதிரொலித்தது. எண்ணம் பாழ் படுமா? இன்று தமிழ் நாட்டில் பல தேவாலயங்களில் அருமைத் தமிழில் அருச்சனையும் வழிபாடும் நடைபெறுகின்றன. தமிழ் நாட்டின் எல்லா ஆலயங்களிலும் முத்தமிழ் முழங்கும் காலம் விரைவில் வர மறுமலர்ச்சி வித்திட்டுள்ளதை யாரும் மறுக்க முடியாது.

தமிழ்நாட்டின் தனித்த பண்பு சமயச் சண்டையில் ஈடு படாது, பல்வேறு சமயங்களையும் உவப்புடன் ஒப்பக் கருதும் பண்பாடு ஆகும். இது தமிழர்களுக்கு இயற்கையிலேயே உண்டு. எனினும் இடையில் பல சந்தர்ப்பங்களில் சமய வெறியும் பூசல் களும் எழுந்தன. ஆனால் மறுபடியும் இன்று பிற சமய வெறுப் பின்றிச் சமயம் வளர்க்கப்பெறுகிறது. சமயத்துறையில் வெறுப் பும் காழ்ப்புங் கொள்ளாது, பல்வேறு சமயங்களையும் ஒப்பக் கருதும் இன்றைய மறுமலர்ச்சி காலத்திற்கேற்ற மறுமலர்ச்சி; தேவையான மறுமலர்ச்சியுமாகும்.

சமயத்தின் பேரால் சாதிகள் பிறப்பிக்கப்பெற்றது உண்டு; இன்று சாதிகள் தகர்த்தெறியப்பெற்று வருகின்றன. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற பண்டைத் தமிழனின் குரல் மீண்டும் தமிழகத்தில் ஒலிக்கிறது. வாழ்க்கையிலும் கைக்

கொள்ளப் பெறுகிறது. தமிழினம் ஓர் குலமாக ஒன்றுபட, சமயத் துறையில் ஏற்பட்டுள்ள இந்த மறுமலர்ச்சி வேண்டத்தக்கது; விரும்பத்தக்கது.

இங்ஙனம் தமிழ்நாட்டில் சமயத்துறையில் புதியதொரு பொலிவும் மறுமலர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. இம் மறுமலர்ச்சி இயக்கத்தில் ஆயிரக்கணக்கான ஆர்வமுடைய இளைஞர்களும், பெருமக்களும் ஈடுபட்டுள்ளனர். இத்தகு மறுமலர்ச்சியால் தமிழகம் அருள்வெள்ளம் பொங்கித் ததும்பும் திருநாடாக விளங்கப் போகிறது என்று நமது இதயம் சொல்லுகிறது.

○ ○ ○

## கன்மமும் மறுபிறப்பும்

நாம் பிறப்பதற்குமுன் எங்கிருந்தோம்? எவ்வாறு இருந்தோம்? ஏன் வெவ்வேறு நிலைகளில் பிறந்திருக்கிறோம்? நாமாகப் பிறந்தோமா? நமது பெற்றோர்களது விருப்பத்தின்படி பிறந்தோமா? அவ்வாறு பிறக்கச் செய்தது யார்? கருணையுள்ள கடவுள் அவ்வாறு செய்தார் என்றால், ஏன் ஒன்றுபோல் பிறக்கும்படி செய்யக்கூடாது? முற்பிறவி உண்டா? என்று சிந்திக்கும் ஒருவனுக்கு மனத்திருப்தி உண்டாக்கக்கூடிய பதில் சைவ சமயத்திற்தான் இருக்கின்றது.

அவரவர் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்ப (ஒரு நியாயத் தீர்ப்புக் கொடுத்து, அந்தத் தீர்ப்பின்படி) அவரவரை நடக்கும்படி செய்வதும், பரீட்சையில் தேறினவரைப் பிறவியற்ற மேல் நிலை அடையச் செய்வதும் அன்பே உருவான சிவபெருமானின் காருண்ணியமாகும்.

கிறிஸ்தவர்களும், முகம்மதியர்களும் ஒரே பிறவியும் ஒரே நியாயத் தீர்ப்புமே உண்டு என்று சொல்லும்பொழுது, "இப்பொழுது இவ்வுலகில் காணும் வேற்றுமைகளை ஆண்டவனே தன் இஷ்டத்திற்கு விதித்திருக்கிறான் என்றால், தன் இஷ்டம் போல் விதித்த ஆண்டவன் இனிமேலும் தன் இஷ்டம் போலவே விதிப்பான் என்று கூறுதல்தான் நியாயமே தவிர, இனி மாத்திரம் நியாயத் தீர்ப்புச் செய்வான் என்று சொல்வது பொருந்தாதல்லவா? என்னும் கேள்வி எழுகின்றது.

— மதுரைச் சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள்

# சைவத் தொண்டு

முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட அதிபரும்
இன்னாள் காணி, நீர்ப்பாய்ச்சு, மின் சக்தி அமைச்சு நிரந்தரக் காரியதரிசியும்
எமது சைவபரிபாலன சபைப் போஷகருள் ஒருவரும்
தவப்பெருந்திரு யோகர்சுவாமியின் சால்புடைச் சீஷனுமாகிய

## உயர்திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்கள்

இப்பரந்த பூவுலகின்கண்ணே பெறுதற்கரிய பெரும் பேருகிய மானிடப்பிறவியை எய்திய நாம், அதனை அருளிய இறைவனுக்குப் புரியும் நன்றிக்கடன் போன்றதே சைவத் தொண்டாகும். எங்கும் நிறைந்த சிவனின் கிருபையினாலேயே யாவும் செயல்படுகின்றன. எல்லா உயிர்களிலும் இறைவன் நிறைந்திருக்கின்றான். ஆதலால், சுயநலமற்று உயிர்கட்கு நாம்செய்யும் தொண்டே சிறந்த சைவத்தொண்டாகும். எண்ணற்ற உயிர்கள் இவ்வுலகில் பிறந்து வாழ்ந்துள்ளன. அவற்றுள், தம் பிறவியின் பயனை உணர்ந்து, தம் வாழ்வின் முக்கிய கடமை எனச் சைவத் தொண்டைக் கொண்டு முத்தி பெற்றோரே அவதாரபுருஷர்கட்கு ஒப்பாகக் கருதப்பட்டு வருகின்றார்கள்.

பொன்னும் பொருளும் வேண்டாம், இறைவன் புகழ் பாடும் பேறு வேண்டும் என்று வாழ்ந்த நாயன்மார்களினதும், சைவப் பெரியார்களினதும் சீரிய வாழ்வைச் சிறந்த முன்மாதிரியாக இங்கு எடுத்துக்கொள்ளலாம். கோடி பெறும் பொன்னைக் குப்பையெனக் கூட்டித்தள்ளிய திருநாவுக்கரசர், பெறுதற்கரிய பெருவாழ்வைப் பேயுருவாய்க் கழித்த காரைக்காலம்மையார், உயர்ந்த மந்திரி பதவியை ஒதுக்கியொழித்த மாணிக்கவாசகர் என்போரின் நோக்கம் யாதெனில், சைவத்தொண்டு புரிந்து வாழ்வைப் பயனுள்ளதாக்க வேண்டும் என்பதேயாகும்.

தரணிமேல் மனிதவாழ்வு தண்ணீர்மேற் படகது போன்றது. படகினுள் தண்ணீர் எங்ஙனம் இருக்கப்படாதோ, அங்ஙனம்

மனிதருள் உலக வாழ்வு இருக்கக்கூடாது. அங்ஙனமிருப்பின் படகு நீரினுள் அமிழ்ந்து போவது போல, இந்நிலையற்ற உலக வாழ்வினுள் மனிதர் அமிழ்ந்திப் போவார்கள். இதற்குத் திருவருள் என்னும்துடுப்பின் உதவியோடு, ஆழியொக்கும் இப்பெரும் பிறவிக்கடலைக் கடந்து செல்பவர்களே கரையடைந்து வீடு பெறுவார்கள். அத்தகைய திருவருளைப் பெறுவதற்குச் சைவத் தொண்டு புரிவது அவசியமாகும்.

இறைவனுக்குப் புரியும் தொண்டைப் பற்றியும், அதனல் விளையும் சிறப்பைப் பற்றியும் சைவப் பெரியார்கள் தம் அருட் பாக்களில் தெளிவுபடுத்தியுள்ளார்கள். இதைப்பற்றி இன்று நம்மிடையே வாழும் ஒப்பற்ற ஞானி யோகர் சுவாமிகள்:

"சிவனடிக்கு அன்பு செய்குவர் பெரியர்
சிவனடிக்கு அன்பு செய்கிலர் சிறியர்
சிவனடிக்கு அன்பு சிறப்பினை அளிக்கும்
சிவனடிக்கு அன்பு சீவன் முத்தியே." —நற்சிந்தனை

என்று பாடியுள்ளார். மேலும், "நாங்கள் சிவன் அடியார்கள். எங்களுக்கு ஒரு குறைவுமில்லை. சிவதொண்டு செய்வதே எங்கள் தொழில். அதற்காகவே, நாம் பூமியில் வாழ்கிறோம். சந்திரன் சிவதொண்டு ஆற்றுகின்றது. சூரியனும், ஏனைய கிரகங்களும் அத்திருப்பணியையே செய்து வருகின்றன" என்று கூறியுள்ளமையும் இவ்விடம் நோக்கற்பாலது.

இன்று நம்மிற் பலர், சிவதொண்டின் அருமையை நன்குணர்ந்து, அதனைத் தம் கடமைகளில் முக்கிய ஒன்ருகப் புரிய முன்வந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும். அவ்வழியில் வயாவிளான் — பலாலி சைவபரிபாலன சபை திரு. வ. இராசநாயகம் அவர்களின் தலைமையில், நடராஜ மடாலயம் என்னும் பெயருடன் மடாலயமொன்று ஸ்தாபித்து, யாவரும் சாதிபேதமற்று வணங்கும்படி செய்துள்ளமை போற்றுதற்குரியதும், அனைவரும் ஆதரிக்க வேண்டியதுமான ஒரு பணியாகும். எனவே, எமக்கு வாழ்ந்து காட்டிய பெரியார்களின் அடிச்சுவட்டில் நாமும் சென்று, சைவத்தொண்டு புரிந்து, பிறவிப் பயனை அடைந்தவர்களாவோமாக.

# நாவலர் வாழ்க்கை

## —வைதிக சைவ வழி—

(இது சைவத்தொண்டு புரிய விழைவோர்க்கெல்லாம் முன்மாதிரியாக விதந்தோதப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் குருத்துவ வழித்தோன்றல் பண்டிதமணி

**சைவத்திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள்**

கருத்து வைத்து எழுதி உதவியது.)

"மணி கொண்ட" என்ற பாடலை இற்றைக்கு நூற்றிருபது வருடங்களுக்கு முன் ஆறுமுக நாவலர் தமது சிவபூசை முடிவில் ஒருநாள் உடையவரை நோக்கிப் பாடி அழுதார்.

வண்ணார்பண்ணையில் ஒரு வர்த்தகசாலை வாங்கக் கூடியதாய் வந்தது.

அதைத் தமது வித்தியாசாலைக்காக வாங்க நாவலருக்கு விருப்பம்; பணமில்லை. அதனால் அந்தப் பாடல் மூலம் பணம் வேண்டி நாவலர் வருந்தினார்.

"சுவாமி! இந்த நாட்டில் உன் சமயம் குன்றுகிறது. மகத்துவம் பொருந்திய உன் புகழை இயன்ற அளவு பரப்புவதற்கு நான் ஆசைப்படுகின்றேன். அதற்காக நான் இம்மையிற் பெறக்கூடிய பேறுகளையெல்லாம் பெறாது நிற்கிறேன். என்னால் ஸ்தாபிக்கப்பட்ட வித்தியாசாலையை நடத்துவதற்குப் பொருட்டுணை செய்வார் இல்லை. அம் மாத்திரையில் நில்லாது இடையூறும் செய்கின்றார்கள். எடுத்த வித்தியாசாலையை மூடினால் அதே இடத்தில் வேறு மதத்தினர் வித்தியாசாலை தாபிப்பர். சுவாமி! உன்னை இகழ்வார்கள். அதனை நான் சிறிதும் சகிக்க மாட்டேன். என் மனம் அல்லும் பகலும் வருந்துகின்றது. நீ என் நிலையை அறிந்திருந்தும் அருளாதிருக்கின்றாய். திருவுள்ளம் இரங்குகின்றாய் இல்லை. இனி ஒருநாளைக்கு

உன் சந்நிதியில் என் உயிரை மாய்த்துவிடுவேன். இது சத்தியம்'' இது அந்தப் பாடலின் கருத்து. பாடல்:

''மணிகொண்ட கடல்புடைகொ ளிந்நாட்டி லுன்சமய வர்த்தன மிலாமை நோக்கி
மகிமைபெறு நின்புகழ் விளக்குவான் கருதியெம் மைப்பொருட் பேரொ ழித்தே
கணிகொண்ட வித்தியா சாலைதா பித்திவ்வூர்க் கயவர்செயு மிடர்கள் கண்டுங்
கல்லூரி யதைநடாத் தப்பொருட் டுணைசெயக் கருதுவோ ரின்மை கண்டும்
அணிகொண்ட சாலைய தொழிப்பினஃ துணையிகழு மந்நிய மதத்தார் சாலை
யாமென நினைந்தெனெஞ் சற்பகற் றுயருற லறிந்துமொரு சிறிது மருளாத்
திணிகொண்ட நெஞ்சவினி நின்முன்யா னுயிர்விடுதல் திண்ணம்நீ யறியா ததோ
சிறியேன தன்பிலர்ச் சனைகொளழ கியதிருச் சிற்றம் பலத்தெந் தையே''

கிறீஸ்து மதத்தவர்களின் தாக்கத்தினுலே, நாவலரின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டது. தம் மதத்தை ஸ்திரப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் உறைத்துவிட்டது. தம் வாழ்க்கையை — எடுத்த பிறப்பை — அதற்கே அர்ப்பணம் செய்துவிட்டர்.

மகாத்மா காந்திக்கு ஆபிரிக்காவில் எப்படி வெள்ளையரின் தாக்கத்தினுல் சீவிய மாற்றம் ஏற்பட்டதோ, அப்படித்தான் நாவலருக்கும் சீவியத்தில் மாற்றம் ஏற்பட்டது.

நாவலர் ''மகிமை பெறு நின்புகழ் விளங்கவேண்டும். மேன்மைகொள் சைவநீதி நிலவவேண்டும்'' என்று விரும்பினுர்.

நாவலர் காலத்தில் கிறீஸ்தவ தாக்கம் இருந்தது போல ஒரு காலத்தில் தமிழ் நாட்டில் சமணத் தாக்கம் இருந்தது. அக்காலத்தில் திருஞான சம்பந்தப் பிள்ளையார், நாவலர் தமது விருப்பத்தைத் தமது சுவாமிக்கு விண்ணப்பம் செய்ததுபோல், தாமும் தமது விண்ணப்பத்தைத் தமது சுவாமிக்கு விண்ணப்பித்திருக்கிறுர்.

ஞால நின்புகழே மிக வேண்டுந் தென்
ஆல வாயிலுறையு மெம் ஆதியே''

என்பது பிள்ளையார் விண்ணப்பம்.

இருவர் விண்ணப்பங்களும் உருவத்தில் ஒரே மாதிரியானவை. அப்படியிருந்தாலும் அந்தரங்கத்தில் வித்தி

யாசம் இருக்கிறது. இந்த வித்தியாசந்தான் ஆராய்ந்து சிந்திக்க வேண்டியது.

"வேதவேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதமில்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திருவுள்ளமே
பாதி மாதுடனாய பரமனே."

சுவாமி! என்னுடைய விருப்பம் இது. என் விருப்பம் கிடக்கட்டும். இது உனக்கு உடன்பாடோ? உன் கருத்தென்ன? என்று கேட்கிறார் பிள்ளையார். சுவாமியின் கருத்துக்கு மாறாக ஒரு கருத்தை வைத்திருக்க அஞ்சுகின்றார் பிள்ளையார்.

நாவலர் தம் கருத்துச் சுவாமிக்கு உடன்பாடோ என்று கேட்கவில்லை. தம் கருத்து நிறைவேறுவதற்குப் பணம் இல்லை என்கிறார். நாவலருக்கும் பிள்ளையாருக்கும் உள்ள இந்த வித்தியாசம் விசாரத்துக்குரியது.

மாணிக்கவாசகப் பெருமான், "வேண்டத்தக்கதறிவோய் நீ"

"சுவாமி! ஒன்றை விரும்புவதற்கு நான் ஆர்? என்னை ஆட்டுகின்ற நீதான், எனக்கு என்ன வேண்டும் என்று தீர்க்க வேண்டும். நான் ஒன்றை விரும்பவேண்டுமானால் அதை நீதான் செல்லித்தா" என்கின்றார்.

கற்புள்ள பெண்ணை, ஒரு பொருள் கேட்டால், அவள், அவர் அறிய வேண்டும் என்பாள். அவள் அவன் இச்சைக்கு வேறாகத் தான் ஒன்று வைத்துக்கொள்வதில்லை.

'தோகைக்கும் தோன்றற்கும் ஒன்றாய் வரும் இன்ப துன்பங்களே' தோகைக்கும் தோன்றற்கும் கருத்து ஒன்றேயன்றி இரண்டு இல்லை.

பரிபூரண கற்பினர்களாகிய நாயன்மார்கள், தமக்கு ஒரு இச்சை உண்டாகுமானால், ஈசுவரன் திருவருட் குறிப்பை அறிந்து அதன் வழி நின்றார்கள்.

வியாசபகவான் பிரமசூத்திரத்திலே "எங்கிருந்தும் இதன் தோற்றம் முதலியன" என ஒரு வினுவை எழுப்பி உலகின் முதலை விசாரிக்கின்ருர்.

வள்ளுவர் 'ஆதி பகவன் முதற்றே உலகு' என வியாசர் விசாரத்துக்கு விடையிறுப்பவர் போன்று, உலகுக்கு முதலாக ஒரு கர்த்தா இருக்கிருர்; அவர் தாளைப் பற்ற வேண்டும்; 'அங்கிருந்தும்' என்கிருர்.

"ஆதியாய் நின்ற அறிவு முதலெழுத்து
ஓதிய நூலின் பயன்"

மன எழுச்சிக்கு எது மூலமோ அதன் கருத்தறிதல் தான் நூற்பயன் என்கிருர் ஔவையார்.

ஆட்டுவிப்போன் கருத்தறியாமல் நடக்கத் தொடங்கினுல், எதிர்காற்றில் நடப்பதாய் முடியும்.

"அரன்றன் பாதம் மறந்து செய்யறங்களெல்லாம் வீண்செயல்" என்கிருர் அருணந்தி சிவாசாரியார்.

இப்படியாஞல், நாவலர் செயல்களெல்லாம் வீண் செயல்கள்தாமோ? நாயன்மார்கள் போலத் தம் விருப்பம் கடவுளுக்கு உடன்பாடோ என்று ஏன் அறிய நாவலர் முயற்சிக்கவில்லை? என்று கேள்விகள் கேட்கலாம்.

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்று இரண்டாம் பால பாட முகப்பில் எழுதிய நாவலர்,

"அடிமையானவன் தன்னிடத்தே தன் நாயகன் ஒப்பித்த பொருளை அவன் கருத்தறிந்து, அக்கருத்தின்படியே செலவு செய்யவேண்டுமன்றே" என்று நான்காம் பாலபாடத்தில் எழுதிய நாவலர்,

ஆன்மாக்கள் ஆன்ம நாயகனின் கருத்தறிந்து நடத்தல் வேண்டும் என்பதை நன்கு அறிவர். அவருடைய அபிலாஷையும் அதுவே. அங்ஙனம் இருந்தும் ஆத்மநாயகன் கருத்தென்ன என்று நாவலர் கேட்கவில்லை. நாயன்மார்கள் போலநாவலர் கேட்கவில்லை.

ஏனென்றால், நாவலர் தம் நிலையை உணர்ந்தவர். நாயன்மார் சாதி வேறு; நாவலர் சாதி வேறு. அவர்கள் சத்திநிபாதர்கள்; அருள் நடத்த அதன்பின் தாம் நடப்பவர்கள்; கருவி கரணங்களை ஒப்புக்கொடுத்தவர்கள். அந்த நிலையில் ஒரு இச்சை உண்டானால், அதனையும் ஒப்பித்து, அருள் காட்டும் வழியில் நிற்பவர்கள்; ஆத்ம நாயகனோடு அளவளாவி அவர் கருத்தறியும் தகுதிவாய்ந்தவர்கள். அவர்களுக்கும் தமக்கும், பரமாணுவுக்கும் மகா மேருவுக்குமுள்ள வித்தியாசம் என்பதை நன்கு உணர்ந்தவர் நாவலர்.

மனிதனுக்கு நோக்கு வேறு; அவன் நிலை வேறு. நாம் வெகுதூரத்தை எட்டி நோக்கலாம்; நோக்கிய அளவில் அந்த இடத்தை அடைய முடியாது. அதற்கு எத்தனையோ தடைகள் இருக்கும். அடைதற்குரிய தகுதிப்பாடு வேறு.

நாவலர் தமது நிலையை விளக்குகின்றார். "சைவ சமயத்தையும், அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் தமிழ்நாடெங்கும் வளர்க்கவேண்டும் என்னும் பேராசையானது என் சிறுவயதில் என்னுள்ளத்திலே தோன்றி நாடோறும் பெருகிப்பெருகி இப்பொழுது அவ்வுள்ளத்தை விழுங்கித்தான் மேற்கொண்டு நிற்கிறது."

"நிலையில்லாத என் சரீரம் உள்ளபொழுதே என் கருத்து நிறைவேறுமோ நிறைவேறாதோ என்னும் கவலை என்னை இரவும் பகலும் வருத்துகிறது."

"என் கருத்தை யான் எடுத்த தேகம் விழுமுன் நிறைவேற்றியருளும் பொருட்டுத் திருவருளைப் பணிந்து பிரார்த்திக்கின்றேன்."

இது நாவலர் நிலை.

சிவபெருமான் ஆறுமுக நாவலரையும் மகாத்மாகாந்தியையும் அழைத்து உங்களுக்கு முத்தி வேண்டுமா என்று கேட்டால் இருவரும் மறுத்துவிடுவார்கள். ஒருவர் சைவ சமயம் விருத்தியாக வேண்டுமென்று கேட்பார். மற்ற

வர் சுயராச்சியம் கேட்பார். அவர்களை அந்தப் பற்றுக்கள் விழுங்கிவிட்டன.

தருமர் வனவாசம் அஞ்ஞாதவாசம் இரண்டும் முடித்துக்கொண்டு வெளிப்பட்டுவிட்டார். தமது இராச்சியத்தைப் பெறுதற்கும் அடைந்த அவமானங்களைப் போக்குவதற்கும் வழிவகைகளைக் கிருஷ்ணருடன் ஆலோசனை செய்கின்றார். அந்தச் சமயத்தில் சஞ்சயர் என்கின்ற பிராமணகுரு தருமரிடம் போய்த் துறவு போதிக்கின்றார். தருமர்,

> "என் னறத்தினில் நின்று தெவ்வரை
> இரு விசும்பினில் ஏற்றினல்
> நின்னறத்தினில் நினைவு கூரும்"

என்கின்றார். இப்பொழுது பகைவரை அழிக்க வேண்டுமென்று மனம் கொதித்துக்கொண்டிருக்கிறது. தர்மவழியில் அந்தக் கொதிப்பு அடங்கியபிறகுதான் உங்கள் உபதேசங்களில் மனம் செல்லும் என்று மறுத்துவிட்டார்.

முதல் பற்றுக்களுக்கு வழிசெய்யவேண்டும். பற்றுக்கள் அடங்கியபிறகுதான் அருளுக்குப் பாத்திரமாகலாம்.

ஆறுமுகநாவலர் பற்றுக்களை வைத்துக்கொண்டே நாயன்மார்களுக்கு நடிக்க முயலவில்லை. இதுதான் அவருடைய பெருமைகளுள் பிரதானமான முதலாம் இலக்கப் பெருமை.

இப்பொழுது நம்மைப் பிடித்த நோய் என்ன என்றால் நமது நிலை எமக்கு விளங்காமைதான். ஒருவன் ஞானசாஸ்திரங்களில் பலவற்றைப் பார்த்திருக்கலாம். அவ்வளவில் அவன் ஞானியாய் விடுகின்றான். அவன் செயல் சிவன் செயல் எனச் சொல்லப் போதிய ஆட்களும் கிடைத்துவிடுகிறார்கள். இந்தப் பைத்திய வியாதிக்கு நாவலர் இடம் கொடுக்கவில்லை. தாம் ஒரு அருள்கைவந்தவர் என்று பாசாங்கு பண்ணவில்லை.

நாவலர் தம் நிலையையும், தம் சுற்றுடலின் நிலையையும் நன்கு அறிந்தவர். அதனாலேதான் அவர் ஆறுவி

லிருந்து நித்திய கருமத்திலிருந்து புத்தகம் எழுத நேர்ந்தது.

பற்றுக்களை வழி செய்யும் நெறி வீண் நெறியும் அன்று; அருள்நெறியுமன்று. இடையாய நெறி. அதற்கு வேதநெறி என்று பெயர். ஒருவன் வீண் நெறியில் விழுந்து பாழாகாமல், அவனை அருள் நெறியாகிய சைவத்துறைக்குச் செலுத்தும் நெறி வேதநெறி. வேதநெறி தழைத்தோங்கினுல் மிகுசைவத்துறை விளங்கும்.

பற்றுக்கள் இரண்டு வகைப்படும். ஒன்று தீய பற்றுக்கள்; மற்றது தனக்கும் பிறருக்கும் நன்மை செய்யும் நல்ல பற்றுக்கள். முந்தியது நரக லோகத்தை அடைவிக்கும். பிந்தியது வேதநெறியில் நடந்தால் சுவர்க்காதி லோகங்களைக் கொடுக்கும்; அல்லாமல் பற்றுக்கள் கழிந்து வீட்டு நெறியை நாடுவதற்கு உபகாரமாயும் இருக்கும். நல்ல பற்றுக்களும் வேதநெறி பிறழ்ந்து சாதிக்கப்படுமானுல், குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசியதாகும்.

வருணுசிரம தர்மங்களும் குருசிஷ்ய பாரம்பரியங்களும் உள்ள காலத்திலே நல்லபற்றுக்களை வழிசெய்வது சுலபம். அவை பிறழ்ந்த காலத்திலே, எந்தச் சற்கருமத்தையாயினும், வேதநெறி பிறழாமல் நடத்துவதற்கு முயல்வது, அக்கினியாற்றை மயிர்ப்பாலத்தால் கடப்பதாய் இருக்கும். அதுவும் கலி ஐயாயிரத்துக்குப் பிறகானுல் சிந்திக்கவும் தேவையில்லை. கலி ஐயாயிரம் வரை வேதநெறியின் சாயல் ஓரளவுக்கு உண்டு என்று பாரத சம்பந்தமான ஓர் கதையும் உண்டு. நாவலர் கலி 4924-இல் பிறந்தவர். ஐயாயிரத்திற்கு முன்னமே போய் விட்டார்.

நாவலருக்கு வேதாகமங்களும் அவற்றின் வழிவந்த நூல்களும் உயிர்த்துணைகள். அவற்றில் சமயத்தை வளர்த்தல் நல்ல பற்று என்றும், புண்ணியம் என்றும் சொல்லப்பட்டது. நாவலர் சாத்திரங்களை முன்னிட்டுக்கொண்டு சைவத்தை விருத்தி செய்தலாகிய மகா யக்ஞத்தில்

குதித்தார். அவருக்கு வழிகாட்டிகள் சாத்திரங்களே. எத்தனையோ தாக்கங்கள் ஒன்றன்பின் ஒன்ருய் எதிர்ப்பட்டன. தாக்கங்கள் எதிருந்தோறும் நாவலர் சுடச் சுடரும் பொன் போலத் தமது பற்றுக்கள் மெல்ல மெல்ல நெகிழத் தமக்கு நோக்காகிக் கிடந்த சைவத்துறையை அணுகுவாராயினர்.

எதிர்ப்பட்ட தாக்கங்களைத் தமக்குக்கிடைத்த நல்ல பாடங்களாக உபயோகித்து உயர்ந்தமைதான் நாவலருடைய ஒப்பில்லாததான இரண்டாவது பெருமை. நாவலர் தமது நிலையை உணர்ந்தமை முதலாவது பெருமை என்ருேம். தம் நிலையாகிய நல்ல பற்றுக்களை விருத்தி செய்ய முனையும்போது பல தாக்கங்கள் எதிர்ப்பட்டன என்றும் சொன்ேேம். நாவலரை எதிர்த்த தாக்கங்களுள் முதலாவது தாக்கம் பொருட்பிரச்சினை.

நாவலர் தமது பிதிரார்ச்சிதத்தையே பெறவில்லை. பிதிரார்ச்சிதம் கொண்டு தானதருமம் செய்தற்கு ஸ்மிருதி இல்லை. அது விந்து வழியில் சந்ததிக்குரியது. தமிழ்நூல்களில் பொருள் வயிற்பிரிவு, தானதருமங்களைச் செய்தற்குத் தானே பொருள் சம்பாதிக்க வேண்டும் என்பதைக் காட்டுகின்றது. நாவலர் தாம் புத்தம்புதிதாக எழுதிய நூல்களை விற்று வந்ததையும், பார்சிவல் பாதிரியாருக்குத் தமிழ்ப் பண்டிதராய் இருந்து பெற்ற சம்பளத்தையுமே தமது சீவனத்துக்கு உபயோகித்தார். திருக்குறள் போன்ற பழைய நூல்களைப் பதிப்பித்துவந்த ஊதியத்தைத் தம் சீவனத்தின்பொருட்டு அவர் தீண்டுவதில்லை; சீவனத்துக்கு மற்றவர்களை யாசிப்பதுமில்லை; உபகாரங்கள் பெறுவதும் இல்லை. வேதநெறியில் தமது சீவனத்தை வைத்துக்கொண்டார்.

இவ்வாறு தமது சீவனத்துக்குப் பிறரைத் தீண்டாத நாவலர், தமது பற்றுக்களை விருத்திசெய்யப் பாரிய திட்டங்கள் போட்டார். பெருந்தொகைப் பணம் தேவை. அவரோ மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்; அயாசகர்.

"ஆவிற்கு நீர் என்று இரப்பினும் இரவின் நாவிற் கிளி வந்ததில்" என்ற வேத உண்மை தெரிந்தவர். பணத்துக்கு என்ன செய்வது!

பொருள் சிவபெருமானுடைய உடைமை. "அவர் அடிமையிடம் ஒப்பித்த பொருளை, அவர் கருத்தறிந்து அடிமை உபயோகிக்க வேண்டும்" என்ற உறுதியுள்ளவர் நாவலர். "ஒல்லும் வகையான் அறவினை" என்கின்றது தமிழ் வேதம். "கிட்டாதாயின் வெட்டென மற" என்கிருள் அன்னை. பொருளுக்கும் நமக்கும் உள்ள தொடர்பு என்ன என்ற பிரச்சினை நாவலர் உள்ளத்தில் குமுறியது. "காசு நல்குவீர்" என்று கேட்கத் தாம் ஆர்? என்பதும் அவர் அறிந்தது.

தமது நல்ல பற்றுக்களாகிய தர்மங்களை வெளியிடுவது, தம்மோடு தொடர்புபட்ட — தமக்குக் கடமையுள்ள— மாணவர் முதலியவர்களிடம் கொஞ்சம் கொஞ்சம் பணம் கேட்பது, பிடி அரிசியாயினும் வாங்குவது, செல்வர்களின் மனத்தில் இது தர்மம் என்று பட்டுத் தந்தால் வாங்குவது — என்றிங்ஙனம் தீர்மானங்கள் செய்தார்.

இத்தீர்மானங்கள் மனத்திருப்தியோடு கூடியவை என்று சொல்ல முடியாது. உள்ளீடான அருவருப்போடு கூடியவை ஆகலாம். தருமம் செய்வதற்குப் பிறரை எதிர் பார்க்க ஸ்மிருதி இல்லை. தம்முடைய ஒரு திருப்திக்குத் தானே, மற்றவர்களுக்குத் தர்மப்போதனை என்ற வேதனையும் நாவலருக்கு இருக்கலாம்.

இந்த நிலையில், இராமநாதபுரம் பொன்னுச்சாமித் தேவரும், சென்னையிலுள்ள செல்வப்பிரபுக்கள் சிலரும் நாவலரின் தர்மங்களை உணர்ந்தவர்கள்போன்று பெருந்தொகை உதவ முன்வந்தார்கள். சுற்றத்தவர்களின் பந்தத்தை விலகியிருக்கும் நாவலருக்குப் பொன்னுச்சாமித் தேவர் போன்றவர்களிடம் பணம் பெறுவது மற்ருெரு பந்தத்தைத் தேடிக்கொள்வதாய்,

'ஆற்றிற் கிடந்த முதலை கண்டஞ்சிப் போய்
ஈற்றுக் கரடியை எதிர்ப்பட்டவாறு'

ஆய் இருந்தது.

அன்றி, பிரபுக்கள் சிலர் தங்கள் துராசாரங்களை மூடிக்கட்டிப் பொய்ம்மதிப்புப்பெறத் தம்முடன் தொடர்பு வைப்பதுந் தெரிந்தது. நாவலர் விழித்தார். பதினுயிரக் கணக்கில் தருதற்கு வந்த சிலரிடம் பணம் வாங்க மறுத்தார். தமிழ் நாடெங்கும் முக்கிய ஸ்தலம்தோறும் வித்தியாசாலை தாபிக்க வேண்டும் — சைவப் பிரசாரகர்களை நியமிக்க வேண்டும் என்கின்ற பேராசை சுருங்கத் தொடங்கிற்று. இரு ஸ்தலங்களோடு வித்தியாசாலைத் தாபனம் நின்றது. பொருட்பிரச்சினை இல்லையேல் பாதிரிமார் போல நாவலரும் எங்கும் பாடசாலை தாபித்திருப்பார். நாவலரின் பொருட் பிரச்சினையை ஆராய்ந்தால் இக்காலப் பொருளாதார ஊழல்களை அறிவதோடு "அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம் புல்லார் புரளவிடல்" என்ற பொருளாதார மந்திரத்தின் இரகசியமுந் தெளிவாகும்.

பொருட்டாக்கத்துக்கு அடுத்தபடியில் நாவலருக்கு இரண்டாவதாக வந்த தாக்கம் மடங்கள் சுவாமிகளைப் பற்றியது. தமிழ் வளர்க்க — சைவத்தை விருத்தி செய்ய— என்று முனைபவர்கள், அக்காலத்தில் ஆதீனங்களின் — அதுவும் திருவாவடுதுறை ஆதீனத்தின் தொடர்பு இல்லையேல் ஒன்றும் செய்ய முடியாது. நாவலர் திருவாவடுதுறை ஆதீனத்தை அணுகினர். அது அவரை வரவேற்று வேண்டிய உபசாரங்கள், உபகாரங்கள் செய்தது. மற்றைய ஆதீனங்களும் நாவலரை நன்கு உபசரித்தன. ஒரு குறையும் இல்லை. ஆதீனங்கள் ஆறுமுகநாவலரை உபசரித்ததுபோல எந்த வித்துவானையும் உபசரித்ததில்லை. மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம்பிள்ளை பரியந்தம் வித்துவான்களெல்லாம் ஆதீனச்சாமிகளைச் சிவபெருமானின் பிரதிநிதிகள் என்று பாடிப் பரிசில்பெற்றுச் சீவனம்

செய்துகொண்டிருந்தார்கள். தம்பிரான்களையும், சோற்றுக் குவியல்களையும் வளைந்துகொண்டிருந்தார்கள். உள்ளே நுழைந்ததும் தெய்வ சிந்தனைக்கும், மடங்களுக்கும் வெகு தூரம் என்பது நாவலருக்குத் தோன்றியது. சாமிகள் சமயம் போதிக்கலாம்; சமயிகள் அல்லர். மடத்துச் சாமிகளைக் கும்பிட நாவலர் நாணினார். திராவிட மா பாடிய கர்த்தராகிய சிவஞான சுவாமிகளும், வேறு படித்தவர்களும் வாழ்ந்த மடங்கள் இப்படியாயினவோ என்று நாவலர் திகைத்தார். அக்காலத்திலிருந்த சுப்பிரமணிய தேசிகர் படிப்பும், ஒழுக்கமும் உள்ளவர். ஆனால், பிரபுக்கள் போன்று வாழ்ந்தவர். மடங்களின் போக்கு நாவலருக்குப் பிடிக்கவில்லை. அவருக்குண்டான, வெறுப்புத்தான் நான்காம் பாலபாடத்தில் மடம் என்ற பாடம். மடங்கள் நாவலருக்கு ஏதாவது பட்டங்களைக் கட்டி அவரைத் தமக்குக் கருவியாக உபயோகிக்க எண்ணின. நாவலர் இடம் கொடுக்கவில்லை. மடத்தொடர்பைச் "சொல்லாடார் சோரவிடல்" என்ற வகையில் கைநெகிழ்த்தார். மடங்கள் வெறும் சோற்று மடங்களாய் விட்டன என்பது இப்பொழுது மாயாவாத மடங்களும், சைவ மடங்களும் அரசியற் சூறுவளிகளுக்கு அஞ்சி ஒன்றுகூடிக் கைகோத்து மடங்கட்டுவதிலிருந்து நன்கு புலனாகும். அன்றித் தம் திருவடிகளை வணங்கி விபூதிப் பிரசாதம் பெறவேண்டியவர்களைத் தாம் வரவேற்றுவைத்து வலிந்து ஆசீர்வாதமும் வழங்குகின்றன மடங்கள்.

நாவலரை எதிர்த்த மூன்றாவது தாக்கம் தமது சுற்றுடலைப்பற்றியது. சீஷர்களும், குருமார்களும் நாவலரை ஒரு சுவாமியாக்க முயன்றார்களே தவிர அவருடைய கருத்துத்களிலோ சைவத்திலோ பற்று வைக்கவில்லை. நாவலருடைய உத்தம சிஷ்யர் என்று கருதப்படும் சதாசிவப்பிள்ளையிலேயே நாவலருக்குப் பிடிக்கவில்லை. அவரிடம் ஒப்பித்த சிதம்பர சைவப் பிரகாச வித்தியாசாலையையே 1872க்குப்பிறகு நாவலர் எட்டியும் பார்க்கவில்லை. தாய்நாட்டையே அருவருத்தார். யாழ்ப்பாணத்துச்

சைவப் பிரகாச வித்தியாசாலையை ஒரு ஒழுங்கும் செய்யாமல் விட்டுவிட்டார்.

"தருமம் என்று ஒரு பொருள் உளது" என்ற உணர்ச்சியுள்ள நாவலருக்கு வேறு செய்துவைக்கத் தக்கது ஒன்றும் தோன்றவில்லை. பற்றுக்கள் தளர்ந்தன.

"ஓகோ! இவ்வியாழ்ப்பாணத்தில் உள்ள கிறிஸ்து சமய குருமார் சைவ சமய குருமார் என்னும் இரு சமய குருமாருடைய கருத்தும் தத்தம் சமய பத்தியை வளர்த்தலின் இடத்ததன்று; தத்தம் வயிறு வளர்த்தலின் இடத்ததேயாம்" என்று யாழ்ப்பாணச் சமய நிலை என்ற புத்தகத்தில் 1872இல் எழுதினுர்.

யாழ்ப்பாணச் சமய நிலை நாவலரின் இரத்தக் கொதிப்பு; பற்றுக்களின் வீழ்ச்சி என்றும் சொல்லலாம். பார்சிவல் பாதிரியார் நாவலரிலே பெரிய மதிப்பும், அன்பும் உள்ளவர். அவர் நாவலரை "எனது குரு" என்று மரியாதை செய்பவர். நாவலர் படும் பிரயாசத்தைப் பல முறைகளிலும் பார்த்துத் "தலைக்கு மேலே கைகாட்டித் தமிழருக்காகக் கதறிக்கதறி மண்டை வெடித்துத் தாங்கள் சாவீர்கள்" என்று வேடிக்கை பேசுபவர்போல் நாவலருக்குப் புத்தி புகட்டுவது உண்டு. பார்சிவல் புகட்டிய புத்திமதியின் உண்மையை நாவலர் தமது ஐம்பதாம் வயதில் உணர்ந்தார்.

இந்தத் தாக்கங்களின் மேல் நாவலருடைய புண்ணிய விசேடத்தினுலே, தெய்வ சங்கற்பமான தாக்கமும் ஒன்று சேர்ந்தது. பெரியபுராண சூசனம் நாவலர் முழுமனம் வைத்துச்செய்த உயர்ந்த வேலை. அது இருபத்தொன்பதாம் வயசிலே ஆரம்பித்தது. அதில் ஈடுபடுந் தோறும் அவருக்குப் பெரிய நோய்கள் குறுக்கிட்டன. ஆறுமுறை நோய்கள் குறுக்கிட்டுத் தடைசெய்தன என்று கேள்வி. அவ்வளவில் நிறுத்திவிட்டார்; அவ்வேலை பூர்த்தியாகவில்லை. பசுகரணங்கள், பதிகரணங்களான மகான்களின்

சரித்திரங்களைப் பாசபந்திகளான பசுக்கள் விமர்சனம் செய்வது தகுதியன்று என்ற குறிப்பு நாவலருக்குத் தோன்றியது என்று கருத இடமுண்டு.

வருஷத்தில் பலமுறை நடராஜ தரிசனம் செய்யாமல் இருக்க முடியாத நாவலர், 1872க்கு மேல் தாய்நாட்டில் கால் வைக்கவில்லை. எடுத்த முயற்சிகளில் அதிகம் ஈடு படவில்லை. பெருங்காயம் வைத்த பாண்டம் போல் இருந் தார். வெளி முயற்சிகளில் ஈடுபட்டும், படாமலும் ஒரு வாறு காலம் கழிந்தது. பற்றுக்கள் தளரத் தளர நாவ லர் உலகத்தினின்றும் ஒதுங்கினர். நாவலர் தனித்தார். உண்மைச் சார்பை நாடினர். 1872க்கு மேல் நாவலர் சரிதம் ஆத்மீகமானது. சரித்திரம் எழுதியவர்கள் அப் பகுதியை எடுத்துக்கொள்ளவில்லை. அந்தப் பகுதிதான் நாவலர் சரிதத்தில் உயிர்ப்பகுதி. அதுதான் உண்மை நாயன்மார் மகிமையை ஒரு அளவுக்கு உணர்தற்கு உப காரமானது.

"மணி கொண்ட" என்ற பாட்டைப் பாடி அந்நிய மதத்தார் (வித்தியா)சாலை வருமேயானல் "நின் முன் யான் உயிர்விடுதல் திண்ணம்" என்று ஒருநாள் சொன்ன நாவலர் அந்திய காலத்திலே எடுத்த பற்றுக்களை மறந்து பற்றற்ருன் பற்றினைப் பற்றி நின்று,

> "அல்லிக் கமலத் தயனு மாலு மல்லாதவரு மமரர் கோனுஞ்
> சொல்லிப் பரவு நாமத்தானைச் சொல்லும் பொருளும் இறந்த சுடரை
> நெல்லிக் கனியைத் தேனைப் பாலை நிறையின் அமுதை அமுதின் சுவையைப்
> புல்லிப் புணர்வ தென்று கொலோ என் பொல்லா மணியைப் புணர்ந்தே"

என்ற திருவாசகத்தைப் படித்துப் படித்து உள்ளமுருக உரோமஞ் சிலிர்ப்பக் கண்ணீர் வாரப் பதைபதைத்துக் கொண்டிருந்தார்.

"மணிகொண்ட" என்ற பாட்டுக்கும் "அல்லிக்கமலம்" என்ற திருவாசகத்துக்கும் இடையில் நாவலர் சரித்திரம் நடந்திருக்கிறது.

நாவலர் வாழ்க்கை வைதிக சைவத்துக்கு வழிகாட்டி.

# நடராஜ வடிவம்

எமது போஷகருள் ஒருவரும்
இந்துசமயப் பேரறிஞனும் ஆகிய
காலஞ்சென்ற கலைப்புலவர்

## திரு. க. நவரத்தினம் அவர்கள்

சைவத் திருவுருவங்கள் எல்லாவற்றினும் கலை அழகிலும் சமயக் கருத்திலும் சிறப்பு உடையது நடராஜ வடிவமேயாம். கடவுளை நடராஜ மூர்த்தியாக வழிபடுந் தனிப்பெருமை தமிழ் மக்களுக்கே உரியதாகும். சிவனை இலிங்க உருவத்தில் வழிபடும் முறையானது, இந்திய நாடு முழுவதிலும் காணப்படுவதாயினும், அவன் தன்னைக் கூத்தப்பிரானாகை வணங்கும் வழக்கு பெரும்பான்மையாகத் தமிழ்நாட்டில் மாத்திரமே காணப்படுகிறது.

தமிழ் நாட்டுச் சிவாலயங்களிற் காணப்படும் நடராஜ வடிவங்கள் போன்றன பிறநாட்டு ஆலயங்களில் இல்லை. ஆனால், நடராஜ வடிவத்தைச் சில தன்மைகளில் மாத்திரம் ஒத்திருக்கும் நடனமூர்த்தங்கள் பிறநாட்டு ஆலயங்கள் சிலவற்றிற் காணப்படுகின்றன.

சாளுக்கிய அரசர்களது தலைநகராயிருந்த வாதாபிபுரத்தின் குகைக்கோயிற் சுவரில் 16 கரங்களுடைய ஒரு சிவதாண்டவ மூர்த்தங் காணப்படுகின்றது. இக்குகை அமைக்கப்பட்ட காலம் கி. பி. 577 எனக் கருதப்படுகின்றது. பல்லவ அரசர் காலத்திலே கட்டப்பெற்ற காஞ்சிக் கயிலாசநாதர் கோயிற் சுவரிலும் சிவதாண்டவ வடிவம் செதுக்கப்பட்டுள்ளது. ஆரியபுரம் என்னும் சாளுக்கிய நாட்டு நகரிலும் பத்துக் கரங்களுடைய ஒரு வடிவம் உண்டு. எல்லோரா குகைக் கோயில்களிலும் சிவதாண்டவ வடிவங்கள் காணப்படுகின்றன. மேலே கூறப்பட்ட வடி-

வங்கள் யாவும் கோயிற் சுவர்களில் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளனவேயன்றி வழிபாட்டுக்குரியனவன்று.

நடராஜ வழிபாட்டிற்கென்றே சிறப்பாக அமைந்துள்ள தலம் திருச்சிற்றம்பலம் எனும் தில்லைச் சிதம்பரமேயாகும். தில்லைவனம் எனக் கூறப்படும் சிதம்பரம் பதஞ்சலி முனிவர் காலத்துக்கு முன்பே அமைந்த ஓர் ஆலயம் என்பது கோயிற் புராணம் முதலிய நூல்களின் கருத்தாகும். பதஞ்சலி முனிவருக்கும் வியாக்கிரபாதருக்குந் தரிசனம் அளித்தருளும்பொருட்டே, சிவபெருமான் தில்லையில் திருநடனம் புரிந்தாரென்பது புராணங்களிற் கூறப்படும் வரலாருகும். பதஞ்சலி முனிவர் நந்தி அருள் பெற்ற சித்தருள் ஒருவர் என்று திருமூலர் திருமந்திரத்தில் கூறுகின்ருர்.

பதஞ்சலி முனிவரே யோகசூத்திரத்தையும், பாணினி வியாகரண பாஷியத்தையும் எழுதியவர். சரகர் வைத்திய நூலுக்கு ஒரு பாஷியமும் எழுதியுள்ளார். இவர் காலம் கி. மு. 150 ஆண்டு என அனுமானிக்கப்படுகின்றது. பதஞ்சலி முனிவர் மகதநாட்டினர் என்பது சரித்திர நூலார் கருத்து. அவர் தவமியற்றிய இடம் சிதம்பரம் என கோயிற் புராணங் கூறுகின்றது. புராண வரலாற்றின் படி பதஞ்சலி முனிவர் தில்லைக்கு வந்தபொழுது, அங்கு ஒரு சிவலிங்கமும், சிவகங்கை எனும் பொற்ருமரை வாவியும் இருந்தன. திருநிருத்த தரிசனம் தில்லைக்கு வந்த நெடுநாட்களுக்குப் பின்னரே அவருக்குக் கிடைத்தது. நாதாந்த நடனமாகிய பஞ்சகிருத்திய நடனத்தை அவர் இறைவனது அருளால் காணப்பெற்ருர்.

"எண்ணருங் காதல் கூரும் இருவருங்
காண ஞானக் கண்ணிணை நல்க."

எனக் கோயிற் புராணங் கூறுவதிலிருந்து பதஞ்சலியும், வியாக்கிரபாதரும் ஞானக்கண்ணல் திருக்கூத்துத் தரிசனத்தைக் கண்டார்கள் என்பதும் துணிபு.

சிதம்பரம், தில்லைவனம், திருப்புலியூர், கோயில், திருச்சிற்றம்பலம், பொன்னம்பலம் என்னும் பெயர்கள் சிதம்பரத்தையே குறிக்கும். பொன்னால் வேயப்பட்ட ஸ்தலம் என்பதனால் அதற்குப் பொன்னம்பலம் என்னும் பெயர் ஏற்பட்டது. சிதம்பரம் இருமுறை பொன்னால் வேயப்பட்டதென்பது சரித்திர முறையாற் கண்ட உண்மை. கி. பி. 907 - 953 வரை இருந்த 1ஆம் பராந்தக சோழன் சிதம்பரத்துப் பொன் விமானத்தைப் புதுப்பித்தான் என்று கூறப்பட்டிருக்கின்றது. ஆதலால், அவனுக்கு முன்னரேயே சிதம்பரம் பொன்னால் வேயப்பெற்றிருத்தல் வேண்டும். சிம்மவர்மன் என்னும் ஓர் அரசன் தன்னைப் பிடித்த நோயை நீக்கிக்கொள்ளும்பொருட்டு, சிதம்பரத்தை அடைந்தானெனவும், அங்குள்ள வாவியுள் மூழ்கியதன் பயனாக அவனது நோய் நீங்கிப் பொன்னிறம் அடையப்பெற்றமையால், அவன் இரணியவர்மன் என்னும் பெயரால் அழைக்கப்பட்டான் எனவுங் கோயிற் புராணம் கூறுகின்றது. எனவே, சிம்மவர்மனே முதன்முதல் சிதம்பரத்தைப் பொன்னால் வேய்ந்தவனாவான். சோழ அரசர் பரம்பரையில் சிம்மவர்மன் என்னும் பெயருடனாவது, இரணியவர்மன் என்னும் பெயருடனாவது அரசர்கள் இருந்தாரெனத் தெரியவில்லை. பல்லவ அரச பரம்பரையில் அரசர்கள் சிம்மவர்மன் என்னும் பெயருடனும், இரணியவர்மன் என்னும் பெயருடனும் காணப்படுகின்றனர். கி. பி. 436ஆம் ஆண்டில் அரசிருந்த பல்லவ அரசன் சிம்மவர்மன் எனப்படுவான். கி. பி. 710ஆம் ஆண்டில் இரணியவர்மன் என்னும் பெயருடன் ஒரு பல்லவ அரசன் இருந்தான் எனச் செப்புப்பட்டயங்கள் கூறுகின்றன. இவ்விரணியவர்மனுக்கு முன் தேவாரங்கள் பாடப்பெற்றன. தேவாரங்களில் பொன்னம்பலம் என்னும் சொற்றொடர் காணப்படுகின்றமையால், இவ்வரசனுக்கு முன்பே சிதம்பரம் பொன்னால் வேயப்பெற்றிருத்தல் வேண்டும். எனவே, கோயிற் புராணங் கூறும் இரணியவர்மனாகிய சிம்மவர்மனே சிதம்பரத்தைப் பொன்னால் வேய்ந்தவன் ஆதல் வேண்டும்.

அவன் காலம் கி. பி. 436 ஆகும். நாம் இதுகாறும் கூறியனவற்றிலிருந்து மாணிக்கவாசகர் காலத்தை கி. பி. 436ஆம் ஆண்டிற்கு முன்போடுதல் தவறு என்பது பெறப்படும். பொன்னம்பலம் என்னும் சொற்றொடர் திருவாசகத்தில் வருதலாலென்க.

நடராஜ வடிவம், சிவபரம்பொருளே சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் ஐந்து தொழில்களையும் முறையே பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்னும் ஐவகை மூர்த்திகளின் வழியாகச் செய்கின்றதென்பதைக் காட்டுவிக்கும். இக் கருத்தினை "உண்மை விளக்க" நூலாசிரியராகிய திருவதிகை மனவாசகங் கடந்தார் பின்வரும் வெண்பாவினால் விளக்கியுள்ளார்.

"தோற்றந் துடியதனிற் தோயுந் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமா
மூன்று மலர்ப்பதத்தி லுற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு."

இதன் பொருள்: டமருகந் தாங்கிய கையினால் உலக சிருட்டியையும், அபயகரத்தினால் காத்தலையும், அக்கினியேந்திய கையினால் மல சங்காரத்தையும், ஊன்றிய பாதத்தால் ஆன்மாக்களைக் கன்ம வினைக்கு ஏற்ற சுகதுக்கங்களை அனுபவிக்கப்பண்ணுதலையும் (மறைத்தல்), தூக்கிய பாதத்தினால் முத்தி அருளலையும் காட்டுகின்றதென்பதாம்.

நடராஜ வடிவம், ஸ்ரீபஞ்சாட்சரத்தால் அமைந்திருக்குந் தன்மையை அறிந்து அவ்வாறு அதனைத் தியானிப்பதும், ஞான சாதகர்களுக்குச் சொல்லப்பட்ட சாதனை முறைகளுள் ஒன்று. அது:

"ஆடும் படிகேணல் லம்பலத்தா னையனே
நாடுந் திருவடியி லேநகரங் — கூடு
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்"

என்னும் பாட்டால் அறியப்படும்.

இதன் பொருள்: மாணுக்கனே! பொன்னம்பலமுடையான் நிருத்தஞ் செய்கிற முறையைச் சொல்லுகிருேம் கேள். நின்ற பாதத்திலே நகாரமாகவுந், திருவுந்தியிலே மகாரமாகவுந், திருத்தோளிலே சிகாரமாகவுந், திருமுகத்திலே வகாரமாகவுந், திருமுடியிலே யகாரமாகவுங் கொண்டருளித் திருநிருத்தஞ்செய்வாரென்று அறிக என்பதாம்.

இது தூல பஞ்சாக்கரப் பொருளாகும். இஃதேயன்றி, சூக்கும பஞ்சாக்கரப் பொருளாகவும் நடராஜ வடிவம் தியானிக்கப்படுகின்றது. அதனைப் பின்வரும் வெண்பாவில் காண்க,

"சேர்க்குந் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகர
மார்க்கும யகர மபயகரம்—பார்க்கிலிறைக்
கங்கி நகர மடிக்கீழ் முயலகனுர்
தங்கு மகரமது தான்."

இதன் பொருள்: ஒலிக்கின்ற டமருகமேந்திய கரத்திலே சிகரமாகவும், வீசிய கரத்திலே வகாரமாகவும் அமைத்த கரத்திலே யகரமாகவும், அங்கியேந்திய கையில் நகாரமாகவும், முயலகனுர் தங்கும் அடிக்கீழ் மகரமாகவும் இறைவன் கொண்டருளித் திருநிருத்தஞ் செய்வான் என்று அறி என்பதாகும்.

இதுகாறும் சிறப்பித்துக்கூறிய நாதாந்த நடனமெனும் ஆனந்தத் திருக்கூத்தால் உலகிற் காணப்படும் அசைவுகள் யாவுஞ் சிவன் அருளாலே நிகழ்கின்றனவென்பதும், அத்தகைய நிகழ்ச்சியானது ஆன்மாக்கள் பந்தத்திலிருந்து நீங்கி முத்தி இன்பத்தைப் பெறும் பொருட்டே என்பதும், அவன் தன் திருக்கூத்து நிகழுமிடந் தூலமாகிய திருச்சிற்றம்பலமேயன்றி உலகமாகிய திருக்கோயிலுஞ், சூக்குமமாகிய அன்பர்களது இருதயகமலமுமாகுமென்பதும் அறியற்பாலதாம். இத்தத்துவஞானக் கருத்துக்களை வடிவுறக் காட்டும் வடிவம் நடராஜ வடிவத்தை விட வேறென்றுமில்லை. தத்துவஞானப் பொருளும், கலைச்

சிறப்பும் ஒருங்கேயமைந்து கடவுள் ஞானம், கடவுள் பக்தி ஆகிய இரண்டினையும் வளர்த்தற்கு ஏற்றதாகிய திருவடிவம் இது ஒன்றேயாகும்.

நடராஜ வடிவத்தினைச் சூழ்ந்திருக்கும் வட்டந் திருவாசி எனப்படும். இது ஓங்காரமாகிய பிரணவத்தைக் குறிக்கின்றதென்ப. அன்றியும், இது பிரகிருதிப் பொருளாகிய இயற்கையைச் சுட்டுகின்றதெனக் கொள்வதும் ஒரு கருத்தாகும்.

உண்மைக் கலை இன்பமானது. சிவாநுபவ இன்பத்தினது இயல்பு வாய்ந்ததெனக் கூறப்படும் உண்மையை, நடராஜ வடிவத்தின் முன் நின்று அது உணர்த்தும் நாதாந்த நிலையையும், கலை வனப்பையும் ரசிக்கும் ஆற்றல் வாய்ந்த ஒரு ரசிகனே அறிவான். "அழகிய பொருள் ஒன்று எஞ்ஞான்றும் மகிழ்ச்சியளிப்பதாகும்" என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுவதுபோல, பார்க்குந்தோறும் பார்க்குந்தோறும் இன்பத்தையளிக்கும் பான்மைத்தாகிய திருவுருவம் தமிழ்நாட்டில் நடராஜ வடிவமேயாகும். டாக்டர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்கள் நடராஜ வடிவத்தினைப்பற்றி ஆங்கிலத்தில் கூறியுள்ள ஒரு கருத்தினை இங்கு தமிழில் கூறி இக்கட்டுரையை முடிக்க விரும்புகின்றேன்.

"ஒரு கூட்டத்தார்க்காவது, ஒரு நூற்றுண்டைச் சார்ந்த சிந்தனையாளர்க்காவது ஏற்புடைத்தாகலின்றி எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலும் உள்ள தத்துவ ஞானிகளாலும் பக்தர்களாலும் ஏற்றுக்கொள்ளப்படும் வண்ணம், தத்துவ ரூபம் காட்டுவதும், மனிதவாழ்க்கையில், ஒன்றோடொன்று ஒவ்வாமல் சிக்குண்டுள்ள வியவகாரங்களுக்கு வழிகாட்டும் இயல்பினதும், இயற்கையின் கோட்பாடாய் விளங்குவதுமாகிய இத்தகைய உருவத்தை, முதற்கண் தமது தியானத்தால் தோற்றுவித்த கலைஞான இருஷிகளின் ஆழ்ந்த சிந்தனு சக்தியும், கருணையூற்றும், என்றிவற்றின் பெருக்கு எத்தனை வியப்

பினைத் தருகின்றது. தமது ஞானயோகக் காட்சியை உருவமாகச் செய்ய முயலுவார்க்கெல்லாம், இந்த நடன சொரூபமானது தன்கண் தோற்றும் சக்தி, அழிக்கும் சக்தி, அருளுஞ் சக்தி என்னும் இவற்றின் விளக்கத்தால் மிக்க மேன்மையுடையதாகவே தோன்றல் வேண்டும்.

இத்தகைய தத்துவ நிறைவுங் கலைவனப்பும் நடராஜ வடிவத்திற் காணப்பட்டமையாலன்றோ அப்பர் சுவாமிகள்:

குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மானிலத்தே.”

என்று பரவசப்பட்டுப் பாடியுள்ளார்.

○ ○ ○

## தென்பலவையில்

புதிதாக எழுந்தருளி இருக்கும் பொற்புடைக் கூத்தனைக் கண்குளிரக்கண்டு களிப்பெய்திப் பாடியது.

“அச்சமொழித் தோம்பபய வரதம் காட்டி
அகிலமெலாம் படைக்குமிட மாரம் காட்டி
நச்சுமலம் சுட்டழிக்கும் அனலைக் காட்டி
நம்வினைதுய்ப் பித்துமறை வலக்கால் ஊன்றிப்
பிச்சனென, முத்தியருள் இடக்கால் வீசிப்,
பிரபஞ்ச லீலையயர் பெம்மான் நிர்த்தம்
இச்சகத்தில் யாம்காண என்னோ நோற்றோம்?
இன்பநிலை எய்தினோம்! எமக்கார் ஈடே?”

— ஓர் உள்ளூர்ப்புலவர்.

# ‘வாழ்வு’ அளிக்கும் வாசகம்

அகில இலங்கை அருள்நெறி மன்றத் தலைவர்

முதலியார் திரு. செ. சின்னத்தம்பி அவர்கள்

தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லல்அறுத்து ஆனந்தம் ஆக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

கல்லினும் வலியது நெஞ்சு; இரும்பினும் கூடக் கடுமையது நெஞ்சு. இந்நெஞ்சு உருகுவது எளிதில் இயலாது. நெஞ்சக் கன கல் உருக உருக ஒருவன் வாழ்கின்றான்—வளர்கின்றான்' நெஞ்சக் கல் ஒருவனுக்கு நெகிழவில்லையோ அவன் வாழ்கின்றான் என்று சொல்லப்படினும் உண்மையில் அவன் வாழவில்லை—நிச்சயமாக மனிதனாக வாழவில்லை என்று சொல்லிவிடலாம். ஈர நெஞ்சே நல்வாழ்வின் வித்து; இளகிய உள்ளத்தில்தான் அன்பு முகிழ்த்து அருள் மலரும். மனித உள்ளம் நெகிழ நெகிழ—இளக இளக—உருக உருக—அவ்வுள்ளத்தில் தெய்வத்தன்மையும் மெல்ல மெல்ல வேர்கொண்டு வளரத் தொடங்குகின்றது; நானே எல்லாம்—என் அறிவே எல்லாம்—என்ற ஆங்காரம் (Egotism) மெல்ல மெல்லத் தேய்ந்து, தெய்வம் என்பதோர் சித்தம் ஒளிரத் தொடங்கும்; மண்நோக்கி வாழ்ந்த வாழ்வு விண் நோக்கும் வாழ்வாக மாறுதலடைகின்றது. இந்தப் புனிதமான மாறுதலை உண்டாக்கி அதன் விளைவாகிய எல்லையில் இன்பப் பேரூற்றை நெஞ்சிற் சுரந்து பெருகச் செய்வதே சமய சாதனைகளின் நோக்கமாகும்.

“கல்நார் உரித்து என்ன என்னையும் தன்கருணையினால்
பொன்னார் கழல் பணித்து ஆண்டபிரான்” என்றும்,
“கல்லை மென்கனியாக்கும் விச்சைகொண்டு என்னை
நின் கழற்கு அன்பன் ஆக்கினாய்” என்றும்,
“கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை வெள்ளத்து
அழுத்தி வினைகடிந்த வேதியனை” என்றும்,

தனது நெஞ்சத்தில் நிகழ்ந்த மாறுதலை—கல்நெஞ்சு கனியாக மாறிய புனித வரலாற்றை—விளக்குகின்றார், மாணிக்கவாசகப் பெருமான்.

“இருப்பு நெஞ்ச வஞ்சனேன்” என்றும்,
“இரும்பின் பாவையனைய யான்” என்றும்,

"இரும்புதரு மனத்தேனை ஈர்த்து ஈர்த்து என்பு உருக்கிக்,
கரும்புதரு சுவை எனக்குக் காட்டினை" என்றும்

தனது நெஞ்சை இரும்பின் தன்மையில் வைத்துப் பேசுவதையும் காண்கின்றோம்.

இரும்பை இளகச் செய்வதற்கும், உருக்குவதற்கும் நெருப்பு வேண்டும். வான்பழித்து இம்மண் புகுந்து மணிவாசகப் பெருமானை ஆட்கொண்ட வள்ளல் தனது அருள் நோக்கெனும் ஞானத்தீயினால் மணிவாசகருடைய இரும்பு மனத்தை உருக்கித் தள்ளிவிட்டார். மணிவாசகனாருக்குக் கிடைத்த பேறு நமக்குக் கிடைக்குமா? எங்கள் நிலையில் எங்களுடைய இரும்பு மனங்களை உருகச் செய்வதற்கு வழி யாது? கருவி யாது? இவ்வாறு எங்கள் முன்னோரிற் பலர் சிந்தித்துத் தக்கதொரு கருவியையும் கண்டுபிடித்தனர். அந்தக் கருவிதான் நெஞ்சுருக்கும் திருவாசகமெனும் ஞான நெருப்பு என்க. இதனை ஒரு பழம்பாடல் தெரிவிக்கின்றது.

"உருப்பட் டுமக்கொன்று சொல்லுகின் றோம்இவ் வுலகில்உள்ளீர்!
கருப்பட்ட கட்டைக் கழித்திட வேண்டிக் கலங்கியுள்ளம்
திருப்பட்ட மேனித் திருவாதவூரர்தம் செஞ்சொல்எனும்
நெருப்பிட் டுருக்கிக் கொண்மின் இரும்பாகிய நெஞ்சினையே."

பழங்காலத்தில் சைவ நன்மக்கள் மணிவாசகப் பெருமானிடத்தும் திருவாசகத்தினிடத்தும் வைத்திருந்த பேரன்பிற்கு அளவே இல்லை. மாணிக்கவாசகர் அறிவாற் சிவனே என்பது சைவ உலகத்தின் கொள்கை. இக்காரணம்பற்றியே சிவபெருமானுக்குச் செய்யும் சிறப்புகள், விழாக்கள் யாவற்றையும் திருப்பெருந்துறையிலே மணிவாசகருக்கு இன்றும் செய்து வருகின்றார்கள். அதுமட்டுமா? திருவாசகத்தையே சிவபெருமானுக்குச் சமானமாகவும் கருதி வந்திருக்கின்றார்கள். சிவபூசைக்குப் பதிலாகத் திருவாசக பூசை செய்யும் வழக்கம்கூட சைவ உலகத்தில் உண்டு. திருவாசகத்துக்கே அமைந்த தனிச்சிறப்பு இது; இத்தகைய பெருமை மற்றெந்த நூலுக்கும் இல்லை.

சைவ உலகத்தின் ஒப்புயர்வற்ற தனிப்பெரும் ஞான–அருள்–நூல், திருவாசகம்; தமிழர் தம் தவநூல், உலகிற்கு ஒன்றே ஞாயிறு போன்று ஒளிரும் ஒரு தனிப்பெரும் பத்திநூல்.

வடமொழியிலே உயர்ந்து விளங்கும் உபநிடதங்கள், பகவத்கீதை போன்ற நூல்களுக்கு ஒப்பாகத் தமிழில் எந்த நூலைக் கூறலாம் எனத் தமிழறியாச் சிலர் வினவுவது உண்டு. திருவாசகத்தில் ஒரு வாசகத்தையேனும் அநுபவித்தவர்கள் நாவில்

இக்கேள்வி எழ நியாயமில்லை. எந்த அநுபூதிப் பேருச்சியில் உபநிடதங்கள் பிறந்தனவோ அதே அநுபூதிப் பேருச்சியில்தான் திருவாசகமும் பிறந்தது. திருவாசகப்பாடல்கள் மணிவாசகப் பெருமானுடைய சிவாநுபவ நிறைவில் பொங்கித் ததும்பி வெளிப்பட்ட அமுத வெள்ளமாகும். மாசற்ற சோதியில் மலர்ந்த மலர்ச்சுடராகிய வாசகத்தை ஓதும் அன்பர் அனைவர்க்கும் அக இருள் நீங்கும்; அருள் அநுபவத்தில் ஆசையும் பெருகும். கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகி ஓதும் நெஞ்சில் வஞ்சம் கெடும்; வேகங்களெல்லாம் கெடும்; முந்தை வினைமுழுதுங் கூட ஓயும்; 'செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள் பால் எங்குமிலாததோர் இன்பம்' நம்பாலதாகும்.

திருவாசகம் மந்திரசக்தி வாய்ந்த அருள்நூல். திருவாசகத்திற்கு மேலாக மந்திரம் எதுவும் இல்லை. திருவாசகத்தின் ஒவ்வொரு சொல்லிலும் மந்திரசக்தி—அருளாற்றல்—விம்மிக் கிடக்கின்றது. மின்சாரம் ஓடும்கம்பியின் எந்தப்பாகத்தில் தொட்டாலும் மின்சாரம் நம்மீது பாய்வதுபோல், திருவாசகப்பாடலில் எந்தப் பாடலை நாவால்—செவியால்—மனத்தால் தொட்டாலும் நம்முள்ளத்தில் அருள் ஊற்றுப் பாய்ந்து பெருகும். இந்த அற்புதமான அருளநுபவத்தைத் திருவாசகத்தில் திளைத்த பெருமக்கள் பலர்—போப்பையர் போன்ற அயல்மொழியாளர்களும்—அயல்மதத்தவர்களுங்கூடப் பெற்றிருக்கின்றார்கள். திருவாசகத்தேனை உண்டு உண்டு அதில் திளைத்த இராமலிங்க அடிகளாரின் திருவுள்ளத்திலிருந்து ஊற்றெடுத்த பல உருக்கமான பாடல்கள் திருவாசகத் திருமுறையின் அற்புத ஆற்றலுக்குச் சான்று வழங்குகின்றன.

வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழுது அங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்கும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில்இங்கு நானடைதல் வியப்பன்றே.

வாசகத்தைக் கேட்ட கொடிய வனவிலங்குகளும் கீழ்ப்பறவைச் சாதிகளும்கூட மெய்ஞ்ஞான நாட்டமுறும், என்ற அளவிற்கு வாசகத்தின் ஆற்றல் உயர்ந்து நிற்கிறது என்கின்றார்.

......................வாசகத்தில்
ஒருமொழியே என்னையும்என்
உடையனையும் ஒன்றுவித்துத்
தருமொழியாம் என்னில்இனிச்
சாதகமேன் சஞ்சலமேன்
குருமொழியை விரும்பிஅயல்
கூடுவதேன் கூறுதியே.

என்ற பாடல் சிந்திக்க வேண்டியது. இத்தகைய ஆற்றல் வாய்ந்த ஒரு சாதனம் நம் கைவசம் இருக்க, அயல் நாட்டிலிருந்து சிலர் இந்நாட்டிற் போந்து ஏதேதோ புதிய புதிய பிரார்த்தனை முறைகளையும்—பாடற் குப்பைகளையும் எங்கள் வாலிப சமுதாயத்தில் பரப்பி, தெய்வத்திருவாசகம் முதலிய திருமுறைகளின் சிறப்பை மூடி மறைத்து வருகின்றனர். எங்களுக்குத் திருவாசக முதலாம் திருமுறைவாசகங்களிருக்கும்போது, வேறு வாசகங்கள் எதற்கு? என்ற குரலை எழுப்பி, இந்த நவீன இயக்கத்தினரை எதிர்த்துப் போராடாது விட்டால், நெல்விதைக்கும் பொருட்டுப் பண்படுத்தப்பட்டிருக்கும் நிலத்தில் புல் விதைக்கவிட்ட கதையாக முடியும் என்க. ஆகவே நாடு முழுமையும் திருமுறை முழக்கம் செய்யவேண்டும். இரும்புதரு மனமுடைய சமுதாயத்தைத் திருவாசகத்தினால் ஈர்த்து ஈர்த்துக் கரும்புதரு சுவை காட்டும் கைங்கரியம் ஒன்றே இந்த நாட்டில் இப்போது சைவப் பெரியார்களும், சங்கங்களும் செய்ய வேண்டிய முதற் கடமையாகும்.

'வாழ்வு' அளிக்கும் வாசகம் இருப்ப, பிறவாசகங்களை யாசித்து நிற்கும் அவல நிலை உடனே நீக்கப்படல்வேண்டும்.

அருள்வாத வூரர்சொல் அம்பலவர் தாமெழுதும்
திருவா சகத்தைத் தெளிந்தால்—கருவாம்
பலகதியும் நீங்கிப் பரமர் அருளாலே
சிவகதியும் உண்டாம் சிவம்.

## ஒப்புயர்வற்ற ஒருதனிநூல் திருவாசகம்

"தன்னைக் கற்பார் உள்ளத்தை உருகச் செய்து அவரைப் பேரின்பப் பெருக்கின் கண் ஆழ்த்துதற்கட் பிறிது எந்நூலுக்கும் இல்லாத அழகினை இத்திருவாசகநூல் உடைமையால், இதனினும் மேலான அழகினைப் பெற்ற வேறொரு நூல் இல்லை என்பது தேற்றமாம். அன்பு பொதிந்த இதன் செய்யுட்களை ஓதுந் தோறும் நினைக்குந்தோறும் நெஞ்சம் நெக்குருகக் கண்ணீர் பெருக நாவுரை குழற மெய்ம்மயிர் சிலிர்ப்பப் பேரின்ப வெள்ளங் கிளர்ந்து எழுதல் யாவர் மாட்டும் காணப்படுதலானும் தொடர்புபட்டு நிகழும் இத்தகைய பேரின்ப நிகழ்ச்சி மற்றைய நூல்களை ஓதுவோர் நினைப்பாரிடத்துக் காணப்படாமையானும் இத்திருவாசகம் ஒன்றே ஏனை நூல்களுக்கில்லாத அழகினை உடைத்து என்பது தெளியப்படும்"

—மறைமலை அடிகள்.

# சிவநெறியின் மூல தன்மம்

காஞ்சிபுரம், சித்தாந்த சிகாமணி

**திரு. க. வச்சிரவேல் முதலியார், B. A., L. T. அவர்கள்**

**1. சிவநெறியாவது யாது?**

உலகம் தோற்றம், நிலை, இறுதி என்னும் மாறுதல் உடையது. இம் மாறுதல் அறிவியல் துறைகளால் அளவிட்டு அறியக் கூடிய நியத விதிகளுக்கு உட்பட்டு, ஒழுங்கும் முறை பிறழாமையும் ஆகிய இயல்புகளை உடையதாய் நிகழ்கின்றது. ஆதலின் இவ்வுலகு காரணகாரிய நியதிக்கு உட்பட்டு மாறும் உள் பொருளென அறிஞர்களால் துணியப்படுகின்றது. படவே, இவ்வுலகை நியமித்து ஒழுங்குபட நடாத்திவரும் முதற்பொருள் உண்டென்பது பெறப்படும். மேலும் இவ்வுலகு அருவாய்ப் புலப்படாத காரண நிலையை எய்தும்போது, அம் முதற்பொருள் இதற்கு ஆதாரமாய் நிலைத்து நின்று, இதனை மீள உருவாய்ப் புலப்படும் காரியநிலையை எய்துவிக்கும் என்பதும் உய்த்து உணரப்படும். அம் முதற்பொருள் இவ்வாறு நம்மனோரால் உய்த்துணரப்படுவதாய் நம் உணர்வில் தட்டாது அப்பாற்பட்ட பொருளாய் இருத்தலின் அதனை அறத்தின்வழி நின்று தலைப்பட்டுணர்ந்த பெருமக்கள் கடவுள் என்னும் காரணப்பெயரால் குறித்தனர். கடவுள் என்னும் சொல் யாவருணர்வையும் செயலையும் கடந்தது, உயிர்களால் எட்டப்படாத நிலையினை உடையது எனப் பொருள்படும்.

இங்ஙனம் மெய்யுணர்ந்தோர் தலைப்பட்டுணர்ந்து இன்புறுவதாய், ஏனையோர் உய்த்துணர்ந்து வழிபடுதற்கு உரியதாய் உள்ள உலக முதற்பொருளாகிய கடவுளைச் சிவமெனத் தெளிந்து வழிபடும் நெறியே சிவநெறி எனப்படும்.

> "சிவனெனும் ஓசையல்ல தறையோ உலகில்
> திருநின்ற செம்மை உளதே"?

என்னும் அப்பர் அருள்மொழியைக் கருதுக.

**2. சிவம் என்பதன் பொருள்:**

பெரியோர்கள் உலக முதற்பொருளுக்குக் கடவுள், இறைவன், முதல்வன் என்றாற்போலப் பல பெயர்களையிட்டு வழங்கி வந்துள்

ளனர். அப்பெயர்கள் அம் முதற்பொருளின் ஒவ்வோரியல்பை நினைவூட்டுவன ஆகும். கடவுள் என்னும் பெயர் முதற்பொருளின், எட்டாத, உலகினை இறந்து நிற்கும் இயல்பினை அறிவிக்கும் என்பது மேலே காட்டப்பட்டது. இறைவன் என்பது 'எப்பொருளிலும் தங்குபவன்' என அவன்றன் எங்குமுள்ள நிலைமையைக் குறிக்கும். முதல்வன் என்பது, எப்பொருட்கும் முற்பட்டு நின்று, அதனைத் தொழிற்படுத்துபவன் என, எல்லாவற்றிற்கும் தான் சார்பாயிருந்து நடாத்தும் வினை முதலாந் தன்மையை உணர்த்தும். முதல்வன் என்னும் பெயர் குறிக்கும் இந்நிலைமையினை வடமொழியில் பரம ஆதார நிமித்த காரணன் என்னுந் தொடராற் குறிப்பர். இப்பெயர்களைப் போலச் சிவம் என்னும் பெயர் முதற் கடவுளது எத்தகைய மாறுதலும் இல்லாத தூய பேரின்பப் பொருளாய் அனுபவப்படுந்தன்மையை உணர்த்துவதாகும். இது திருவள்ளுவர் வழங்கிய செம்பொருள் என்னும் சொல்லோடு ஒத்த பொருண்மையை உடையது.

உலகம் பெண், ஆண், அலி எனும் பெற்றியதாய் உள்ளது. ஆதலால், உலகத்திற்குக் காரணமாயுள்ள முதற்பொருளும், உலகப் பொருள்களுள் ஒன்று அல்லதாய் வேறுயினும், பெண், ஆண், அலி என எதன்கண்ணும் வைத்துப் பேசுதற்கு உரியதுமாகின்றது. ஆதலின், முதல்வன் சிவநெறிக்கண், சிவன் என ஆண்பாற் சொல்லாலும், சிவை (சிவா) எனப் பெண்பாற் சொல்லாலும், சிவம் என ஒன்றன்பாற் சொல்லாலும் ஒப்ப வழங்கப் படுவன். "பெண் ஆண் அலி எனும் பெற்றியன் காண்க!" என்பது திருவாசகம்.

### 3. சிவம் என்பது சிறப்புப்பெயர் ஆதற்குக் காரணம்:

சிவநெறியில் சிறப்பாகக் கொள்ளப்படும் இரண்டு அடிப்படை உண்மைகள் உள்ளன. அவை:

(i) கடவுள் உயிர்களுடைய அறிவாற்றலைக் கடந்து அப்பாற்பட்ட பொருளாயினும், அது மெய்யுணர்வு நிலையில் தூய பேரின்பப் பொருளாய் அனுபவிக்க வருவது.

(ii) அத்தகைய உண்மையனுபவத்தை இம்மையிலேயே எய்திய எய்தும் பெருமக்கள் உளர் எனும் சிவையாகும். ஆதலின், கடவுளை உண்மை அனுபவம்பற்றி வழங்குவோர், சிவம் எனவும், செம்பொருள் எனவும் சிறப்பித்துக் கூறுவாராயினர். ஏனை நெறிகளில்

கடவுளுக்கு இடப்பட்டு வழங்கும் பெயர்கள் கவியுணர்வு, கலை யுணர்வு, உய்த்துணர்வு என்பவற்றை மட்டும் கொண்டு எழுந் தனவாக இருத்தல் அறியத்தக்கது. இதனால், சிவநெறி ஒன்றே உண்மையனுபவம் பற்றியது ஆதல் தெளியப்படும்.

இனி, சிவன் என்னும் சொல்லின் பொருளை,

"குறைவிலா மங்கலக் குணத்தன் ஆதலின்
நிறைமலம் அநாதியின் நீங்கி நிற்றலின்
அறைகுவர் சிவனென அறிவின் மேலவர்"

என்னும் காஞ்சிப்புராணச் செய்யுளால் உணர்ந்து கொள்க. மங்கலக்குணமாவது தோற்றக் கேடுகளின்றி நித்தமாய், விகார மின்றிச் செம்பொருளாய் நிற்றல்.

## 4. சிவநெறியின் விரிந்த நோக்கு :

திருவாதவூரடிகள் முதல்வனைப் "போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே!" எனவும், "பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே!" என வும் அழைத்துள்ளார். இவற்றிலிருந்து முதல்வன் (i) உயிர் களின் உணர்வின் முதலாக உளன் என்பதும், (ii) எல்லா உயிர்களை யும் உடனாய் நின்று தொழிற்படுத்தி, அவற்றின் பாசப்பற்றைப் படிமுறையால் மெலிவித்து, தன்னுணர்வை உணர்வை (self - consciousness) வளர்த்து வரு கின்றான் என்பதும் விளங்கும். பாரிக்கும் ஆரியனே என்னுந் தொட ரில் பாரித்தல் என்பது வளர்த்தல் என்னும் பொருளைக் குறிக்கும்.

"தெய்வம் சிவனே, சிவன் அருள் சமயம் சைவம், சிவத்தொடு சம்பந் தம் என்றான்" எனத் திருச்சிற்றம்பல அடிகள் கூறுகின்றார். மேலே கூறிய முதல்வன் இயல்பை மனத்துட்கொண்டு பொது வாக நோக்கினால், எல்லா உயிர்களும் சிவசம்பந்தம் உடைய வையே ஆம். ஆதலின் யாவும் சைவமே ஆம்.

இப்பேருண்மையை உலகிற்கு மிக்கெடுத்து அறிவுறுத்தும் திருவவதாரம் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவவதாரம் ஆகும். "தாவில் சராசரங்களெலாம்-சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதாரஞ் செய்தார்" என்னும் சேக்கிழார் அடிகள் வாய்மொழி குறிக் கொளற்பாலது. இவ்வுண்மையைத் திருஞானசம்பந்தர் புத்தர் களுக்குப் போதித்து அவர்களை அடிமை கொண்டார் என்பது பெரியபுராண உண்மை வரலாறுதலும் உளங்கொளற்பாலது.

திருஞானசம்பந்தர் மதுரையிலிருந்து திரும்பியபோது திருத்தெளிச்சேரி என்னும் ஊர்வழியாகப் போதிமங்கை என்னும் இடத்திற்கு வந்தார். அப்போது அங்கிருந்த புத்தர்கள், சாரிபுத்தன் என்பான் தலைமையில், திருக்கூட்டத்தில் இருந்த ஓர் அன்பருடன் வாதம் செய்து தோற்றனர். பேச்சில் தோற்றனரேனும், சிவநெறியின் பெருமையைத் தெளியமாட்டாது மயங்கினர். அவ்வமயத்து, திருக்கூட்டத்து அன்பர் அவர்களைத் திருஞானசம்பந்தர் திருமுன்பு உய்த்தார். திருஞானசம்பந்தர் அவர்களை நோக்கி, "நிற்பனவும் சரிப்பனவும் சைவமே ஆம்" என உறுதிமொழி உரைத்தருளி அவர்களை உய்யக்கொண்டார் என்பது அவ்வரலாறு.

இவ்வரலாற்றால் 'எல்லா உயிர்களும் சைவமே ஆம்' என்னும் அடிப்படைப் பேருண்மை தெளியப்படும். ஆயினும், உயிர்கள் தமக்கு இயற்கையேயுள்ள சிவசம்பந்தத்தை முதல்வன் அருளாசிரியனாய்ப் புறம்போந்து உணர்த்தினலல்லது உணர்வதில்லை. உணராமையால், அவை தம்மை ஒரு பொருளென்றே உணராதனவும், தம்மைப் பொருளென்று உணரினும் தாம் சிவசம்பந்திகள் என உணராதனவுமாய்ப் பிறப்பிறப்புக்களுட்பட்டு வினையைப் பெருக்கித் துன்புற்று வருவன ஆயின. இனி, இவ்வாறன்றித் திருவருள் விளக்கத்தால் தம்மைச் சிவசம்பந்திகள் என்றுணர்ந்து, அச்சிவத்தை மெய்யுணர்வால் தலைப்பட்டுணர்ந்து இன்புறுதற்கு வேண்டும் செய்தி முறைகளை அறிந்து ஒழுகுவோரே சைவர் எனப்படுவர். எல்லோரும் பொதுவகையால் சிவனடியாரே ஆயினும், சிறப்புவகையால் நோக்கும்போது சைவ சீலர்களே சீர் அடியார் எனப்படுவர். "உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீர் அடியோம்" என்னும் திருவெம்பாவையின் உள்ளீடு அறியத்தக்கது.

இத்தகைய சீர் அடியார் கடைப்பிடித்தொழுகும் மூல தன்மம்,

> "எவ்வுயிரும் நீங்கா துறையும் இறைசிவனென்(று)
> எவ்வுயிர்க்கும் அன்பா யிரு"

என்னும் விதி ஆகும். இவ்விதி சைவசமய நெறி என்னும் அரிய நூலில் கொடுக்கப்பட்டுள்ளது. இது சிவநெறியின் அடிப்படை உண்மையை ஆதாரமாகக்கொண்டு எழுந்த மூல அறமாகத் திகழ்தல் சிந்தித்தற்கு உரியது.

"ஈசனுக் கன்பில்லார் அடியவர்க் கன்பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்
பேசுவதென் அறிவில்லாப் பிணங்களை"

என்னும் சிவஞான சித்தி இங்கு அறியத்தக்கது.

"காமுகனுவான் ஒருவன், ஒரு வனிதையிடத்து அன்புடையன் என்பது, அவள் ஒக்கலைக் கண்டுழி நிகழும் அன்பின் அளவு பற்றியே தெளியப்படும்; அதுபோல ஈசனுக்கு அன்புடைமை அவன் அடியரைக் கண்டுழி நிகழும் அன்பின் அளவுபற்றியே தெளியப்படும். ஆகலான், அடியவர்க்கன்பில்வழி ஈசனுக்கன்புடையார்போல் ஒழுகுதல் நாடகமாத்திரையே பிறிதில்லை என்பார் ,அடியவர்க் கன்பில்லார் ஈசனுக் கன்பில்லார் என்றும், எவ்வுயிர்க்கண்ணும் உளனுகிய ஈசனிடத்து அன்புடையார்க்கே அத்தொடர்பு பற்றி எவ்வுயிர்க்கும் அன்புடையராதல் கூடும் என்பார், ஈசனுக் கன்பில்லார் எவ்வுயிர்க்கும் அன்பில்லார் என்றும், இவ்விடங்களில் (அடியர், ஈசன், எவ்வுயிரும்) அன்பில்லாதார் தம் உயிர்க்கு உறுதி செய்து கொள்ளுவார் அல்லர் என்பார், தமக்கும் அன்பில்லார் என்றும் கூறினர்" என மேலே காட்டிய அடிகளின் பயனை மாதவச் சிவஞான முனிவர் விளக்கியருளினமை காண்க.

இதுகாறும் கூறியதிலிருந்து சிவநெறியே உண்மையனுபவம் பற்றி எழுந்து நிலவும் மெய்ந்நெறி ஆகும் என்பதும், அதன் கண் கொள்ளப்படும் அன்பின் ஒழுக்கமே உறுதி பயக்கும் அன்பு நெறியாம் என்பதும், இவ்வாறு கொள்ளப்படும் அன்பு நெறி ஒன்றே சுருதி யுக்தி அனுபவம் மூன்றற்கும் ஒப்ப முடிந்த மூல தன்மம் ஆம் என்பதும் தலையாய அறிவினர் யாவர்க்கும் விளங்கும்.

○ ○ ○

## பதிபசுபாச விளக்கம்

### போதித்தருளிய தக்ஷிணமூர்த்தி வணக்கம்

மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த் தாள்நிழல் அடங்கும் உண்மையைக்
கைம்மலர்க் காட்சியிற் கதுவ நல்கிய
செம்மலை யதுளம் சிந்தி யாதரோ.

# இலங்கையில் இந்து சமயம்

ஈழநாட்டுத் தமிழர் சரித்திர ஆராய்ச்சி வல்லுநரும்,
"ஸ்ரீலங்கா" என்னும் செந்தமிழ் மாதவெளியீட்டின் சிறந்த ஆசிரியரும் ஆகிய

## முதலியார் குல. சபாநாதன் அவர்கள்

இலங்கையில் சரித்திர காலத்துக்கு முற்பட்ட காலத்தில் இந்துசமயம் வேரூன்றிவிட்டதெனக் கருத இடமுண்டு. ஏனைய மதங்கள் இலங்கையிற் குடியேறிய காலத்தை வரையறுத்துக் கூறிவிடலாம். ஆனல் இந்துசமய வரலாறு இத்தகைய ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டு நிற்பதால், இதன் தொன்மையை அளவிட முடியாது.

இலங்கையில் வாழ்ந்த இயக்கர், நாகர் எனும் பூர்வீகக் குடிகள் இந்துசமயத்தையே கைக்கொண்டனர். குபேரன், இராவணன், மண்டோதரி முதலியோர் சிறந்த சிவபக்தியுடையவர்களாகத் திகழ்ந்தார்கள். இராவணனுடைய சிவபக்தியைத் திருஞானசம்பந்த சுவாமிகளும் மண்டோதரியின் சிவபக்தியை மாணிக்கவாசக சுவாமிகளும் பாராட்டியுள்ளார்கள். இராவணன் அநேக இலிங்கங்களை இலங்கையில் பிரதிஷ்டை செய்தான் எனச் "சித்தாந்த சிகாமணி" எனும் நூல் கூறுகின்றது. ஆகவே, இவன் காலத்திலேயே இந்துசமயம் இலங்கையில் பரவியிருந்ததென்பதற் கையமில்லை.

"இலங்கைத்தீவிலுள்ள பல்வேறு குடிகளின் மொழி, இலக்கியம், சமயம், பழைய ஞாபக சின்னங்கள் ஆகியவற்றை நோக்குமிடத்து இத்தீவானது வரலாற்றுக்கப்பாற்பட்ட காலந் தொடக்கமாக இந்துசமயக் குடிகளையே கொண்டதாதல் வேண்டும் என்பது புலனுகும்" என சேர். உவில்லியம் ஜோன்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் முதல் அரசனுகக் கருதப்படும் விஜயனே இந்து மதத்தைச் சார்ந்தவன். அவன் மணமுடித்த பாண்டி நாட்டு இளவரசியும் இந்து மதத்தைச் சார்ந்தவள். ஆகவே, பௌத்த சமயம் தேவநம்பியதீசன் காலத்தில் (கி. மு. **247—207**) இலங்கைக்கு வரமுன்னரே இந்து சமயம் இலங்கையில் வேரூன்றியிருந்தது. தென்னிலங்கையில் கதிர்காமக்கந்தன் வழிபாடும் பௌத்தமத வருகைக்கு முற்பட்டதாகும்.

கி. மு. இரண்டாம் நூற்றுண்டில் தமிழர் இலங்கையரசினைக் கைப்பற்றினர். எல்லாளன் எனும் சைவ மன்னன் (கி. மு. **145—101)** அநுராதபுரத்திலிருந்து 44 ஆண்டுகள் அரசுபுரிந்த காலத்தில் இந்துசமயம் இலங்கையில் நன்கு பரவியிருத்தல் வேண்டும். பௌத்தமத வளர்ச்சியினைப் புனைந்துரைப்பதையே முக்கிய நோக்கமாகக்கொண்ட மகாவம்சம் இவ்வரசன் ஆற்றிய சைவத்தொண்டுபற்றி மௌனஞ் சாதிப்பது வியப்பன்று.

கி. பி. நான்காம் நூற்றுண்டிலே மகாசேனன் பல சிவாலயங்களைத் தகர்த்தெறிந்தான் எனக் கூறப்படுகின்றது. இதனுல், இவன் ஆட்சிக்கு முன்னர் இந்துசமயமே இலங்கையில் பரவியிருந்தது எனக் கருதலாம்.

ஏழாம் நூற்றுண்டு தொடக்கம் சைவநாயன்மார் நால்வர் காலத்தில் இந்துசமயம் தென்னிந்தியாவில் புத்துயிர் பெற்றது. அதன் அதிர்ச்சியை இலங்கையிலும் உணரக்கூடியதாக இருந்தது. திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம் எனும் இருதலங்களும் பாடல்பெற்ற தலங்கள் எனும் பெருமைக்குரியனவாகப் பாராட்டப்பட்டன. மாணிக்கவாசக சுவாமிகள் ஈழநாட்டுப் புத்தரை வாதில் வென்றமையால் இந்துமதம் மீண்டும் புத்துயிர் பெற்றிருத்தல் கூடும்.

இனி, பதினேராம் நூற்றுண்டில் இலங்கை சோழராட்சிக்குட்பட்டபொழுது, இந்துசமயம் உச்சநிலையை அடைந்தது. இதனை இந்துசமயத்தின் பொற்காலம் எனலாம். பொலன்னறுவையிற் பல சிவாலயங்களைக் கருங்கல்லினுற் கட்டியெழுப்பினுர்கள். பதவிய, மாதோட்டம் முதலிய இடங்களிலும் கோயில்கள் கட்டினுர்கள்.

பதின்மூன்ரும் நூற்றுண்டின் இறுதியில் வன்னியர்கள் ஆதிக்கம் மேலிட்டுத் தாம் வாழ்ந்த பகுதியில் இந்துமத வளர்ச்சியில் ஈடுபட்டனர். பல்லவர், சோழர் காலத்துச் சிவலிங்கங்கள் பல இன்னும் வன்னிக்காடுகளில் அழிவுற்ற நிலையிற் காணப்படுகின்றன. வன்னியர் கிழக்கிலங்கையிலுள்ள கோணேஸ்வர ஆலய பரிபாலனத்திலும் அக்கறைகொண்டனர்.

இனி, வடஇலங்கையில் வந்திறங்கிய மாருதப்புரவீகவல்லி மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலைக் கட்டினுள் என 'யாழ்ப்பாண வைபவமாலை' குறிப்பிடுகின்றது. நகுலேஸ்வரமும் ஏற்கெனவே புகழ்பெற்று விளங்கியது. பதின்மூன்ரும் நூற்றுண்டு தொடக்கம் பதினேழாம் நூற்றுண்டுவரை சிங்கைநகரிலும் பின்

னர் நல்லூரிலுமிருந்து தனியரசு செலுத்திய ஆரியச் சக்கர வர்த்திகள் காலத்தில் வடஇலங்கையில் பல இந்து ஆலயங்கள் நிறுவப்பெற்றன. பழைய ஆலயங்கள் புனருத்தாரணஞ் செய்யப்பெற்றன. நல்லூர்க் கந்தசுவாமி கோயில், கைலாயநாதர் கோயில், சட்டநாதர் கோயில், வெயிலுகந்த பிள்ளையார் கோயில், அரசகேசரிப் பிள்ளையார் கோயில் முதலிய பல கோயில்கள் கட்டப்பெற்றன.

சிலாபத்திலுள்ள தமிழர் பண்டைக் காலத்தில் இந்து சமயத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தமையினால், முன்னேஸ்வரம் சிறந்த சிவாலயமாக விளங்கியது. பதினைந்தாம் நூற்றாண்டில் கோட்டையிலிருந்து அரசாண்ட ஆறுவது பராக்கிரமபாகு முன்னேஸ்வர ஆலயத்துக்குச் சர்வமானியமாகச் சில விளைநிலங்களை அளித்து இந்து சமயத்துக்கு ஆதரவு அளித்து வந்தான். இவ்வாறே தென்னிலங்கையிற் தெய்வந்துறையிற்கூட இந்துசமயக் கோயில்கள் நிறுவப்பட்டன. இதன் பயனாக இலங்கையின் நாற்றிசையிலும் சைவக்கோயில்கள் பல காணப்படுகின்றன.

கண்டிமன்னர் ஆட்சிக்காலத்திலும் இந்துசமயம் வளர்ச்சியுற்றது. முதலாம் இராசசிங்கன் இந்து சமயத்தில் மிகப் பற்றுடையவனாகச் சீதாவாக்கையில் பைரவஆண்டி கோயில் எனப்படும் சிவாலயத்தைக் கட்டுவித்தான். இரண்டாவது இராசசிங்கன் தம்பலகாமத்துக் கோணேசர் கோயிலையும், கதிர்காமக் கோயிலையும் திருத்தியமைப்பதில் ஈடுபட்டான்.

ஆனால் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் அநேக சைவாலயங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. இந்துமக்கள் இரகசியமாகவே தம் சமயானுஷ்டானங்களைச் செய்து வரவேண்டிய துர்ப்பாக்கியநிலைமை ஏற்பட்டது. பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்தில் இந்து சமயம் மறுபடியும் தலையெடுத்தது. இந்தக் காலத்தில் அவதரித்த நாவலர் பெருமான் இந்து சமயத்தை மீண்டும் நிலைநாட்ட அரும்பாடுபட்டார். புத்தம்புதிய கோயில்களை நிறுவுவதைப்பார்க்கிலும் புராதன ஆலயங்களைப் புனருத்தாரணஞ் செய்யவேண்டுமென நாவலர்பெருமான் வற்புறுத்தினார். அவர்காலத்திலேயே சில கோயில்கள் புனருத்தாரணஞ் செய்யப்பெற்றன. ஆனால் இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் புராதன ஆலயங்களைப் புனருத்தாரணஞ் செய்வதில் ஒரு பெரிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. இதற்குத் தெய்வானுக்கிரகமும் உண்டு என்பதைச் சுட்டிக்காட்டுவது போலத் திருக்கோணேஸ்வரத் திருவுருவங்கள் வெளிக்கிளம்பின. பொலநறுவை விக்கிரகங்கள் வெளிவந்தன. வடஇலங்கையில் நயினை நாகேஸ்வரி ஆல

யம் புனருத்தாரணம் செய்யப்பெற்றது. திருக்கேதீஸ்வரம் மீண்டும் தன் பண்டைய பெருமையுடன் விளங்கச் சைவான்மக்கள் தொண்டாற்றி வருகின்றனர். தக்ஷிணகைலாசம் எனப்படும் கோணேஸ்வரத்தின் மகா கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றது. இவ்வாறே வடஇலங்கையில் அநேக கோயில்களில் கும்பாபிஷேகங்களும் தேர்த்திருப்பணிகளும் நடைபெறுகின்றன. முன்னேஸ்வரத்திலும் மகா கும்பாபிஷேகம் இம்மாதம் நடைபெற்றுள்ளது. இவ்வாறு இந்துமதம் மீண்டும் புத்துயிர் பெற்று வருவது மகிழ்ச்சிக்குரிய விஷயமே. பெருங்கோயில்களில் மட்டுமன்றி, சின்னஞ்சிறு கோயில்களிலும் புனருத்தாரண வேலைகள் நடைபெறுவதை நோக்குமிடத்து, இலங்கை மக்களிடத்து இப்பொழுது விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளதென அறியக்கிடக்கின்றது. இது ஒருவகையில் சுபசகுனமென்றே கொள்ளல்வேண்டும்.

இலங்கையில் இந்துசமயம் மீண்டும் உன்னதநிலையடைதற்கு இலங்கையிலுள்ள இந்துக்கள் சோம்பலின்றித் தாராள மனப்பான்மையுடன் கூடி ஒத்துழைத்துத் தொண்டாற்றுதல் வேண்டும். இந்து ஆலயங்களில் கூட்டுப்பிரார்த்தனை நடாத்துவதும் சமயப்பிரசங்கம் நிகழ்த்துவிப்பதும் சமயவளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதனவாகும். சிறுவர் சிறுமிகளுக்குச் சமயம் கிழமையில் ஒருநாள் போதிக்கப்படின் சமயப்பற்று இளமையிலேயே நன்கு வேரூன்றிவிடும். சிறுபராயத்திலிருந்தே பிள்ளைகள் கோயிலுக்குச் சென்று வழிபடும் வழக்கத்தைப் பழகிக்கொள்வதில் பெற்றோரும் ஆசிரியரும் துணைபுரிதல் வேண்டும். இளமையில் வேரூன்றிய பக்தி வழிபாடு அவர்கள் வயோதிபர்களாகி இறக்கும்வரை பேருதவிபுரியும். சமயச்சூழலில் வளர்க்கப்படாத பிள்ளைகள் பிற்காலத்தில் வாழ்க்கையில் ஏற்படும் சின்னஞ்சிறு தாக்குதல்களையும் தாங்கமுடியாமல் தத்தளிப்பதைக் காண்கின்றோம். ஆகவே, ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள கோயிலும் மேற்கூறிய பக்திச்சூழல் ஏற்படுத்த உதவி செய்தல் வேண்டும்.

அங்ஙனமன்றித் தொண்டர் கோயிற்கட்டடங்களை மட்டும் புதுப்பித்தாற் போதாது. அக்கோயில்களை இறைவன் வதியும் புனித தலங்களாக விளங்கச் செய்தல் வேண்டும். சமயப்பணியும் சமூகப்பணியும் செய்வதற்கும் கோயில்கள் உதவிபுரிதல் வேண்டும். அத்தகைய சூழ்நிலையை ஏற்படுத்தச் சிறப்பாக இக்கால இந்து இளைஞர்கள் முன்வரல் வேண்டும். இவர்களின் சுயநலமற்ற தூய பணியினாலேயே இலங்கையில் இந்துசமயம் எதிர்காலத்தில் இனிது விருத்தியடையும்.

# ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

ஸ்ரீ ராமக்கிருஷ்ணமிஷன் செய்துவரும் செப்பரும் சேவைக்கு
எமது யாழ்ப்பாணம் பிரதியுபகாரமாகக் கொடுத்துதவிய

## ஸ்ரீமத் பிரேமானந்த சுவாமிகள்

**செ**ன்ற பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் இந்தியாவுக்குப் புதிய சகாப்தம் தோன்றலாயிற்று. அதற்கு முன்பு சுமார் ஆயிரம் ஆண்டுகள் வெளிநாட்டாரின் படையெடுப்பால் இந்தியா அடிமைத்தளையில் அகப்பட்டு அல்லல் உற்றுப் பல்வேறு கொந்தளிப்பால் தன்னிலை மறந்து மதிமயங்கிய காலத்தில், ஆங்கிலேயரின் ஆதிக்கத்தில், இந்திய மக்களிடையே புராதன ஆத்மிக வாழ்க்கையின் பலமும் குன்றத் தலைப்பட்டது. அவர்களது பண்பாடு கலாச்சாரம் யாவும் மாறுபாடுற்று, மேனுட்டு "நாகரிகம்" என்ற மோகவலையில் மக்கள் சிக்குண்டு அதனையே பெரிதெனு மதித்து வாழத் தொடங்கினர். சனுதன தர்மத்தில் நம்பிக்கை குறைந்ததோடு — நம் இந்து சமயத்தை அறிவிலிகளால் உண்டாக்கப்பட்ட கோட்பாடுகள் உள்ள மதம் எனவும் நம்பலாயினர். அந்தச் சூழ்நிலையில் இந்து சமூகத்தினர் சமயத்தின் உண்மை நிலையை மறந்து சிற்சில சம்பிரதாயங்களைக் கைக்கொண்டு அதுவே சமயம் என நினைக்கலாயினர். கால நிலைக்குத்தகக் கோலமும் மாறுபடு மன்றோ!

"எவ்வெப்பொழுது தருமத்திற்குக் குறைவும் அதருமத்திற்கு எழுச்சியும் உண்டாகின்றதோ அவ்வப்பொழுது நான் என்னைப் படைத்துக்கொள்கிறேன்; சாதுக்களைக் காத்தற்கும், துஷ்டர்களை அழிப்பதற்கும், தருமத்தை நிலைநாட்டுதற்கும் யுகம்தோறும் வந்துதிக்கிறேன்."— என்று கீதையில் (4 - 728) பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் திருவாய்மலர்ந்தருளியபடி வங்க நாட்டிலே 1836-ம் ஆண்டில் ஓர் அவதார புருஷர் தோன்றினுர். இவரே பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர் ஆவர். குறுகிய தன் வாழ்நாளில் சனுதன தர்மக் கொள்கைகளை முறையாகக் கைக்கொண்டு பரம சாக்ஷாத்காரத்தைப் பெற்ற பெரியார் இவராவர். மேலும் இந்து சமயத்தைத் தவிர, இதர சமய உண்மைகளையும் சாதனங்களையும் அனுஷ்டித்து, "உண்மை

(மெய்ப்பொருள்) ஒன்றே — அதை அநுபூதி பெற்ற மஹான்கள் பல்வேறு பெயர்களால் அழைக்கின்றனர். எல்லாச் சமயங்களும் பல்வேறு மார்க்கங்களாக அமைந்து ஒரே இடத்திற்கு இட்டுச் செல்கின்றன" என்ற பேருண்மையைத் தன் அனுபவ மூலமாகக் கண்டார் பரஹம்ஸ தேவர். தான்கண்ட பெரும் பேற்றை இவ்வையகமும் பெற எண்ணங் கொண்டபோது, இறைவனின் திருவருளால் தக்க பண்பட்ட பல இளந்துறவிகள் இவரைச் சீடர்களாக அணுகி ஆத்மீக வாழ்க்கையில் பெறும் பேற்றை அடைந்தனர்.

பரமஹம்ஸ தேவரது சிஷ்யர்களுள் தலையாயவர் ஸ்ரீமத். விவேகானந்த சுவாமிகள். மேனாட்டு முறையில், கல்வி கேள்விகளில் தலைசிறந்த பட்டதாரி. நவீன ஆங்கில, விஞ்ஞானக்கல்வியோடு இந்திய வேத, வேதாந்த சித்தாந்தங்களையும் கற்றுணர்ந்த பெரியார் விவேகானந்த சுவாமிகள். சிறுவயதிலேயே பரமஹம்ஸரைச் சேர்ந்து ஐந்தாண்டுகாலம் ஆத்மீகத் துறையில் பயிற்சி பெற்று அனுபூதிபெற்றனர். பரமஹம்ஸர் தம் சீடர்களுக்குத் தலைவராக விவேகானந்த சுவாமிகளை நியமித்து மஹா சமாதி அடைந்தனர்.

குருதேவரின் அரிய பெரிய உபதேசங்களை உலகெங்கும் போதிக்கும் தனிப்பொறுப்பு விவேகானந்த சுவாமிகளைச் சார்ந்ததாயிற்று. அப்பொழுது 1893-ம் ஆண்டில் அமெரிக்க நாட்டில் சிக்காகோ நகரில் நடைபெற்ற ஒரு பெரிய அவையின்கண், சர்வமத மஹாசபையில், ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள் நமது சனாதனதர்மத்தை முழங்கி, வீர வேதாந்த கேசரியாகக் கர்ஜித்தார். அதன் பயனாக இந்தியா விழிப்புற்று எழுந்தது! தன்னை அடிமையாக நினைத்து, தன் கௌரவமும் குன்றி, பலமும் இழந்து, முடங்கிக் கிடந்த இந்தியாவின் இதயத் துடிப்பில் வேகம் பிறந்தது. முகம் மலர்ந்தது, வீறுகொண்டு எழுந்த இந்தியா தன் சனாதன தர்மத்தின் பெருமையைக் கண்டு புத்துயிர் பெற்றது! இந்தியா புதிய சகாப்தத்தைக் கண்டது! நாலைந்து ஆண்டுகளாக அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகளில் சிறந்த பல உபந்நியாஸங்களைப் பொழிந்து சமயப் பிரசாரம் செய்த விவேகானந்த சுவாமிகள் எவரெவர்க்கு எதெது வேண்டுமோ அவரவர்க்கு அததை நல்கி, பின் தன் தாய்நாட்டிற்குக் கப்பல் மார்க்கமாகத் திரும்புகையில் 1897-ம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ந் திகதி கொழும்பு வந்தடைந்தார். சுவாமிகள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்றபோது அங்

கும் கோலாகலமாக வரவேற்று உபசரிக்கப்பட்டார். "இலங்கையில் சுவாமி விவேகானந்தர்" என்ற இம்மடத்து நூற்றுண்டு விழா வெளியீட்டில் எல்லா விபரங்களுடனும் சுவாமிகள் இலங்கையில் ஆற்றிய அரிய பிரசங்கங்களைக் காணலாம். தன் தாய்நாட்டில் அடியெடுத்து வைத்தபோதிலிருந்து அல்மோரா வரை நாடெங்கும் பல வரவேற்புகளுக்கிடையில் ஆற்றிய அரும் பெரும் சொற்பொழிவுகளை "இந்திய பிரசங்கங்கள்" என்ற நூலிற் காணலாம். இவ்வாறு ஆத்மீகப் பலத்தை அடிப்படையாகக் கொண்டு இந்திய சமூகம் தன்னைத்தானே கண்டு பிடிக்கவும், கல்வி, கலாச்சாரம், பண்பாடு, சமூக முன்னேற்றம் முதலிய பல விஷயங்களில் சுவாமிகள் அறிவுறுத்திய அரிய கருத்துக்களைக் கொண்டு தன் வழியை வகுத்தமைக்கவும் முடிந்தது. அதன் பயனுகை இன்று இந்தியா சுதந்திர நாடாகத் திகழ்வது நாம் கண்கூடாகக் காணும் ஓர் உண்மை!

மக்களை முன்னேற்றவும், ஏழை எளியவர்கட்குத் தொண்டு செய்ய மற்றும் வழிகளில் "சீவ சேவையே சிவ சேவை" என்ற அரிய உபதேசத்தைக் கடைப்பிடிக்கவும் விவேகானந்த அடிகள் தனது குருநாதர் பெயரால் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தையும், சங்கத்தையும் ( Ramakrishna Math & Mission ) ஸ்தாபித்தனர். இந்த ஸ்தாபனத்தின் மூலம் துறவிகள், தங்கள் ஆத்மீக சாதனங்களைச் செய்யவும் நிஷ்காமகர்மமாகச் சேவைகளை ஆற்றவும் "ஆத்மனே மோக்ஷார்த்தம் ஜகத் ஹிதாய ச" என்ற முதுமொழிக்கிணங்க, பேரின்பத்தையடைய முயலவும் சுவாமிகள் திட்டமிட்டனர்.

இந்த "இராமகிருஷ்ண மிஷன்" உலகில் பல தேசங்களில் கேந்திரங்கள் அமைத்து அந்தந்தச் சூழ்நிலைகளுக்கேற்ப ஆத்மீகத்தொண்டு ஆற்றிவருகின்றது. உலகம் முழுவதும் இன்று விவேகானந்த சுவாமிகளின் அரிய சேவைகளைப் பாராட்டி நன்றியுடன் அவரது நூற்றுண்டு விழாவைக் கொண்டாடுவதைக் காண்கின்றோம்.

இலங்கை மக்களின் வேண்டுகோட்கிணங்கி விவேகானந்த சுவாமிகள் ஸ்ரீமத் சிவானந்த சுவாமிகளை இலங்கைக்கு அனுப்பலாயினர். அவர் இங்கே சிலகாலம் தங்கி, இந்நாட்டிலே ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் ஒன்று உருவாகுவதற்கு ஏற்ற சூழ்நிலையை உண்டுபண்ணினர். அதன்பின்பு **1916**-ம் ஆண்டில் ஸ்ரீ சர்வானந்த சுவாமிகள் விஜயம் செய்து, பல்வேறு இடங்களில் சமயப் பிர

சாரம் செய்து உத்வேகத்தை உண்டுபண்ணினார்கள். அதன் பயனாகக் கொழும்பில் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் ஸ்தாபனம் ஏற்படலாயிற்று.

ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள் இலங்கை விஜயத்தின் பயனாக இந்நாட்டில், பல பாகங்களிலும் பல சபைகள், வித்தியாசாலைகள், நூல்நிலையங்கள் தோன்றலாயின. இவற்றில் ஒன்று கொழும்பிலுள்ள விவேகானந்த சபையாகும். அது தவிர யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை முதலான இடங்களில் பல வித்தியாசாலைகளும் அனாதைச் சிறுவர்கட்கு மாணவரில்லமும் நிறுவப்பட்டன. இவ்வாறாகப் பல கிளைகளுடன் இந்த ராமகிருஷ்ண மிஷன் நடந்துவருவதை இலங்கை மக்கள் நன்கு அறிவர். மேலும், கதிர்காமத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் ஆற்றும் தொண்டும் யாவரும் அறிந்ததே.

இந்தியாவில் நூற்றுக்கு மேற்பட்ட கிளை ஸ்தாபனங்களின் மூலம் ஆத்மீகத் தொண்டோடு ஏழை மாணவர்கட்குக் குருகுலக் கல்வி முறையில் அமைந்த மாணவர் இல்லங்களும், வித்தியாலயங்களும், கலாச்சார நிலையங்களும், மடங்களும், ஆச்சிரமங்களும் தொழிற்படுகின்றன. எந்தெந்தச் சமூகத்திற்கு எதெது தேவையோ அததை அமைத்து அதன்மூலம் மனிதன் உய்ய வகைசெய்துகொண்டு பின்னர் ஆத்மீகத் துறையில் முன்னேற்றமடைய வேண்டுமென்ற கோட்பாடே இந்த ஸ்தாபனம் கைக்கொண்ட கருத்தாகும். "பஹுஜன ஹிதாய பஹுஜன சுகாயச" என்ற முதுமொழிக்கிணங்க – ஹிதமும் சுகமும் அடையச் சேவையே சிவபூஜையாகச் செய்தால் உலகில் "நிஸ்ரேயஸும்", "அப்யுதயமும்" ஏற்படுகின்றது. எல்லாவித சேவையும் சாதனமே தவிர அதுவே முடிவல்ல. முடிவைப் பொறுத்தே சாதனமும் புனிதத்தன்மை அடைகின்றது. இல்லையெனில் சாதனமே பந்தத்திற்கு இடமாகிறது. எதைச் செய்யினும் அதை ஈஸ்வர அர்ப்பணமாகச் செய்தலே முறை. அங்ஙனமன்றிப் பெயருக்கும், புகழுக்குமாக ஆற்றும் எப்பெரிய பணியும் தாழ்மையையே அடையும் என்ற பேருண்மையை விவேகானந்த சுவாமிகள் தெளிவாக அறிவுறுத்தியுள்ளார்கள். "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற அப்பர் சுவாமிகளது திருவாக்கும் இந்த உண்மையையே உணர்த்துகின்றது.

இன்று அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பா, கிழக்கத்திய நாடுகள் ஆகிய பல்வேறு இடங்களில் ஸ்ரீ ராமகிருஷ்ண — விவே

கானந்தரது ஞானதீபம் சுடர்விட்டுப் பிரகாசித்துப் பல்லாயிர வர்களுக்கு அமைதிக்கும், திருவருளுக்கும் புதுநெறிகாட்டிப் புத்துயிர் ஊட்டி வருவது குறிப்பிடத்தக்கது. இளம் மாணவ மாணவிகள் இவ்விரு பெருமான்களின் திவ்விய சரிதங்களையும் உபதேசங்களையும் கற்றுச் சிந்தனையில் ஈடுபட்டால் ஆத்மீக எழுச்சியால் முன்னேற்றமடைவர் என்பதில் சந்தேகமில்லை. ஆத்மீக வாழ்வில் உயர்வு, தாழ்வு காண இயலாது. சாதி, மதம், தேசம், காலம் ஆகிய வரையறைகள் மறைந்து விடுகின்றன. பண்டைய வேதங்கள் உபநிஷதங்களின் சந்தேசமே (Universal message) இன்று உலகை உய்விக்கவல்லது, இந்த மடத்தில் சாதி மத வேற்றுமைக்கு இடமில்லை. எல்லா மக்களிலும் ஒரே கடவுள் உறைகிறுன் என்ற பேருண்மையின் கீழ் இயங்கும் எந்தத் தொண் டிலும் உயர்வு தாழ்வுக்கு இடமில்லை. தாழ்ந்தோரை உயர்த்து வதே இந்த ஸ்தாபனத்தின் ஓர் சாதனமாகும். இராமகிருஷ்ண — விவேகானந்தரது ஞானதீபம் நம் அறிவைத் தூண்டுவதாக! ஆத்மீக வாழ்வு ஓங்குவதாக!

வயாவிளான்-பலாலி சைவ பரிபாலன சபை எடுத்துக்கொண்ட ஹரிஜன முன்னேற்றப் பணி, ஆலயப்பிரவேச சேவை முதலாய தொண்டுகள் மகிழ்ச்சிக்குரியன. இவர்களது முயற்சி வெற்றி பெற எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாருக!

○ ○ ○

## அம்பலக் கூத்தன் அருள்வேட்டல்

வாழையடி வாழையென வந்ததிருக் கூட்ட
    மரபினில்யான் ஒருவனன்றோ? வகையறியேன் இந்த
ஏழைபடும் பாடுனக்குத் திருவுளச்சம் மதமோ?
    இதுதகுமோ? இதுமுறையோ? இதுதருமம் தானோ?
மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்! யான் உனக்கு
    மகனலனோ? நீஎனக்கு வாய்த்ததந்தை அ(ல்)லையோ?
கோழையுல குயிர்த்துயரம் இனிப்பொறுக்க மாட்டேன்!
    கொடுத்தருள்நின் அருளொளியைக் கொடுத்தருளிப் பொழுதே.

— இராமலிங்க சுவாமிகள்

# சமூகமும் சமயமும்

ஆதியில் சமத்துவம் வளர்த்த
யாழ்ப்பாண வாலிபர் மகாநாட்டுத் தலைவரும்,
முன்னாள் கொக்குவில் இந்துக் கல்லூரிப் பிரதமரும் ஆகிய
நியாயவாதி

**திரு. ச. பேரின்பநாயகன், B. A., அவர்கள்**

இறைவன் ஒருவனுக்கே மனிதன் அடிமை. மனிதனுக்கு மனிதன் அடிமையல்லன். மனிதனுடைய சமூகவாழ்க்கையில் உள்ள உயர்வு தாழ்வு முறையே இறைவழிபாட்டிலும் இடம் பெற்றுவிட்டது. இறைவனும் பிராமணர், வேளாளர், கோவியர், கொல்லர், நளவர், துரும்பர் என்று மக்களை வகுத்து அட்டவணை செய்து வைத்திருக்கிறாரென்றும், இவ்வெவ்வேறு வகுப்பினருக்கும் உரிய வழிபாட்டு முறைகளையும் பற்றித் திட்டமொன்று வகுத்து வைத்துச் செயற்படுத்தி வருகிறாரென்றும் எண்ணுவது நகைப்புக்கிடமான தொன்று. இறைவழிபாட்டுக்கு மக்கள் வழக்கமாய்ப் பயன்படுத்துமிடம் கோயில். இக்கோயில்களிலே இன்ன இன்ன வகுப்பினர் இன்ன இன்ன எல்லைக்குள் நின்றே தன்னை வழிபடவேண்டுமென்று இறைவன் ஆணையிட்டிருக்கிறானென்றும், அந்த எல்லைகளைத் தாண்டிச் செல்வோருக்கு இம்மையிலும் மறுமையிலும் இறைவன் தண்டனை கிடைக்குமென்றும் கூறுவதோ, அக்கூற்றை நம்புவதோ இறைவனுக்கே இழுக்காகும். கிறித்தவர்களுடைய விவிலிய நூலிற் கடவுள் மனிதனைத் தன் சாயலிற் படைத்தாரென்று கூறப்படுகிறது. இதன் உண்மை பொய்யை இங்கு நான் ஆராயக் கருதவில்லை. ஆனால் உலகத்திலுள்ள சமயங்களையும், அவற்றின் கோட்பாடுகளையும், வழிபாட்டுமுறைகளையும் பார்க்கும் போது, மனிதனே தன் சாயலிற் கடவுளைக் கற்பித்திருக்கிறானென்று கூறுவது தவறாகாதெனத் தோன்றுகிறது. புலால் உண்ணும் பேர்வழிகள் தாம் வணங்கும் கடவுளுக்கும் புலாலில் விருப்பமென்று கருதி அவனுக்கும் புலாலுணவு படைக்கின்றனர். புலாலை வெறுப்போர் கடவுளோ புலாலைக் கண்ணாலும் பார்க்க மறுப்பார் என்பர். பிறப்பையொட்டி உயர்வு தாழ்வு கற்பிற்கும் சமூகங்களுடைய கடவுளும் பிறப்பையே பெரிதென மதிக்கும் ஒருவராய்க் காட்சியளிக்கின்றார். பணத்தையொட்டி உயர்வு, இழிவு காணும் சமூகங்களுடைய கடவுளும் அதே மனப்பான்மை யுடைய

வராய்க் காணப்படுகின்ருர். இவ்வேறுபட்ட கொள்கைகளிலிருந்து கடவுள் இல்லையென்று முடிவுகட்டுவது பேதைமை. ஐம்புலன்களால் அறியும் பொருட்களின் இயல்பைப்பற்றியே மக்களிடம் கருத்து வேற்றுமை இருக்கும்போது, பொறியளவுக்கு அப்பாற்பட்ட ஒன்றின் இயல்பைப் பற்றிக் கருத்து வேற்றுமை இருத்தல் அரிதன்று.

மேலும் இறைவன் இயல்பைப்பற்றி வெவ்வேறு கொள்கைகள் வெவ்வேறு நாடுகளிலும், சமூகங்களிலும் மாத்திரம் காணக்கிடக்கின்றன அல்ல. வெவ்வேறு காலங்களிலுங் கூடக் கடவுளின் தன்மையைப்பற்றி வெவ்வேறு கருத்துக்கள் அவ்வக் காலங்களின் செல்வாக்குப் பெற்றிருக்கும் பொருளாதார-சமூகக் கொள்கைகளையொட்டி உண்டாகியிருப்பது உண்மை. நில உரிமை (Federalism) யே சமூக வாழ்வின் அடிப்படையாயிருந்தபோதிருந்த கடவுட்கொள்கை அதன் சாயலைக் கொண்டிருந்தது. அங்ஙனமே மற்றக்காலங்களைப்பற்றியும் சொல்லமுடியும். இன்று எங்கள் நாட்டிலிருக்கும் சமூக சித்தாந்தம் இன்னதென்று வரையறுத்துக் கூற இயலாது. உலகத்தின் ஏனைய பாகங்களிலே தோன்றிய புரட்சிகளின் அலைகள் இங்கும் வந்து ஒன்ருேடொன்று மோதிக்கொண்டிருக்கின்றன. நம்முடைய பாரம்பரியக் கொள்கைகளும் செயல்முறைகளும்கூட இத்தாக்குதலில் அகப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலும் மற்றும் அயல் நாடுகளிலும் நடக்கின்ற புரட்சிகளின் அதிர்ச்சி இலங்கையிலும், முக்கியமாய் யாழ்ப்பாணத்திலும் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலும், சமூக-சமயத் துறைகளைத் தாக்காது விடுமென்று எண்ணுவது பகற்கனவு ஆகும். தில்லையம்பலத்திலும், வெள்ளியங்கிரியிலும் நிகழ்ந்தவை இங்கும் நிகழ்ந்திருக்கின்றன; இனிமேலும் நிகழும்.

இவ்வதிர்ச்சிகளின் விளைவு தாருய்த் தோன்றும் ஒன்றன்று. மக்கள் மனதிலே தோன்றி அங்கு சலனத்தை வருவிக்கும்; சலனம் தெளியச் செயலாய் முதிரும். இவ்வதிர்ச்சிகளால் ஏற்படும் சலனம் எல்லாருடைய உள்ளத்திலும் தோன்றுவதில்லை. தோன்றினும் எப்போதும் செயலாய் முதிர்வதுமில்லை. செயலாய் உருவாவதற்கு மனிதர் படும் பாடுகளைப் பார்த்து இரங்கி அனுதாபப்படும் உணர்ச்சி வேண்டும். உணர்ச்சியை ஒருமுனைப்படுத்திச் செயலாய்ச் செய்துமுடிக்கச் சலியா உழைப்பும், ஆக்கத் திறனும் வேண்டும். இப்போது வயாவிளான்—பலாலிப் பகுதியில் தோன்றியிருக்கும் நடராஜ மடாலயம் இங்கு கூறியவற்றிற்கோர் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

# சைவத் தொண்டு செய்மின்!

சைவத்துக்கும் தமிழுக்கும் தம்மாலானமட்டும் தொண்டுபுரிபவரும்
முன்னுள் கொழும்பு ஆங்கில ஆசிரியகல்லூரி
இயற்றமிழ்ப்போதகாசிரியருமாகிய

**தமிழ்மணி திரு. கா. பொ. இரத்தினம், M. A., B. O. L.**
**அவர்கள்**

மக்களாகப் பிறந்தவர்கள் விலங்குகளாகவும் வாழலாம், மனிதர்களாகவும் வாழலாம், தெய்வங்களாகவும் வாழலாம். மனிதர்களைத் தெய்வப்பண்புள்ளவர்களாக ஆக்குதலே சமயங்களின் நோக்கமாகும். இந்த நோக்கத்தை நிறைவேற்ற முயலாத சமயத் தொண்டுகள் வெறும் ஆரவாரங்களாகவும், ஏமாற்றும் வித்தைகளாகவும், அறியாமைச் செயல்களாகவும் காட்சியளிக்கும்.

மனிதர்கள் சிந்திக்கும் உள்ளம் வாய்ந்தவர்கள்; இன்பமாக வாழவேண்டுமென்று துடிதுடிப்பவர்கள்; சிறப்பாக வாழ்பவர்களைப் போலத் தாமும் வாழவேண்டுமென்று விரும்புபவர்கள். எனினும், எல்லோரும் இன்புற்று வாழ முடியாமல் சமுதாயக் கொடுமைகளும், குருட்டு நம்பிக்கைகளும், தன்னலச் செயல்களும், அறியாமையின் விளைவுகளும் தடைசெய்கின்றன; மயக்கத்தை உண்டாக்கிப் போட்டிகளையும் பூசல்களையும் பெருக்குகின்றன. இவற்றுக்கு மக்கள் பலியாகாமல் தடுத்தற்கும், தாம் பெறும் வாய்ப்பையும், வளத்தையும், இன்பத்தையும், ஏற்றத்தையும் பிறரும் பெறவேண்டும் என்று கருதி முயலும் உயர்ந்த உள்ளப்பாங்கை ஒவ்வொருவரிடமும் உண்டாக்குதற்கும் சமயத் தொண்டுகள் பயன்படல் வேண்டும். சுருங்கக் கூறின் சமயத் தொண்டுகள் மக்கட் சமுதாயத்திலுள்ள பல்வேறு கொடுமைகளுக்கும் வேற்றுமைகளுக்கும் விளைநிலனாக விளங்கும் தன்னலப்பற்றை நீக்கிப் பிறர்நல ஆவலை மக்களிடம் உண்டாக்க வேண்டும் எனலாம்.

## சிவமாக்குகின்றோமா?

மக்களின் வாழ்வைச் செம்மைப்படுத்திச் சிவமயமாக்க—அன்புமயமாக்கத் தோன்றிய நம் சைவசமயத்தைத் தழுவி வாழும் நாம் நம் வாழ்வியலைச் சிவநெறியில்—அன்பு நெறியில்

அமைத்துள்ளோமா? சிறிது சிந்தித்துப் பார்ப்பவர்களும் "இல்லை! இல்லை!" என்றே கூறுவர்.

மனிதனைச் சிவமாக்க வேண்டிய நம் சைவசமயம் மனிதனை மிருகத்திலும் குறைந்தவனாகக் கணித்தற்குப் பயன்படுத்தப் படுவதை நாம் நாளும் காண்கிறோமே!

சைவப் பெருமக்களே! உங்கள் மனச்சாட்சியை முன்னிறுத்தி உங்கள் சூழலைச் சிறிது நோக்குங்கள்! உள்ளத்தாற் பொய்யாது உண்மை நிலையை உணர்ந்து பாருங்கள்! சைவசமயம் மக்களைச் சிவமாக்க வேண்டின் நாம் உடனே செய்யவேண்டிய சைவத் தொண்டுகளை நீங்கள் அறிவீர்கள்!

## யாவரையும் கோயிலுக்குள் விடுக

சாதி வேற்றுமை போற்றித் தீண்டாமை பாராட்டிச் சில மக்களைத் தாழ்ந்தோராக்கி அவர்களைத் தெய்வத்தின் அருள் நிறைந்த திருக் கோயில்களுள்ளே செல்ல விடாமல் இன்றும் தடுத்து வைத்திருக்கிறோம். இந்தியாவிலே இந்தக் கொடுமை நீக்கப்பட்டுப் பல்லாண்டுகளாகியும் நம் நாட்டில் இஃது இன்னும் முற்றாக நீக்கப்படவில்லை. "அரிதரிது மானிடராதல் அரிது" என்று முழங்குவோர் மாடு ஆடு பறவைகளைக் கோயிலுக்குள்ளே புகவிடுகின்றனர். ஆனால், அரிய மானிடப் பிறப்பை எடுத்தவர் களை விடுதற்குத் தடைவிதித்துச் சாத்திரம் பல பேசிச் சழக்குரைக்கின்றனர். எனவே, பிறப்பினாலே உயர்வு தாழ்வு பாராட்டும் இந்தக் கொடுமையை—அகங்காரத்தை—தன்னலத்தை நீக்குதலே நாம் செய்யவேண்டிய முதலாவது சைவத் தொண்டாகும்.

## பலியிடலை நீக்குக

அன்பு முதிர்ந்து அருள்தவிர்க்காத நிலையிலே—நன்கு கற்றுணர்ந்து அறிவு ஊறாத நிலையிலே—தெய்வங்களுக்கு உயிர்ப் பலியிடும் வழக்கம் பண்டைக் காலத்தில் இருந்தது. நாகரிகம் அடையாத தொல்குடிமக்களிடம் இன்றும் இக்குருட்டு நம்பிக்கை காணப்படுகிறது. "எவ்வுயிரும் நீங்காது உறையும் இறை சிவனென்று எவ்வுயிர்க்கும் அன்பா யிரு," என்று பாடிப் போற்றும் உயர்நிலையைத் தொட்ட நம்மவர்களிடை உயிர்ப்பலியிடும் 'காட்டுமிராண்டிப்' பழக்கம் இன்னும் ஒழிக்கப்படாமலுளது. சைவத்துக்குத் தொண்டு புரியும் சபைகள், சங்கங்கள் பல இருக்கின்றன. இவை இன்னும் உயிர்ப் பலியிடுதலை நீக்கப் போதிய

தொண்டு புரியவில்லை. எனவே, சைவத் தொண்டர்கள் இக்கொடிய வழக்கத்தை ஒழிப்பதற்கு உடனே முயல வேண்டும்.

## சீட்டுமுறையை ஒழிக்குக!

கோயில்களிலே பணங் கொடுத்துச் சீட்டுப் பெற்று அருச்சனை பூசை செய்விக்கும் வழக்கம் இப்பொழுது எங்கும் நிலைபெறத் தொடங்கியுளது. ஒருவருடைய பணநிலைக்கேற்பத் தெய்வத்தின் அருளைப் பெற வழிப்படுத்தும் இம் முறை விரைவிலே ஒழிக்கப்படல் வேண்டும். போதிய பணம் இல்லாத ஏழைகள் சீட்டுப் பெற்றுச் சிறப்பாகப் பூசைசெய்ய முடியவில்லையே என்று தெய்வத்தின் திருமுன் வருந்துதற்கு இம்முறை வழிவகுக்கிறது. தெய்வ அருளை விலைக்குப் பெறும் அளவுக்கு இஃது இன்று வளர்ந்து இழிவடைந்து விட்டது. "யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை" எனும் திருமூலர் ஆணைக்கு—சமத்துவ சன்மார்க்க நெறிக்கு—மாறாக ஓங்கிச் சைவத்தின் ஆணிவேரையே சிதைக்கும் இச்சீட்டு முறையை நீக்கச் சைவத் தொண்டர்கள் உடனே ஒரியக்கத்தைத் தொடக்க வேண்டும்.

## தமிழிலே வழிபடுக

தமிழர்களுடைய கோயில்களிலே தமிழிலே அர்ச்சனை முதலியன நடைபெறல் வேண்டும். இதுவே இயற்கைநெறி—மக்கள் உள்ளத்தை உருக்கும் நெறி. "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து" சொல்ல வேண்டும் எனும் மணிவாசகரின் ஆணைக்கமைந்த நெறி. தமிழகத்திலுள்ள கோயில்களில் இந்நெறி இப்பொழுது மீண்டும் இடம் பெற்றுளது. இந்நெறியை நம் நாட்டுக் கோயில்களிலும் நிலைபெறச் செய்வது பெருந் தெய்வப்பணியாகும்.

## தூய்மையும் அமைதியும் வேண்டும்

கோயில்களில் நடைபெறும் விழாக்களிற் பெரும்பாலன களியாட்டங்களாக உருவெடுத்துள. அமைதியும் எளிமையும் நிறைந்து அருள்மயமாயிருக்க வேண்டிய கோயில்கள் ஆரவாரமும் 'கேளிக்கை'யும் நிறைந்து விளங்குகின்றன. முற்காலத்திலே தமிழ்நாட்டுக் கோயில்கள் கலைகளையும் வளர்த்தன; வேறு பல பணிகளையுஞ் செய்தன. ஆனால் இப்பொழுது நிலைமை மாற்ற

மடைந்துளது. கடவுள் வழிபாட்டுக்குமட்டுமே உரிய இடங்களாகக் கோவில்கள் விளங்குதல்வேண்டும். கலைகள் முதலியவற்றை வளார்ப்பதற்கு வேறுபல நிலையங்கள் இருக்கின்றன. உள்ளத்தை உருக்கி ஒருமுகப்படுத்திக் கடவுளிடத்துப் பதித்தற்கு இடையூறாக இருக்கும் கலைநிகழ்ச்சிகள் யாவும் கோயில்களில் இடம் பெறக் கூடாது. கோவில்களைத் தூய்மையின் உறைவிடமாகவும் அமைதியின் குடியிருப்பாகவும் மாற்றினுல்தான் "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிக்" கடவுளை வணங்க முடியும். எனவே, சைவத் தொண்டர்கள் இந்த மாற்றத்தையும் உண்டாக்க விரைவில் முயல வேண்டும்.

சைவப் பெருமக்கள் செய்யவேண்டிய இன்றியமையாத சைவத் தொண்டுகளை இங்கு குறிப்பிட்டேன். வயாவிளான் — பலாலி சைவபரிபாலன சபையினர். திருக்கோயில்களுள்ளே யாவரும் சென்று வணங்கவேண்டும் எனும் கொள்கையை நடைமுறைப்படுத்த முயல்வதறிந்து மகிழ்கின்றேன். இங்கு குறிப்பிட்ட ஏனைய தொண்டுகளையும் மேற்கொள்ள முன்வருமாறு அவர்களையும் பிற சைவ நிலையங்களின் உறுப்பினர்களையும் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

"மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகிற்
சிவகதி விளையு மன்றே"

○ ○ ○

## சீவ சேவை சிவ சேவை

சீவரா சிகள னைத்தும் சிவபிரான் சேய்க ளென்றும்
சீவரா சிகள னைத்தும் சிவபிரான் கோவி லென்றும்
சீவரா சிகளின் சேவை சிவபிரான் சேவை யென்றும்
சீவரா சிகட்குச் சேவை சிவனையுள் நினைந்து செய்வாம்.

—ஓர் உள்ளூர்ப் புலவர்.

# கலைப்புலவரின் ஆத்மீக வாழ்க்கை

யாழ்ப்பாணத்தில் ஞானஒளி இடைக்கிடை வீசச் செய்பவரும்,
கலைப்புலவரின் உடன் தொண்டனுகக் கடமையாற்றியவரும்,
வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயப் பிரதமாசிரியரும் ஆகிய

## திரு. ச. அம்பிகைபாகன், B. A. அவர்கள்

1927ம் ஆண்டில் யான் இந்துக்கல்லூரியில் படித்த காலத்தில், நெடுங்காலம் இராமநாதன் கல்லூரியிலும் பின் சிலகாலம் வைத்தீசுவர வித்தியாலயத்திலும் ஆசிரியரா யிருந்தவரும் முன்னுள் யாழ்ப்பாண மாவட்ட அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்களின் தந்தை யாருமான திரு. செ. மயில்வாகனம் அவர்களுடன் வண்ணூர்பண்ணையில் சிலகாலம் தங்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. நான் 'கேம்பிரிட்ஜ் சீனியர்' பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் சில நூல்களை வாசிக்க விரும்புவதாக திரு. மயில்வாகனம் அவர்களிடம் கூறினேன். அதற்கு அவர், ''புத்தகப் பித்துப் பிடித்த ஒருவர் இருக்கிருர். அவரை உனக்கு அறிமுகப்படுத்தி விடுகிறேன். அவரிடமிருந்து உனக்குத் தேவையான புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம்'' என்று கூறி கலைப்புலவர் அவர்களை எனக்கு அறிமுகஞ் செய்துவைத்தார். அன்று தொடக்கம் அவர் இறக்கும் நாள் வரை எனது அறிவுப் பசியைத் தீர்ப்பதற்குப் பேருதவியாயிருந்தார்.

திரு. மயில்வாகனம் அவர்களுடன் வாழ்ந்தபொழுது ஒரு சிவராத்திரி தினத்தை, நாம் வசித்த இல்லத்தில் கொண்டாடினேம். அதற்கு யோகர் சுவாமிகளும், திரு. நவரத்தினம் அவர்களும், வேறு பல அன்பர்களும் வந்திருந்தார்கள். அன்றிரவு முழுவதும் சுவாமிகளும் திரு. நவரத்தினம் அவர்களும் இருந்த இடம் விட்டு அசையாமல் தியானத்தில் அமர்ந்திருந்தனர். காலை ஐந்து மணியளவில் சுவாமிகள்தான் முதல் எழுந்து வெளியே போனதாக ஞாபகம்.

இதிலிருந்து திரு. நவரத்தினம் அவர்களின் சாதனை அந்தக் காலத்தில் எவ்வளவு தீவிரமாக இருந்த தென்பதை அறியலாம்.

## வாழ்க்கையில் திருப்பம்

திரு. நவரத்தினம் அவர்கள், தமது வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியவை சுவாமி சர்வானந்தரின் சொற்பொழிவுகள் என்று பலமுறை கூறியுள்ளார். சுவாமி சர்வானந்தர் இலங்கைக்கு 1916-ம் ஆண்டில் விஜயம் செய்தாரென்பதும் அந்தக் காலத்தில்தான் இராமகிருஷ்ண சங்கம் வைத்தீசுவர வித்தியாலயத்தைக் கையேற்றதென்பதும் குறிப்பிடத்தக்கன. தாம் கிறித்தவ கல்லூரியில் படித்தபடியால் இந்து சமயத்தின் சிறப்பை அறிந்திருக்க முடியவில்லையென்றும், சர்வானந்தரின் சொற்பொழிவுகள் மூலமே சனாதன தர்மத்தின் சிறப்பியல்புகளை அறிய முடிந்ததென்றும், இதன் பின்தான் தாம் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் போதனைகளையும் சுவாமி விவேகானந்தரின் சொற்பொழிவுகளையும் படித்துப் பயன் அடைந்ததாகவும் கூறுவர். இந்து சமயத்தின் சிறப்பியல்புகளையும், நுணுக்கங்களையும் அறிவதற்கு சுவாமி விவேகானந்தரின் நூல்கள்போல் வேறொன்றும் உதவி செய்யாதென்பது அவரது முடிவான கொள்கையாகும். அவர் இறக்க ஒருவாரத்துக்குமுன், அடுத்த வருடம் வரவிருக்கும் விவேகானந்தர் நூற்றாண்டு விழாவின்போது யாழ்ப்பாணத்தில் விவேகானந்தருக்கு ஒரு தக்க ஞாபகசின்னம் ஏற்படுத்தவேண்டு மென்று வற்புறுத்தினர்.

இந்தக் காலத்தில் திரு. நவரத்தினம் அவர்கள் வண்ணை வைத்தீசுவரன் கோயில், பெருமாள் கோயில் முதலிய கோயில்களுக்குச் சென்று முறையாக வழிபாடு செய்து வந்தார். பெருமாள் கோயிலில் பஜனையில் பாடுவதற்காக இவர் சில பாடல்களை இயற்றியுள்ளார் என்பதை அறியச் சிலர் ஆச்சரியப்படுவர்.

## குரு தரிசனம்

திரு. நவரத்தினம் அவர்கள் தாம் முதன்முதல் யோகர் சுவாமிகளைச் சந்தித்ததைப் பற்றி எங்களுக்குப் பல முறை கூறியுள்ளார், இந்தச் சந்திப்பை ஏற்படுத்திய வர் காலஞ்சென்ற திரு. ரீ. என். சுப்பையாவாகும். அந்தக் காலத்தில் (1919) யோகர் சுவாமிகளை அறிந்தவர் மிகச்சிலரே. யோகர் சுவாமிகள் அந்தக்காலத்தில் பெரும் பாலான பொழுதைக் கொழும்புத்துறைச் சந்தியிலுள்ள இலுப்பை மரத்தின் கீழ்த்தான் செலவழிப்பார்; வெயில். மழை, பனி என்பவற்றைப் பொருட்படுத்தமாட்டார். சாதாரண மக்கள் அவர்களை அணுகுவது கிடையாது. திரு. நவரத்தினம் அவர்கள் போனபொழுது சுவாமிகள் தியானத்தில் இருந்ததாகவும் கண் விழித்தபின் திரு. நவ ரத்தினம் அவர்களுடன் அன்பாகப் பேசியதாகவும், சமயம் வாய்க்கும் போதெல்லாம் வரும்படி கூறியதாகவும் திரு. நவரத்தினம் அவர்களிடமிருந்து அறிந்தோம்.

அன்றுதொடக்கம் திரு. நவரத்தினம் அவர்கள் யோகர் சுவாமிகளைக் குருவாகப் போற்றிவந்தார். ஆரம்ப காலத் தில் சுவாமிகளும் திரு. நவரத்தினம் அவர்களும் இணைபிரி யாது வாழ்ந்துவந்தனர். தினசரி யோகர் சுவாமிகள் நவரத் தினம் அவர்கள் வீட்டுக்குப் போவார்; சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும், விடுதலை நாட்களிலும், இருவரும் ஊரூராய்க் கால் நடையாய்ச் செல்வர். இப்படிச் செல்லும்பொழுது அநேகமாகச் செல்லாச்சியம்மா வீட்டுக்குப் போவது வழக் கம். சாயந்தர வேளைகளில் யாழ்ப்பாணம் முற்றவெளி யில் இருந்து அரவிந்தர் நூல்களையோ விவேகானந்தர் நூல்களையோ திரு. நவரத்தினம் முதலியோர் வாசிக்கச் சுவாமிகள் கேட்டுக்கொண்டிருப்பார். இந்தக் கூட்டத் தில் திரு. மயில்வாகனம்அவர்களும், இப்பொழுது இலங்கை ஸ்ரீஇராமகிருஷ்ண சங்கத் தலைவராக விளங்கும் சுவாமி பிரேமாத்மானந்தரும் இருந்தனர்.

திரு. நவரத்தினம் அவர்கள் பொதுப் பணியில் ஈடு பட்ட பின்னர் சுவாமிகளை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு குறைந்தது. ஆனாலும், சுவாமிகளின் மீதுள்ள பக்தி எள்ளளவேனும் குறையவில்லை. என்னைக் காணும்போதெல் லாம் சுவாமிகளின் முதற்கேள்வி "நவரத்தினத்தின் சுக மெப்படி? இப்பொழுது என்ன செய்கின்றான்?" என்பது தான்.

திரு. நவரத்தினம் அவர்கள் நோய்வாய்ப்பட்டு ஆபத் தான நிலைகளில் இருக்கும்பொழுதெல்லாம் சுவாமிகள் அவர்கள் இல்லத்துக்குச் சென்று ஆறுதல் கூறி ஆசீர் வதித்தனர்.

யோகர் சுவாமிகள் அநுபூதி நிலையின் சிறப்பைஅறிந்த ஒரு சிலரில் திரு. நவரத்தினம் அவர்கள் சிறந்தவராவர். ஆத்மீக வாழ்க்கையில் பெறக்கூடிய தலைசிறந்த அநு பூதி நிலையை—உயர்வற உயர்ந்த நிலையை "Transcen-dental Mysticism"—சுவாமிகள் பெற்றுள்ளாரென்பதை திரு. நவரத்தினம் அவர்கள் பல ஆதாரங்களுடன் விளக் குவார். இப்படியான பெரும் பொருள் நம் மத்தியில் இருக்க, கானல்நீரைக் கண்டோடித் திரியும் மக்களைக் கண்டு திரு. நவரத்தினம் அவர்கள் பரிதாபப்படுவார். ஒரு முறை ஒரு இளைஞன் சுவாமிகளின் தன்மையை விளக்கும் படி கேட்டதற்கு "கடவுளின் தன்மையைச் சொல்லால் விளக்கமுடியுமானால் சுவாமிகளின் தன்மையையும் விளக் கலாம்" என்று திரு. நவரத்தினம் அவர்கள் கூறினார்.

திரு. நவரத்தினம் அவர்கள் தாம் எழுதிய அதி உன் னத நூலாகிய "தென்னிந்திய சிற்ப வடிவங்கள்' என்னும் நூலை சுவாமிகளுக்கு உரிமையாக்கியுள்ளார். கீழ்க் காணப் படும் அந்த உரிமை உரையில் அன்னாரின் குருபக்தி நன்கு விளங்குகின்றது. "இந்திய இன்பக் கலைகளால் அறிவுறுத்தப்படும் அறநெறியினுக்கோர் உறையுளாய் அன்புநெறி நிற்கும் தகுதியுடையோர் தம்மனத்திருளை அகற்றும் அறிவொளியாய் விளங்காநிற்கும் உத்தமரும்

என்னை ஆண்டருளிய கருணைவாரிதியுமாகிய சற்குரு நாதன் செய்ய பொற் பாதங்களுக்கு இந்நூல் ஏற்புடைத் தாகுக."

திரு. நவரத்தினம் அவர்களின் வாழ்க்கையை உற்று நோக்கும்போது, அவருடைய இலட்சியங்களும் கலைப் பண்புகளும் மலருவதற்கு அன்னாரின் மனைவி திருமதி மகேஸ்வரிதேவி எவ்வளவு தூரம் உறுதுணையாய் இருந்தா ரென்பதை அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள்தான் அறிவர். கலைப்பண்பு கணவன் மனைவி என்னும் இருவ ரிடத்திலும் நிறைந்திருந்தபடியால்தான் அவர்கள் இல் லம் ஒரு கலைக்கோயிலாகத் திகழ்ந்தது. திரு. நவரத் தினம் அவர்களைச் சந்திக்க இந்தியாவில் இருந்தும் மேல் நாடுகளிலிருந்தும் பலர் அடிக்கடி வருவதுண்டு. இவர்களை எல்லாம் அகமகிழ்ந்து வரவேற்று திருமதி நவரத்தினம் உபசரிப்பார்.

கணவன் வாழும்போது எப்படி அவர் இலட்சியங் களை நிறைவேற்றுவதற்கு உதவி புரிந்தாரோ அதேபோல் அவரது இலட்சியங்களை நிறைவேற்ற முன் வருவோருக்கு அவரைப் பிரிந்து வாழும் மனைவி உதவிபுரிவார் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

திரு. நவரத்தினம் அவர்களின் கலை ஆர்வத்தையும், தத்துவ சாத்திர அறிவையும், சமூக சேவையையும் சக லரும் அறிவர். ஆனால் இவற்றுக்கெல்லாம் ஆதாரமாக வும், அரணாகவும் இருந்தது அவரது ஆத்மீக வாழ்க்கையே யாகும்.

○ ○

## ஒருவரே இருந்தார் அவரும் போய்விட்டார்

கலைப்புலவர் தாமேயோ காலகதி யானார்
நிலைப்புலவர் யாரே நிலத்தில் — பலப்பல நூல்
கற்றார் ஒருவரைக் காட்டுவதற் கென்செய்வோம்
எற்றேயாழ்ப் பாணம் இனி!

— பண்டிதமணி, சி. கணபதிப்பிள்ளை

# சைவசமயமும் சாதியும்

இந்துசமய ஆராய்ச்சி வல்லுநர்

காலம் சென்ற கலைப்புலவர்

**திரு. க. நவரத்தினம் அவர்கள்.**

## ஆரியரும் திராவிடரும்

இந்திய நாட்டில் பல்வேறுபட்ட பாஷைகளையும், சமயக் கொள்கைகளையும், பழக்கவழக்கங்களையுமுடைய மக்கள் பண்டைக்காலந் தொடக்கம் வாழ்ந்து வருகின் ருர்கள். இவர்களை ஆரியரென்றும், திராவிடரென்றும், ஆதி மக்கள் கூட்டத்தினரென்றும் ஆராய்ச்சியாளர் இன்று பிரித்து ஆராய்கின்றனர். ஆரியரென்போர் சம்ஸ்கிருத மொழியையும் அதனோடு தொடர்புடைய மொழிகளையும் கலாச்சாரத்தையும் பின்பற்றுவோராவர். திராவிடர் என் போர் தமிழையும் அதனோடு தொடர்புடைய மொழிகளையும், கலாச்சாரத்தையும் பின்பற்றுவோராவர். நீக்குரோவரும் அவுஸ்திரேலியரும் (Austroloids) அவர்களின் கலப்பினுல் தோற்றிய கூட்டத்தினரும் ஆதிமக்கள் (Primitive Tribes) என்னும் பிரிவினுள் அடங்குவர். இன்று இந்திய நாட்டிற் காணப்படும் எல்லா மொழிகளிலும், சமயக் கொள்கை களிலும், கலாச்சாரத்திலும், நாம் மேலே கூறிய மக்களின் வாழ்க்கைப் பண்புகள் பல காணப்படுகின்றனவென்பது ஆராய்ச்சியாளர் துணிபு.

ஆரியரும் திராவிடரும் ஒரே இனத்தைச் (Race) சேர்ந் தவர்களாயினும், கலாச்சாரத்திலுலும், மொழியாலும் வேறு பட்டவர்களென்பதை நாம் மனதில் பதித்துக் கொள்ளுதல் வேண்டும். திராவிடர்கள் பண்டைக் காலத்தில் இந்திய நாடு முழுவதும் பரவி வாழ்ந்தனர் என்றும், ஆரியரின் வருகைக்குப்பின் தென்னிந்தியாவைத் தாயகமாகக் கொண்டு வாழ்ந்தனர் என்றும் வரலாற்று ஆராய்ச்சியாளர்

கூறுவர். சிந்துநதிப் பள்ளத்தாக்கில் காணப்பட்ட புதை பொருள்கள் திராவிட நாகரீகப் பண்புகள் பொருந்தியனவாகக் காணப்படுவதிலிருந்து அங்கு வசித்த மக்கள் திராவிடர்களாதல் வேண்டும் என்று துணியப்பட்டுள்ளது.

இன்று இந்தியாவிலும் இலங்கையிலும் காணப்படும் இந்து கலாசாரம் பெரும்பாலும் ஆரிய, திராவிட மக்களின் கலப்பின் பயனுக ஏற்பட்டதொன்ருகும். நான்கு வேதங்களையும், பிரமாணங்களையும், உபநிஷத்துக்களையும், ஸ்மிருதிகளையும் பிரமாணமாகக் கொண்டுள்ள சமயமே ஆரியர்களது சமயமாகும். அது வைதிக தர்மம் என அழைக்கப்பட்டது. வைதிக நெறி, யாகாதிகர்மங்களையே அடிப்படையாகக் கொண்டு விளங்குவது. ஆலயம், மூர்த்தி, பூசை, விழா முதலிய கிரியைகளை ஆதாரமாகக் கொண்டே திராவிடர்களது சமய நெறி விளங்கியது. அந்நெறி சிவ சம்பந்தமுடையதாக அமைந்திருந்த தென்பதுவும் இக்கால ஆராய்ச்சியாளர் துணிபு. மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களிற் காணப்பட்ட பொருள்களிலிருந்து, சிந்துநதி நாகரீக மக்கள் ஆலயங்களையும் ஆலய அமைப்பு முறைகளையும் பற்றிய அறிவுடையோராயிருந்தார்களென்பது விளங்குகின்றது.

"பரார்த்தலிங்கப் பிரதிஷ்டை, பரார்த்த பூசை, உற்சவம் முதலியனவற்றை விதிப்பன சிவாகமங்களேயன்றி, வேதங்கள் ஸ்மிருதிகள் அல்ல" என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் கூறுவதும், "உருவவழிபாடும், யாகத்திற்கு வேருகிய பூசை முறையும் என்ற இவ்விரண்டினது வளர்ச்சியில் திராவிடப் பண்புகளே பெரும்பாலும் தொடர்புற்றிருத்தல் வேண்டும்" என டாக்டர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்கள் கூறுவதும், "பூசை வழிபாடு ஆரியர்களுக்கு முந்திய வழிபாடு; அது திராவிடர்களது வழிபாடாகும். யாகங்களே ஆரியர்களது வழிபாட்டு முறையாகும். திருவடிவங்களுக்குப் பூ முதலியனவற்ருற் செய்யப்படும் வழிபாடு வேதஇலக்கியங்களிற் கூறப்படவில்லை" எனக் கல்

கத்தாச் சர்வகலாசாலை மொழிநூல் பேராசிரியராகிய டக்டர் சுநிதகுமார் சட்டர்ஜி அவர்கள் கூறுவதும், ஆலயத்தொடர்புடைய வழிபாடு திராவிடர்களின் முறை யென்பதை வலியுறுத்தும். சிந்துநதிப் பள்ளத்தாக்கில் காணப்பட்ட பொருள்களும் ஆலய வழிபாட்டின் தொன்மையை நிலைநாட்டுகின்றன.

மக்களை நான்கு பிரிவுகளாக வகுத்து, ஒவ்வொரு பிரிவுக்கும் வேறு வேறு தொழில்கள் அமைத்த வழக்கம் ஆரியர்களதேயாம். அவர்கள் தமது சமூகத்தைப் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என நான்கு வர்ணங்களாகப் பிரித்து, பின் வர்ணக்கலப்பினுல் ஏற்பட்ட மக்களை அநுலோமர், பிரதிலோமர் எனப் பிரித்தனர். உபநயனஞ் செய்யும் உரிமையற்ற ஆரியர்கள் சூத்திரர் என ஒதுக்கப்பட்டாரெனச் சில ஆராய்ச்சியாளர் கூறுவர். வேறு சில ஆராய்ச்சியாளர் ஆரியரல்லாத மக்களையே சூத்திரர் எனப் பிரித்து வைத்தனர் எனக் கருதுகின்றனர். ஆரியரது சமூக அமைப்பில் கூறப்படும் சூத்திரர் ஆரியரா, அல்லது வேறு கலாசாரத்தையும், மொழியையும் சேர்ந்தவர்களா வென்பது தனிப்பட்ட ஆராய்ச்சி. அதில் நாம் புக விரும்பவில்லை. நாம் கூற விரும்புவது எதுவெனில், மக்களை நான்கு பிரிவுகளாக (சதுர்வர்ணம்) வகுக்கும் வழக்கம் ஆரியர் கலாசாரத்தில் காணப்பட்ட ஒழுங்குமுறை யென்பதாம்.

திராவிடர்களாகிய தமிழர்கள் தங்களை நிலப் பண்புக்கேற்பப் பிரித்து வாழ்ந்தனர். அப்பிரிவுகள்-குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவாம். இந்நிலங்களில் வாழ்ந்த மக்கள் தமது சூழ்நிலைக்கும் ஆற்றலுக்கும் அமைந்த தொழிலைச் செய்து சமூகத்தின் பொருளாதார நிலை, கலாசாரம் ஆகியனவற்றை வளர்த்து வாழ்ந்தனர். தமிழர்களது சமூகம் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், அநுலோமர், பிரதிலோமர் என்னும் பாகுபாட்டை அறியாது. இவ்வித பாகுபாடு அக்காலத்

திலு மிருக்கவில்லை; இக்காலத்திலுமில்லை. ஸ்மிருதிகளின் சாதிப்பிரிவுகளைத் தமிழர்கள் பின்பற்றவில்லை. தொல் காப்பியம், திருக்குறள், தேவாரங்கள், பெரியபுராணம், சிவஞானசித்தியார் முதலிய நூல்கள் இப்பிரிவுகளை இன்றியமையாச் சமூக சாதனங்களாகக் கூறவுமில்லை.

"பிராமணர்கள், தொல்காப்பியர் காலத்திற்குப் பல நூற்றுண்டுகளுக்குமுன் தங்கள் ஆதிக்கம் வலுப்பெற் றிருந்தபொழுது, செயற்கைப் பிரிவாகிய நான்கு வர் ணப் பாகுபாட்டைத் தமிழ் மக்களிடையே திணிக்க முயன் றனர். ஆனுல் இயற்கையாக அமைந்துள்ள ஐந்து நிலப் பிரிவுகளுடன் செயற்கைப் பிரிவாகிய வர்ணப் பாகுபாடு கலந்துகொள்ள முடியவில்லை. தமிழ் இந்தியாவைப் பொறுத்தமட்டில் வர்ணப் பாகுபாடு ஒரு வெறுங் கட்டுக் கதையாக முடிந்தது."

**ஆகமங்கள்**

ஆலய வழிபாட்டுடன் தொடர்புடைய திருவுருவப் பிரதிஷ்டை, பூசை, விழா முதலியன வேதங்களிலும், ஸ்மிருதி முதலிய நூல்களிலும் காணப்படாத சமய சாத னங்கள் என் நாம் மேலே கூறினேம். வைதிக நெறி யையே ஆத்மார்த்தமாகக் கொண்டுள்ள பிராமணர்களுக் கும், ஏனையோருக்கும் ஆலயவழிபாடு இன்றியமையாச் சமய சாதனமாக ஸ்மிருதிகளில் கூறப்படவில்லை. ஸ்மிரு திகள் வகுத்துள்ள நெறியிலேயே பிராமணரும், வேறு வைதிகர்களும் தங்கள் சமய வாழ்க்கையை நடாத்துதல் வேண்டும்.

ஆலயவழிபாட்டு முறைகளைக் கூறும் நூல்கள் ஆக மங்களேயாகும். இந்து சமயத்தில் இன்று காணப்படும் பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும், தனிப்பட்ட ஆகமங்கள் உண்டு. மிகப் பண்டைக் காலந் தொட்டுத் திராவிட மக்களின் சமய சாதனமாக விளங்கிய ஆலயவழிபாட்டுக் கொள்கைகளின் விளக்கங்கள் யாவும் ஆகமங்களில் இன்று

காணப்படுகின்றன. இக் காலத்திலுள்ள ஆகமங்கள் வடமொழியில் எழுதப்பட்டுள்ளன. ஆலய அமைப்பு, திருவுருவப் பிரதிஷ்டை, பூசை, உற்சவ விளக்கங்கள் முதலியன அவற்றில் கூறப்பட்டுள்ளன. இவற்றோடு ஸ்மிருதிகளில் கூறப்பட்ட வைதிகத் தொடர்புடைய கிரியைகளும் சமூக ஒழுங்குகளும் காணப்படுகின்றன. எனவே, இக்கால ஆகமங்கள் பண்டைத் திராவிடரின் ஆலய வழிபாட்டையும், அதற்கு வேருகிய வைதிக வழிபாட்டையும் ஒன்றுசேர்த்து வைதிகச் சார்புடையோரால் தொகுக்கப்பட்டனவெனக் கொள்ளுதல் பொருத்தமான முடிபாகும்.

இக்கால ஆகமங்களில், திருஞானசம்பந்தர், சண்டேசுரர், வீரசைவபசவதேவர், அல்லமா பிரபு முதலியோரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. எனவே ஆகமங்களில் காலத்துக்குக் காலம், பலர் தமது மதக் கோட்பாடுகளோடு தொடர்புடையனவற்றைப் புகுத்திவிட்டனரெனக் கொள்ள இடமுண்டு. பண்டைத் தமிழ் நாட்டிலிருந்த தமிழ் ஆகமங்கள் அழிந்த பின்பு, நாட்டில் வழக்கிலிருந்த சமய முறைகளையும் சேர்த்து, வடமொழியில் தொகுக்கப்பட்டனவே இக்கால ஆகமங்கள் என்பது மறைமலையடிகள் முதலியோரின் ஆராய்ச்சி முடிபாகும்; இம்முடிபு எம்மால் நன்கு சிந்தித்து ஆராயப்பட வேண்டிய தொன்ருகும்.

வேதங்களையும், ஸ்மிருதிகளையும் மாத்திரமே பிரமாணமாகக் கொண்டதுவே வைதிகநெறி. ஆலய வழிபாட்டையும் அதனோடு தொடர்புடைய பூசைமுறைகளையுங் கூறும் ஆகமங்களை ஆதாரமாகக் கொண்டது சைவம். வேதங்களுக்கும், ஸ்மிருதிகளுக்கும் மாறுபட்ட கருத்துடைய எந்த நூலையும் வைதிக தர்மத்தைப் பின்பற்றுவோர் கொள்ளக்கூடாது. அவ்விதமே ஆகமங்களுக்கு மாறுபட்ட கருத்துடைய எந்த நூலையும் சைவர்கள் பிரமாணமாகக் கொள்ளக் கூடாது. இங்கு ஆகமக்கருத்துக்களென நாம் கூறுவது எவையெனில், வைதிகக் கொள்கைகளின் கலப்பில்லாத கருத்துக்களையேயாம். இக்கால ஆகமங்களில்

வைதிகக் கலப்பிருப்பதனுல் அவை, தூய சைவத்திற்கும் பிரமாணமாகா.

வைதிகப் பிரமாண நூல்கள் எவற்றிலாவது ஆதிசைவர் என்றும், ஆதிசைவப் பிராமணர் என்றும் ஒருவகுப்பார் கூறப்படவில்லை. காயத்திரியை ஆத்மார்த்தமாகக் கொள்ளாதவர்களும், வேதங்களையும் ஸ்மிருதிகளையும் விலக்க முடியாப் பிரமாணங்களாக ஏற்காதவர்களும் பிராமணர் எனத் தம்மைக் கூறிக்கொள்வது வைதிக நெறிக்கு மாறுபட்ட செயலும் நிலையுமாகும். எனவே, ஆதி சைவப் பிராமணர் என்னுஞ் சொற்றொடர் அர்த்தமற்றதென்பதும், கோயிற் பூசை செய்த பிராமணர்களால், பிற்காலத்தில் ஆகமங்களுட் புகுத்தப்பட்டதென்பதும் நாம் மேலே கூறியனவற்ருல் நன்கு விளங்கும்.

பிராமணர்கள் வைதிகர்களேயாவர். சைவர்கள் அவர்களின் கொள்கைகளுக்கு மாறுபட்ட சமயிகளாவர். ஆதி சைவப் பிராமணர் என்பதின் கருத்து யாதெனில், வைதிகத்தை விட்டு ஆதியில் சைவத்தைத் தழுவிய பிராமணர் என்பதாம். வைதிகத்தைப் பின்பற்றியவர், அதை விட்டவுடன், தமது பிராமணத்துவத்தையும் இழந்து விடுவார். பிராமணத்துவம் கிரியையால் ஏற்படுவதன்றி, பிறப்பினுல் ஏற்படுவதன்று. வைதிகக் கிரியைகளையும், சைவ ஆகமக் கிரியைகளையும் சேர்த்துத் தமது வாழ்க்கையை நடாத்தும் பிராமணர்கள் எங்கள் நாட்டிலுண்டு. இந்த முரண்பட்ட நிலையைப்பற்றித் தனிப்பட்ட ஒரு கட்டுரையில் ஆராய்வதே பொருத்தமுடைத்து. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் எழுதிய பெரிய புராண வசனம், பெரிய புராண சூசனங்கள், நாவலர் பிரபந்தத் திரட்டு முதலிய நூல்களை ஆராய்ந்தால் நாம் கூறியுள்ளனவற்றின் உண்மை நன்கு விளங்கும்.

சைவம் ஆகமாந்தமேயன்றி வேதாந்தமன்று. "புறசமயங்களிலே செய்த புண்ணியங்களினுலே, பின் வைதிக

மார்க்கத்திலே புகுந்து, வேதத்திலும், அதன் வழி நூலாகிய ஸ்மிருதி முதலியவற்றிலும் பிராமணர் முதலிய நான்கு வர்ணத்துக்கும், பிரமசரிய முதலிய நான்காச்சிரமத்துக்கும் விதித்த பசு புண்ணியங்களைச் செய்து மீண்டும் பூமியிலே பிறப்பார்கள். அவர் முன் செய்த வைதிக புண்ணிய மிகுதியினாலே சைவாகமத்தால் உணர்த்தப்படும் சைவத்திற் பிரவேசித்து, சரியை, கிரியை, யோகங்களை முறையே அநுஷ்டித்து அவற்றின் பலன்களாகிய சாலோக சாமீப சாரூப பதங்களைப் பெறுவார்கள்'' என ஸ்ரீலஸ்ரீ நாவலர் கூறியுள்ளது நாம் கூறியனவற்றிற்குப் பிரமாணமாகும்.

உலகநடை பற்றிய சாதிக் கட்டுப்பாடு சைவ சமய சாதனங்களி லொன்றல்ல வென்பதே சிவஞானசித்தியார் முதலிய சித்தாந்த ஞான சாத்திரங்களின் உண்மைக் கருத்தாகும். ஸ்ரீலஸ்ரீ நாவலர் அவர்களும், "சாதியினும் சமயமே அதிகம். சமயத்தினுஞ் சாதி அதிகமெனக் கொள்வது சுருதி, யுக்தி, அனுபவம் மூன்றுக்கும் முழுமையும் விரோதம்'' எனக் கூறியுள்ளது இங்கு குறிப்பிடத் தக்கதாம். எனவே, ஸ்மிருதிகளில் கூறப்பட்டதும், உலக நடை பற்றியதுமான "நான்கு வர்ணப் பாகுபாடு'' சைவ சமய சாதனமன்று என்பது நாம் இதுகாறும் கூறியனவற்றால் நன்கு புலனாகும்.

முடிபு

சமயாசாரியர்களாகிய நால்வர்களாலும், சந்தானாசாரியர்களாலும் அனுட்டிக்கப்பட்ட சைவ சமயத்தில் உலகநடை பற்றிய சாதிக்கட்டுப்பாடு இடம்பெறவில்லை யென்பது அவர்களது நூல்களைப் படிப்போர் நன்கு அறியக்கூடிய உண்மையாகும். 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறுகளைக் கூற முன்வந்த சேக்கிழார் சுவாமிகள், அவர்களின் உயர்வையும், சிறப்பையும் சாதி அடிப்படையில் வைத்து விளக்காது, அவர்களின் சிவபக்தியின் சிறப்

பிலும், ஒழுக்கத்தின் உயர்விலுமே வைத்துக் கூறிச்சென்றனர். சைவ வாழ்க்கையில் ஈடுபட்டோர் சாதி, குலம் என்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறக்கூடாதென மணிவாசகர் கூறுகின்ருர்.

"சாதிகுலம் பிறப்பென்னுஞ்
சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை"

திருநாவுக் கரசு நாயனரும்

"அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலய ரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே"

என்றும்,

"குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே"

என்றும்,

"சாத்திரம் பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்திரமுங் குலமுங் கொண்டென் செய்வீர்"

என்றும்,

"குலங் கெடுத்துக் கோள்நீக்க வல்லான் தன்னை"

என்றும்,

"எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி,
இவர்தேவர் அவர்தேவ ரென்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்ருப்பூர் நடுதறியைக் காண லாமே"

என்றுங் கூறிக் குலம்பார்க்கும் மனப்பான்மையின் இழிவையும், சிவபக்தியின் உயர்வையும், சைவ அன்பின் சமரசத் தன்மையையும், நயம்பட எடுத்து விளக்கியுள்ளார்கள்

சமயச் சண்டைகளை உண்டாக்குகின்றனர். பொய், பொருமை, வஞ்சகம், சூது, கள்ளம், கபடு, சுயநலம் முதலிய கயமைக் குணங்கள் படைத்தோரை மனிதரென்று கூறமுடியாது? இவர்கள் மிருகத்திலும் மிகக் கீழான வர்களே. மிருக வாழ்க்கையைப் பாருங்கள். அவை தங் கள் தங்கள் இனத்துடனுவது சண்டை சச்சரவின்றிச் சமாதானமாக வாழ்ந்துகொள்கின்றன. அழுக்காறு கொண்டு ஒரு யானை இன்னொரு யானையை அடித்துக் கொள்வதில்லை. தான் புகழ்பெறவேண்டுமென்பதற்காக ஒரு பூனை இன்னொரு பூனையைத் தூற்றித் திரிவதில்லை. பட்டம் பதவி பெறவேண்டுமென்று ஒரு பறவை இன் னொரு பறவைக்குக் கைலஞ்சம் கொடுப்பதுண்டா? ஆனுல் மனிதனை மனிதன் அடிக்கிருன்; ஏமாற்றுகிருன். ஏன், கொலைகூடச் செய்கிருனே. இந்த நிலையில் மனி தன் சிறந்தவனு? விலங்கினம் சிறந்ததா? மனித உரு வுடன் மிருகமாய் வாழுகின்ற தமது பரிதாபகரமான நிலையைச் சிந்தியாது, தீண்டும் சாதியென்றும், தீண்டாச் சாதியென்றும் பாகுபடுத்திக் கொள்வதில் யாது பயன்? நாம் மனிதர் என்பதை ஒவ்வொரு நாளும் நினைத்து நல்ல பண்புடன் வாழ்வதே மனிதகுலமாகும். அதுவே உயர்குலமாகும்.

பிறவியினுல் மனிதனில் உயர்வு தாழ்வு கிடையாது. செய்யும் தொழிலில் வேற்றுமையிருக்கலாம். அதைக் காரணமாகக் கொண்டு, ஒரு தொழிலைச்செய்பவன் உயர்ந் தவனென்றும் வேறு தொழிலைச் செய்பவன் தாழ்ந்தவ னென்றும் கூறிவிடமுடியுமா? பண்டைக்காலத்தில் சமூ கக் கடமைகளை அடிப்படையாகக் கொண்டு வருணம் (சாதி) வகுக்கப்பட்டதாகத் தெரிகின்றது. இதிற்கூட உயர்வு தாழ்வு இருக்கமுடியாது: தேவபூஜை செய்பவ னும், தோட்டி வேலை செய்பவனும் சமூகத்திற்குச் சரி சமமான பணியையே புரிகின்றனர். கடவுள் சன்னிதா னத்தில் இருவரும் சமமே. இந்த உண்மையை உணர் வதற்கு எமது உடம்பையே உதாரணமாகப் பார்க்க

லாம். இடதுகை மலத்தைச் சுத்தம் செய்கிறது. வலது கை புஷ்பத்தை எடுத்து இறைவனுக்குச் சூட்டுகிறது. இறைவனை வணங்கும்போது தோட்டிவேலை செய்யும் இடக்கையும், பிராமணவேலை செய்யும் வலக்கையும் பிரிந்து நின்று வணங்குவதைக் காண்கிறோமா? அப்படி வணங்கத்தான் முடியுமா? கைகூப்பி மனங்கசிந்து வழி படும்போது வெவ்வேறு தொழில் செய்யும் இருகரமும் வேற்றுமையின்றி ஒன்றுசேர்ந்து விடுவதைச் சிந்தித் துப் பாருங்கள். எவர் எத்தொழிலைச் செய்தாலும் இறை வன் சந்நிதானத்தில் ஒன்றாகி நிற்பதே இயற்கையாகும். "எல்லா உலகமும் ஆனாய் நீயே" என்று ஏத்துகிறோம் அல்லவா? அப்படியானால் இறைவன் நிறைந்துள்ள எல்லா இடத்திலும் நாம் ஒன்றாகத்தானே வாழவேண் டும். இதனை மறந்து உயர் சாதி; கீழ்சாதி என்று கூறிக் கொள்வதும் தீண்டாச்சாதியினர் ஆலயத்திற்குள் செல்லக் கூடாதெனத் தடைச்சட்டம் விதிப்பதும் மனிதப் பண்பாடாகாது.

உலகம் நடைபெறுவதற்குப். பல்வேறு தொழில்கள் இருக்கத்தான் செய்யும். எல்லாத்தொழிலும் சமூகத்திற்குத் தேவையானவை என்பதை உணர்ந்துவிட்டால் அவற் றில் உயர்வு தாழ்வு தோன்றாது. தெய்வத்திற்காகவே தெய்வ காரியம் மேற்கொண்டு பலன் கருதாது பல் லோர் நலங்கருதி வேதம் ஓதியவன் வேதியன். இரத் தம் சிந்தியும், உயிர் கொடுத்தும் நாட்டையும் மக்களையும் காப்பாற்றி நற்பணி புரிந்தவன் ஷத்திரியன். வியாபா ரம் செய்து, தூரத்துப் பொருளை நாட்டு மக்களுக்குத் தேடிவந்து கொடுக்கும் நல்ல காரியத்திலீடுபட்டவன் வைசியன். உள்ளூரிலேயேயிருந்து மக்கள் குலத்திற்கு வேண்டிய மற்றக் காரியங்களையெல்லாம், அதாவது விளைவு காணல், நெசவு செய்தல் போன்ற சேவைகளைச் செய் தவன் சூத்திரன். இவற்றிலேது உயர்வு தாழ்வு? ஒழுக்கந் தான் உயர்வு தாழ்வுக்கு உரைகல். பண்பாடு ஒன்றே மனிதனின்மாண்புக்கும்மதிப்புக்கும்மாற்று. உயர்குலத்தவ

னென்று ஒருவன் தன்னைக் கூறிக்கொண்டு மது உண்டு மதிமயங்கித்திரிபவனே தீண்டாச்சாதியாவான். புறச் சுத்தத்தையாக்கும்ஒருவன் தோட்டிவேலை செய்பவனுயிருந்தாலும், மது மாமிசமற்றவனுய் ஆசார சீலம் உள்ளவனுய் நற்குணம் படைத்து இருப்பானுயின் அவனே உயர் குலத்தவனுவான். இந்த ரீதியில்ஆலயத்துள் பிரவேசிக்கத் தக்கவர் யார்? பிரவேசிக்கத் தகாதவர் யார்? என்று பகுத்தறிந்துபார்த்தால் தெள்ளிதிற் புலனுகும். எனவே மக்களுக்குச் செய்தொழிலால் உயர்வு தாழ்வு கற்பிக்காது அனைவரையும் தேவசந்நிதானத்திற்கு அழைத்துப் போவதே மேலானதாம். நாம் அனைவரும் கடவுளின் குழந்தைகள் என்பதை உணர்ந்து தெய்வீக வாழ்க்கை வாழ்ந்து வேற்றுமையின்றி ஒன்றுபட்டு இன்புறுவோமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம்

கலைவாணி அச்சகம், யாழ்ப்பாணம். 1014—63

புதுமுறைப்

பொது விஞ்ஞானம்

*

அரசினரின் UNESCO பாடத்திட்டத்தைத் தழுவி
எழுதப்பட்டவை.

*

இ. நாகராசன், B. A., B. Sc.

மிக விளக்கமாய், இலகுவான தமிழில் புதிய
கலைச் சொற்கள் சேர்த்துத்
தயாரிக்கப்பட்டவை.

*

| | | |
|---|---|---|
| 6 ஆம் வகுப்பு | — | 3-00 |
| 7 ஆம் ,, | — | 3-00 |
| 8 ஆம் ,, | — | 3-00 |

# GENERAL SCIENCE

FOR

## UNESCO SCHEME

**For Standard - VI, VII, VIII.**

*By*

T. R. NAGARAJAN, B. A., B. Sc.

---

KALAIVANI BOOK CENTRE

JAFFNA — KANDY

விவசாயத்துறையில் முன்னேறி
நாட்டை வளப்படுத்த வேண்டுமா?
இதோ

# ஒட்டோஸ்

ஸ்தாபனம் உங்கள் முயற்சிக்கேற்ற
உன்னதமான விவசாயக் கருவிகளை
வருவித்துள்ளது.

- தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களும்
- பூச்சி மருந்தடிக்கும் தெளி கருவிகளும்
- கிருமி நாசினி மருந்து வகைகளும்
- மண்வெட்டிகளும்
- கத்திகளும்

மற்றும்
எல்லாவித மின்சார இயந்திர உபகரணங்களும்
எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஒட்டோஸ் லிமிற்றெட்

யாழ்ப்பாணம் :: வவுனியா